உ

கணபதி துணை.

# பத்துப்பாட்டு மூலமும்

## மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியருரையும்.

**1102**

இவை

மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்ய கலாநிதி

உத்தமதானபுரம், வே. சாமிநாதையரால்

பரிசோதித்து,

பலவகை ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன்

LIBRARY

சென்னை:

கேசரி அச்சுக்கூடத்திற் பதிப்பிக்கப்பெற்றன.

[மூன்றாம் பதிப்பு]

பிரஜோத்பத்தி ௵ ஆவணி ௴.

*Copyright Registered*] 1931 [விலை ரூபா. 5.

நான்காவது

# பெரும்பாணாற்றுப்படை

அகலிரு விசும்பிற் பாயிருள் பருகிப்
பகல்கான் றெழுதரு பல்கதிர்ப் பருதி
காய்சினந் திருகிய கடுந்திறல் வேனிற்
பாசிலை யொழிந்த பராஅரைப் பாதிரி
வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்ததை
யுள்ளகம் புரையு மூட்டுறு பச்சைப்

---

* பெரும்பாணர் - குழலர் பாணர்முதலாய பெரிய இசைக்காரர்; (சில. 5 37. அடியார்.); "பெரும்பாணிருக்கையும்" (மது 342.)

1. எழுசீரடி பதின்மூன்றெழுத்தால்வந்ததற்கும் (தொல். செய். சூ 50 - இள), நேரும் நிரையுமொன்றி நேரொன்றாசிரியத்தளை நிரையொன்றாசிரியத்தளையுமாயதற்கும் (ஷை ஷை ஷை 56 - பேர். ந) இவ்வடி மேற்கோள்.

2. "பகலுங்கியதுபோலப் படுசுடர் கல்சேர" (கலி. 119 - ந.) என்பதற்கும், 'கதிர் காற்றியும் - கிரணங்களைக் கக்கியும்' (கல். செய் "நண்ணியபாதி" மயிலேறு.) எ - ம், 'கான்று என்னுமிடக்கர் அணிகுறிகதுப் பிறிதொரு பொருண்மேல் நிற்றலின் மறைக்கப்படாது; தன்பொருண்மேல் நின்றுழி மறைக்கப்படும்' (தொல். எச்ச. சூ. 47 - சே. ந, நன் - வி சூ 267; இ - வி. சூ. 168; நன். சூ. 267 - இராமாநுச) எ - ம் இது மேற்கோள்

1 - 2. அடியெதுகைக்கும் வழக்கொடுபட்ட மரபிறழவும் செய்யுளின் பம்படின் அவ்வாறு செய்க (தொல். செய். சூ 93, ஷை மர சூ 1 - உரை.) எ - ம், செய்தென்னும்வாய்பாடு செய்யாநினறெனச சிறுபான்மை நிகழ்காலப் பொருளிலும் வரும் (தொல். வினை சூ 31 - ந; இ - வி. சூ 246. கல். செய். "பாய்திரை", "கண்டகாட்சி" மயிலேறும்.) எ - ம், கட்டளையடிச்சீர்வகையடி தொடுத்த அடியெதுகைக்கும் (தொல். செய் சூ. 93 - ந.) சமாதியென்னுமலங்காரத்திற்கும் (தண்டி. பொது. 25; இ - வி சூ. 635) இவ்வடிகள் மேற்கோள். "வெயில்கான் றிருள்சிந்தெழுவெங்க சிர்ச்செல்வன்" (கூ. ரீம. இராவணவதை. 17). [illegible] இலக்கணைக்கு இவ்வடிகள் உதாரணமாகக்காட்டப்படும்; (நன். சூ. 269 - இராமாநுச.)

[illegible] ஒழிந்தபனவை.

[illegible]

[illegible]

[illegible]

பரியரைக் கமுகின் பாளையம் பசும்பூக்
கருவிருந் தன்ன கண்கூடு செறிதுளை
யுருக்கி யன்ன பொருத்துறு போர்வைச்
சுனைவறந் தன்ன விருடூங்கு வறுவாய்ப்
பிறைபிறந் தன்ன பின்னேந்து கவைக்கடை
நெடும்பணைத் திரடோண் மடந்தை முன்கைக்
குறுந்தொடி யேய்க்கு மெலிந்துவீங்கு திவவின்
மணிவார்ந் தன்ன மாயிரு மருப்பிற்
பொன்வார்ந் தன்ன புரியடங்கு நரம்பின்
றொடையமை கேள்வி யிடவயிற் றழீஇ
வெந்தெறற் கனலியொடு மதிவலந் திரிதருந்
தண்கடல் வரைப்பிற் றாங்குநர்ப் பெறாது
பொழிமழை துறந்த புகைவேப் குன்றத்துப்
பழுமரந் தேரும் பறவை போலக்
கல்லென் சுற்றமொடு கால்கிளர்ந்து திரிதரும்
புல்லென் யாக்கைப் புலவுவாய்ப் பாண
பெருவறங் கூர்ந்த கானங் கல்லெனக்
கருவி வானந் துளிசொரிந் தாங்குப்

---

7. பா. பாளையின்பசும்பூ, பாளையின்பசுங்காய்.

8. பா. சிறுதுளை.

7 - 8. அன்ன, மெய்யுவமவுருபு; (தொல். உவம. சூ. 13 - இள. மேற்.)

9. ‘விசியுறுபோர்வை’ என்பதற்குத் தெரியாமற் போர்த்தபோர்வையெனப் பொருள்கூறி இவ்வடியைமேற்கோள்காட்டினர்; (சீவக. 559 - ந.)

10. வறுவாய்: பொருந. 12.

13. எய்க்குமென்பது, உவமவுருபு (தொல். உவம. சூ. 17 - இள) எ - ம், வினையுவமவுருபு (ஷை ஷை ஷை 12 - பேர்.) எ - ம் இது மேற்கோள்.

12 - 3. பொருந. 14 - 5; மலை. 21.

15 - 6. சிறுபாண். 34 - 5 ஆம் அடிகளின்குறிப்பைப்பார்க்க.

17. பா. வெங்கதிர்க்கனலி, வெந்திறற்கனலி.

18. பா. தண்கடல்வையத்து.

17 - 8. முக்காலத்துமுள்ள இயல்பையுடையபொருளை நிகழுங்காலத்து மெய்ந்நிலைப்பொதுச்சொல்லாற்சொல்லவேண்டும் (தொல். வினை. சூ. 43 - ந; இ - வி. சூ. 303.) என்பதற்கு இவை மேற்கோள்.

20. பொருந. 64 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

24. பா. துளிசொரிந்தாங்கு.

பழம்பசி கூர்ந்தவெம் மிரும்பே ரொக்கலொடு
வழங்கத் தவாஅப் பெருவள னெய்தி
வாலுளைப் புரவியொடு வயக்களிறு முகந்துகொண்
டியாமவ ணின்றும் வருது நீயிரு
மிருநிலங் கடந்த திருமறு மார்பின்
முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த்
திரைதரு மரபி னுரவோ னும்பன்
மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு
மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும்
வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி
னல்லது கடிந்த வறம்புரி செங்கோற்
பல்வேற் றிரையற் படர்குவி ராயிற்
கேளவ னிலையே கெடுகநின் னவல
மத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக்
கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக்
கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புல
முருமு முரறா தரவுந் தப்பா
காட்டுமாவு முறுகண் செய்யா வேட்டாங்
கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச்
சென்மோ விரவல சிறக்கநின் னுள்ளங்
கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து
முழவி னன்ன முழுமர வுருளி
யெழூஉப்புணர்ந் தன்ன பரூஉக்கை நோன்பார்
மாரிக் குன்ற மழைசுமந் தன்ன
வாரை வேய்ந்த வறைவாய்ச் சகடம்

---

25. பா. என்னிரும்பேர்.
28. ஒ. சிறுபாண். 143; மலை. 53.
27 - 8. சிறுபாண். 142 - 3 ஆம் அடிகளின் குறிப்பைப்பார்க்க.
30. பா. புறங்கடை.
33=பொருந. 54; ஒ. புறநா. 35 - அடி 4.
36. பா. அல்லவை.
38=மது. 208.
39 - 44. கருத்து: மலை. 17 - 8; சில. 12. 5 - 13.
50=ஒ. அகநா. 301 - அடி. 7. பா. வார்வைவேய்ந்த.

வேழம் காவலர் குரம்பை யேய்ப்பக்
கோழி சேக்குங் கூடுடைப் புதவின்
முளையெயிற் றிரும்பிடி முழந்தா ளேய்க்கும்
துளையரைச் சிறார றாங்கத் தூக்கி
நாடக மகளி ராடுகளத் தெடுத்த
விசிவீங் கின்னியங் கடுப்பக் கயிறுபிணித்துக்
காடி வைத்த கலனுடை மூக்கின்
மகவுடை மகடூஉப் பகடுபுறந் துரப்பக்
கோட்டிணர் வேம்பி னேட்டிலை மிடைந்த
படலைக் கண்ணிப் பரேரெறுழ்த் திணிதோண்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி
யெல்லிடை கழியுநர்க் கேம மாக
மலையவுங் கடலவு மாண்பய றருஉ
மரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்ஞாண்
வடிபுதை யரண மெய்திய படம்புக்குப்
பொருகணை தொலைச்சிய புண்டர் மார்பின்
விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள்
வரையூர் பாம்பிற் பூண்டுடன் றூங்கச்
சுரிகை நுழைந்த சுற்றுவீங்கு செறிவுடைக்
கருவி லோச்சிய கண்ணகன் எறுழ்த்தோட்
கடம்பமர் நெடுவே ளன்ன மீளி
யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர்
தடவுநிலைப் பலவின் முழுமுதற் கொண்ட

---

52. பா. கூட்டுடை.

60 - 61. மு நெடுநல். 31 - 2.

63 - 5. ஒழுகையும் உமணரும் : சிறுபாண். 55.

69. படம்புகுதல். முல்லை. 66.

73. "சுரிகையம்பூங்கச்சிடைக்கோத்துவாங்கி" (சீவக. 698. மேற்.)

75. கடம்பமர்நெடுவேள் : முருகு. 225 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க.

75 - 6. உவமையிற் பால்மயங்கியதற்கு இவை மேற்கோள்; (தொல். உவம. சூ. 6 - பேர்.)

சிறுதலைப் பெரும்பழங் கடுப்ப மிரியற்
புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத்
தணர்ச்செவிக் கழுதைச் சாத்தொடு வழங்கு
முல்குடைப் பெருவழிக் கவலை காக்கும்
வில்லுடை வைப்பின் வியன்காட் டியவி
னீளரை யிலவத் தலங்குசினை பயந்த
பூளையம் பசு[illegible]ரிந் தன்ன
வரிப்புற வணிலொடு கருப்பை யாடா
தியாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல்
வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக
ரீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை
மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி
யீன்பிண வொழியப் போகி நோன்கா
ழிரும்புதலை யாத்த திருந்துகணை விழுக்கோ
லுளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி
யிருநிலக் கரம்பைப் படுநீ றாடி
நுண்பு லடக்கிய வெண்ப லெயிற்றியர்

---

78. பா. கடுப்பநெறியல், கடுப்பமிரியல்.

79 - 80. பா. நோன்புறக்கணர்ச்செவி.

83. பா. நீள்வரை.

83 - 5. இலவங்காய் அணிலுக்கு உவமை. (சீவக. 1701.)

87. "கருவிநுதிகொணெறியிலையீந்து" (கல். செய். "பொருப்பு")

88. தொல். மரபு. சூ. 87 - உரை, மேற்.

87 - 8. பா. நெடுந்தோட்டீந்திலை, நெடுந்திடரீத்திலை

85 - 8. "ஈந்துமேய்ந்திடைக், கருப்பையாடாக்குடில்கஞல்வ" (ஆனைக் காப்பு. நாடு 102.)

83 - 8. (தொல். உவம. சூ. 34 - உரை, மேற்.)

89. மான்றோற்பள்ளி: "வரியதட் படுத்த சேக்கைத் தெரியிழை" (அகநா. 58 - 4.) மகவென்பது மக்களில் ஆண்பாலிளமைப்பெயர்: (தொல். மரபு. சூ. 23 - உரை, மேற்.)

88 - 9. ஈத்திலைவேய்ந்தகுரம்பை, தோற்பள்ளி: (மது. 310.)

90. பிணை உயர்திணைப்பெண்பான்மரபுப்பெயர்: (தொல். மரபு. சூ. 61 உரை, மேற்.)

93. பா. இடுநிலக்கரம்பை.

94. பா. நுண்புலடக்கிய.

பார்வை யாத்த பறைதாள் விளவி
னீழன் முன்றி னிலவுரற் பெய்து
குறுங்கா ழுலக்கை யோச்சி நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி
வாரா தட்ட வாடூன் புழுக்கல்
வாடாத் தும்பை வயவர் பெருமக
னோடாத் தானை யொண்டொழிற் கழற்காற்
செவ்வரை நாடன் சென்னிய மெனினே
தெய்வ மடையிற் றேக்கிலைக் குவைஇ நும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்
மானடி பொறித்த மயங்கதர் மருங்கின்
வான்மடி பொழுதி னீர்நசைஇக் குழித்த
வகழ்சூழ் பயம்பி னகத்தொளித் தொடுங்கிப்
புகழா வாகைப் பூவி னன்ன
வளைமருப் பேனம் வரவுபார்த் திருக்கு
மரைநாள் வேட்ட மழுங்கிற் பகனாட்
பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு
நெடுஞ்செவிக் குறுமுயல் போக்கற வளைஇக்
கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு
மருஞ்சுர மிறந்த வம்பர்ப் பருந்துபட

---

95. பா. பறைத்தாள்.

89 - 96. தொழிற்றன்மையணி: (தண்டி. பொருளணி. சூ. 3 மேற்.)

97. ஓச்சி - குத்தி; (பெரும்பாண். 118.)

100. பா. ஆறுதட்ட.

102. ஓடாத்தானை: "ஓடாததானையுருமுக்குரலோடையானை" (சீவக. 7); "ஓடாததானை நளனென் றுளனொருவன்" (நள. சுயம். 18.) பா. ஒண் பொறிக்.

104. இலை - மரத்துறுப்பினைச்சொல்லும்வாய்பாடு; (தொல். மரபு. சூ. 87 - உரை. ந. மேற்.)

103 - 5. ஒத்தகருத்து: மலை. 164 - 9.

107. பா. 'வானமடி' என்றும் கொள்ள இடமுண்டு.

110. பா. வினையெயிற்றேனவரவு.

117. பா. இறந்தவும்பர்.

வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி
வைந்நுதி மழுங்கிய புலவுவா யெஃகம்
வடிமணிப் பலகையொடு நிரைஇ முடிநாட்
சாபஞ் சார்த்திய கணைதுஞ்சு வியனக
ரூகம் வேய்ந்த வுயர்நிலை வரைப்பின்
வரைத்தேன் புரையுங் கவைக்கடைப் புதையொடு
கடுந்துடி தூங்குங் கணைக்காற் பந்தர்த்
தொடர்நா யாத்த துன்னருங் கடிநகர்
வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பைக்
கொடுநுகந் தழீஇய புதவிற் செந்நிலை
நெடுநுதி வயக்கழு நிரைத்த வாயிற்
கொடுவி லெயினர் குறும்பிற் சேப்பிற்
களர்வள ரீந்தின் காழ்கண் டன்ன
சுவல்விளை நெல்லின் செவ்வவிழ்ச் சொன்றி
ஞமலி தந்த மனவுச்சூ லுடும்பின்
வறைகால் யாத்தது வயின்றொறும் பெறுகுவிர்
யானை தாக்கினு மரவுமேற் செலினு
நீனிற விசும்பின் வல்லேறு சிலைப்பினுஞ்
சூன்மகண் மாறா மறம்பூண் வாழ்க்கை
வலிக்கூட் டுணவின் வாட்குடிப் பிறந்த
புலிப்போத் தன்ன புல்லணற் காளை
செந்நா யன்ன கருவிற் சுற்றமொடு
கேளா மன்னர் கடிபுலம் புக்கு
நாளா தந்து நறவுநொடை தொலைச்சி

---

121. பா. சாத்திய.

132. "மனவனைய மென்சூன் மடவுடும்பு" (சீவக. 2781.) ஞமலி, திசைச்சொல்: (தொல். மொழி. சூ. 31 - ந; இ - வி. சூ. 27 - மேற்.)

135. நீனிறவிசும்பு: (முருகு. 116; மலை. 1.)

134 - 6 அணங்கும் விலங்கும் பொருளாக அச்சம்பிறத்தல் இயல்பென் பதற்கு இவ்வடிகள்மேற்கோள்; (தொல். மெய்ப்பாடு. சூ. 8 - உரை.)

138. போத்தென்னும்பெயர் இளமைக்கும் ஆண்டாற்கும்முறையேயுரித்து: (தொல். மரபு. சூ. 24, 41 - உரை, மேற்.) பா. அணர்க்காளை.

139. பா. செந்நாய்.

141. நாளா: "நாளித்தண்பவர் நாளாமேயும்" (குறுந். 104.)

யில்லடு கள்ளின் றோப்பி பருகி
மல்லன் மன்றத்து மதவிடை கெண்டி
மடிவாய்த் தண்ணுமை நடுவட் சிலைப்பச்
சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சி வலன்வளையூஉப்
பகன்மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை
முரண்டலை கழிந்த பின்றை மறிய
குளகரை யாத்த குறுங்காற் குரம்பைச்
செற்றை வாயிற் செறிகழிக் கதவிற்
கற்றை வேய்ந்த கழித்தலைச் சாம்பி
னதளோன் றுஞ்சுங் காப்பி னுதள
நெடுந்தாம்பு தொடுத்த குறுந்தறி முன்றிற்
கொடுமுகத் துருவையொடு வெள்ளை சேக்கு
மிடுமுள் வேலி யெருப்படு வரைப்பி
னள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரன் மத்த மொலிப்ப வாங்கி
யாம்பி வான்முகி ழன்ன கூம்புமுகை
யுறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ

---

142. தோப்பி "தோப்பிக்கள்ளொடு துரூஉப்பலி கொடுக்கும்" (அகநா. 35 - அடி 9.) பா. தொப்பியென்றுங்கொள்ள இடமுண்டு.

143. மத (இ - வி. சூ 282 - மேற்.) விடை (முருகு. 232.) பா. விடைதெண்டி.

142 - 3. "நறவுந் தொடுமின விடையும் வீழ்மின" (புறநா. 262, 1). "செங்கண் மழவிடை கெண்டிச் சிலைமறவர். வெங்கண் மகிழ்ந்து விழவயர" (பெரும்பொருள்.)

146. பா. முனைதலையிருக்கை.

134 - 46 மறங்கடைகூட்டிய குடிநிலையென்னும் புறத்திணைத்துறைக்கு இவை மேற்கோள்; (தொல் புறத்திணை. சூ. 4 - இள.)

151 - 2. உதள் (தொல் மரபு சூ. 47 - உரை, மேற்.)

155. "புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்" (மலை. 448.)

156. "கடையலங் குரல வாள்வரி யுழுவை" (அகநா. 277 - 5); "இரும்புலிக் கிளர்ந்த கருங்கட் செங்காரு, நாட்டயிர் கடைகுரல் கேட்டொறும் வெருஉம்" (தொல். அகத் சூ. 41 - ந; நம்பி. சூ 182 - மேற்.); "தயிர்கடையு மோதைத், கொல்புலிமுழக்கமென்னவயின்றொறுங்குளிறும்" (நைடதம், நாட்டுப். 15.)

157 - 8. தயிர்க்குழிசி: "[illegible]" (கல். செய். "[illegible]")

நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மக
ளளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளா
ளெருமை நல்லான் கருநாகு பெறாஉ
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பி
னிருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்
தொடுதோன் மரீஇய வடுவாழ் நோனடி
விழுத்தண் டூன்றிய மழுத்தின் வன்கை
யுறிக்கா வூர்ந்த மறுப்படு மயிர்ச்சுவன்
மேம்பா லுரைத்த வோரி யோங்கிலைக்
கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட
பல்பூ மிடைந்த படலைக் கண்ணி
யொன்றம ருடுக்கைக் கூழா ரிடையன்
கன்றமர் நிரையொடு கானத் தல்கி
யந்நு ணவிர்புகை கமழக் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச்
செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலி
னின்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்
புல்லார் வியன்புலம் போகி முள்ளுடுத்
தெழுகா டோங்கிய தொழுவுடை வரைப்பிற்
பிடிக்கணத் தன்ன குதிருடை முன்றிற்
களிற்றுத்தாள் புரையுந் திரிமரப் பந்தர்க்

---

164. "நெய்விலைப்பசும்பொற்றேறும்" (சீவக. 488.)
165. நாகு: தொல். மரபு. சூ. 26, 62 - உரை, மேற்.
166. அகநா. 274; சீவக. 120.
174. பா. பன்மலரடுக்கிய, பன்மலர்மிடைந்த.
177. பா. புகைபிறப்ப.
179. 'தோட்ட' என்றும் கொள்ள இடமுண்டு.
183. பல்காற்பறவை: "மழலைப்பல்காற்பறவை" (பெருங். [illegible].28.)

குறுஞ்சாட் டுருளையொடு கலப்பை சார்த்தி
நெடுஞ்சுவர் பறைந்த புகைசூழ் கொட்டிற்
பருவ வானத்துப் பாமழை கடுப்பக்
கருவை வேய்ந்த கவின்குடிச் சீறூர்
நெடுங்குரற் பூளைப் பூவி னன்ன
குறுந்தாள் வரகின் குறளவிழ்ச் சொன்றிப்
புகரிணர் வேங்கை வீகண் டன்ன
அவரை வான்புழுக் கட்டிப் பயில்வுற்
றின்சுவை மூரற் பெறுகுவிர் ஞாங்கர்க்
குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை
யரிபுகு பொழுதி னிரியல் போகி
வண்ணக் கடம்பி னறுமல ரன்ன
வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற்
கறையணற் குறும்பூழ் கட்சி சேக்கும்
வன்புல மிறந்த பின்றை மென்றோன்
மிதியுலைக் கொல்லன் முறிகொடிற் றன்ன
கவைத்தா ளலவ னளற்றளை சிதையப்
பைஞ்சாய் கொன்ற மண்படு மருப்பிற்
காரேறு பொருத கண்ணகன் செறுவி
னுழாஅ நுண்டொளி நிரவிய வினைஞர்

---

188. பா. சாட்டுருளி.

190. பா. பாயமழை.

192. பா. நெடுங்காற்.

194 - 5. மலை. 434 - 6.

195 - 6. பா. அட்டிப் பயற்றின் தீஞ்சுவை மூரற்.

199. "வேழம், வறனுழுநாஞ்சில்போன் மருப்பூன்றிநிலஞ்சேர" (கலி. 8); "தூம்புடைத் தடக்கை வாயொடு துமிந்து, நாஞ்சி லொப்ப நிலமிசைப் புரள" (புறநா. 19.)

200. "உடுப்புமுகத்த கூர்ங்கொழுவி னுழுதுறச்செயல்" (கூர்ம. வருணர். 15.)

209. பா. பைஞ்சாய்.

211. பா. உழவுநுண்.

முடிநா றழுத்திய நெடுநீர்ச் செறுவிற்
களைஞர் தந்த கணைக்கா னெய்தற்
கட்கமழ் புதுப்பூ முனைஇன் முட்டிலை
முகைசூழ் தகட்ட விறழ்வாய் முள்ளிக்
கொடுங்கான் மாமலர் கொய்துகொண் டவணப்
பஞ்சாய்க் கோரை பல்லிற் சவட்டிப்
புணர்நார்ப் பெய்த புனைவினைக் கண்ணி
யீருடை யிருந்தலை யூரச் சூடிப்
பொன்காண் கட்டளை கடுப்பக் கண்பின்
புன்காய்ச் சுண்ணம் புடைத்த மார்பி
னிரும்புவடித் தன்ன மடியா மென்றோற்
கருங்கை வினைஞர் காதலஞ் சிறாஅர்
பழஞ்சோற் றமலை முனைஇ வரம்பிற்
புதுவை வேய்ந்த கவிகுடின் முன்றி
லவலெறி யுலக்கைப் பாடுவிறந் தயல
கொடுவாய்க் கிள்ளை படுபகை வெரூஉ
நீங்கா யாணர் வாங்குகதிர்க் கழனிக்
கடுப்புடைப் பறவைச் சாதி யன்ன
பைதற விளைந்த பெருஞ்செந் நெல்லின்
றூம்புடைத் திரடா ளுமிழ்த்த வினைஞர்
பாம்புறை மருதின் றோங்குசினை நீழற்
பலிபெறு வியன்கள மலிய வேற்றிக்
கணங்கொள் சுற்றமொடு கைபுனைந் தாடுந்
துணங்கையம் பூதந் துகிலுடுத் தவைபோற்
சிலம்பி வானூல் வலந்த மருங்கிற்

---

220. கண்பு: மது. 172. பா. சண்பின்.

220 - 21. இரட்டைக்கிளவி இரட்டைவழித்தாதற்கு மேற்கோள்; (தொல். உவம. சூ. 22 - உரை)

226. விறந்து: (தொல். உரி. சூ. 50 - சே. ந; இ - வி. சூ. 283 - மேற்.)

226 - 7. உலக்கையிடிக்குப் பறவைகள் அஞ்சல்; "பாசவலிடித்த பெருங்காழுலக்கைக், கடிதிடிவெரீஇய கமஞ்சூல்வெண்குருகு" (அகநா. 141.)

230. பா. செய்நெல்லின்.

229 - 30. "மென்செந்நெல்லி, னம்பணவளவை யுறைகுவித்தாங்குக், கடுந்தேறுறுகிளை மொசிந்தனதுஞ்சும்" (பதிற். 71)

234. பா. கைபுனைந்து.

குழூஉமலைப் போரின் மூழூஉறு மெழுக்கம்
பகடூர் பிழிந்த பின்றைத் துகடப
வையுந் துரும்பு நீக்கிப் பைதறக்
குடகாற் றெறிந்த குப்பை வடபாற்
செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றுந்
தண்பணை தழீஇய தளரா விருக்கைப்
பகட்டா வீன்ற கொடுநடைக் குழவிக்
கவைத்தாம்பு தொடுத்த காழூன் றல்கு
லேணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்பல் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லிற்
றச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நற்றே ருருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம் பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்
தமளித் துஞ்சு மழகுடை நல்லிற்
றொல்பசி யறியாத் துளங்கா விருக்கை
மல்லற் பேரூர் மடியின் மடியா
வினைஞர் தந்த வெண்ணெல் வல்சி
மனைவா ழளகின் வாட்டொடும் பெறுகுவிர்
மழைவிளை யாடுங் கழைவள ரடுக்கத்
தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன்
கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாஅங்
கெந்திரஞ் சிலைக்குந் துஞ்சாக் கம்பலை

---

239. பா. துரும்பும்போக்கி.

240 - 41. பொருந. 244.

242. மு. பொருந. 169.

243. பா. தளர்நடை.

243 - 4. முல்லை. 12.

248 - 9. "தச்சன்செய்த சிறுமாவையம், ஊர்ந்தின்புறாஅ ர... ளீர்த்தின்புறூஉ மிளையோர்" (குறுந். 61.)

256. அளகு - கோழி: (தொல். மரபு. சூ. 56 - உரை, பேர்.) பா. மனை யுறை.

259 - 60. "கரும்பினெந்திரங் களிற்றெதிர்பிளிற்றும்" (ஐங்குறு. 55), "இரும்பினன்ன ......... கரும்பெந்திரங்கள்" (திருவிளை. திருநகர. 11.)

விசய மடூஉம் புகைசூ ழாலைதொறுங்
கரும்பின் றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின்
வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத்
தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த
குறியிறைக் குரம்பைப் பறியுடை முன்றிற்
கொடுங்காற் புன்னைக் கோடுதுமித் தியற்றிய
பைங்காய் தூங்கும் பாய்மணற் பந்த
ரிளையரு முதியருங் கிளையுடன் றுவன்றிப்
புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச்
செவ்வரிக் கயலொடு பச்சிறாப் பிறழு
மையிருங் குட்டத்து மகவொடு வழங்கிக்
கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்குங்
கொடுமுடி வலைஞர் குடிவயிற் சேப்பி
னவையா வரிசி யங்களித் துழவை
மலர்வாய்ப் பிழாவிற் புலர வாற்றிப்
பாம்புறை புற்றிற் குரும்பி யேய்க்கும்
பூம்புற நல்லடை யளைஇத் தேம்பட
வெல்லையு மிரவு மிருமுறை கழிப்பி
வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி
தண்மீன் சூட்டொடு தளர்தலும் பெறுகுவிர்
பச்சூன் பெய்த சுவல்பிணி பைந்தோற்
கோள்வல் பாண்மகன் றலைவலித் தியாத்த
நெடுங்கழைத் தூண்டி னடுங்க நாண்கொளீஇக்
கொடுவா யிரும்பின் மடிதலை புலம்பப்
பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை
நீர்நணிப் பிரம்பி னடுங்குநிழல் வெரூஉ
நீத்துடை நெடுங்கயந் தீப்பட மலர்ந்த
கடவு ளொண்பூ வடைத லோம்பி
யுறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை

---

268. பா. கிளையுடன்குழீஇ.

286. பா. வடிதலை.

290. சிலப். 51 - அ. மேற்.

யகலிரு வானத்துக் குறைவி லேய்ப்ப
வரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி
முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கைக்
குறுந ரிட்ட கூம்புவிடு பன்மலர்
பெருநா ளமையத்துப் பிணையினிர் கழியின்
செழுங்கன் றியாத்த சிறுதாட் பந்தர்ப்
பைஞ்சே றெழுகிய படிவ நன்னகர்
மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்று
மறைகாப் பாள ருறைபதிச் சேப்பிற்
பெருநல் வானத்து வடவயின் விளங்குஞ்
சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
வளைக்கை மகடூஉ வயினறிந் தட்ட
சுடர்க்கடைப் பறவைப் பெயர்ப்படு வத்தஞ்
சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத்
துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து
கஞ்சக நறுமுறி யளைஇப் பைந்துணர்
நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த
தகைமாண் காடியின் வகைபடப் பெறுகுவிர்
வண்ட லாயமொ டுண்டுறைத் தலைஇப்
புனலாடு மகளி ரிட்ட பொலங்குழை
யிரைதேர் மணிச்சிர லிரைசெத் தெறிந்தெனப்
புள்ளார் பெண்ணைப் புலம்புமடற் செல்லாது
கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ யவன
ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட
வைகுறு மீனிற் பையயத் தோன்று
நீர்ப்பெயற் றெல்லைப் போகிப் பாற்கேழ்
வாலுளைப் புரவியொடு வடவளந் தரூஉ
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்

292 - 4. பலநிறமலர்களுக்கு இந்திரவில்; "சிலைத்தார்" (புறநா.10, 36.)
305. பா. பெயர்ப்படுபத்தம்.
318. பா. பையத்தோன்றும்.
319. பா. நீர்ப்பெயர்த்தெல்லை போகிப்பொற்கேழ்.

சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
னெல்லுழு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்கும்
கூழுடை நல்லிற் கொடும்பூண் மகளிர்
கொன்றை மென்சினைப் பனிதவழ் பவைபோற்
பைங்கா ழல்கு லுண்டுகி லுடங்க
மால்வரைச் சிலம்பின் மகிழ்சிறந் தாலும்
பீலி மஞ்ஞையி னியலிக் கால
தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை
வான்றோய் மாடத்து வரிப்பந் தசைஇக்
கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய
முத்த வார்மணற் பொற்கழங் காடும்
பட்டின மருங்கி னசையின் முட்டில்
பைங்கொடி நுடங்கும் பலர்புகு வாயிற்
செம்பூத் தூய செதுக்குடை முன்றிற்
கள்ளடு மகளிர் வள்ள நுடக்கிய
வார்ந்துகு சின்னீர் வழிந்த குழம்பி
னீர்ஞ்சே றாடிய விரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது
நெண்மா வல்சி தீற்றிப் பன்னாட்
குழிநிறுத் தோம்பிய குறுந்தா ளேற்றைக்
கொழுநிணத் தடியொடு கூர்நறாப் பெறுகுவிர்
வான மூன்றிய மதலை போல
வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி
விண்பொர நிவந்த வேயா மாடத்
திரவின் மாட்டிய விலங்குசுடர் ஞெகிழி
யுரவுநீ ரழுவத் தோடுகலங் கரையுந்
துறைபிறக் கொழியப் போகிக் கறையடிக்

---

325. பா. துன்னாது.

331. மகளிர் நடைக்கு மயில்நடை · முருகு. 205 - ஆம் அடிக்குறிப் பைப்பார்க்க.

334. பா. கைப்புனை. பைப்பய.

335. "மகளிர், பொலஞ்செய் கழங்கிற் றெற்றி யாடும்" (புறநா. 36.)

346. சீவக 1895 - மேற்.

349 - 51. "இலங்குநீர் வரைப்பிற் கலங்கரை விளக்கமும்" (சிலப். 6. 141.)

குன்றுறழ் யானை மருங்கு லேய்க்கும்
வண்டோட்டுத் தெங்கின் வாடுமடல் வேய்ந்த
மஞ்சண் முன்றின் மணநாறு படப்பைத்
தண்டலை யுழவர் தனிமனைச் சேப்பிற்
றாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்
வீழில் றாழைக் குழவித் தீநீர்க்
கவைமுலை யிரும்பிடிக் கவுண்மருப் பேய்க்குங்
குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழந்
திரளரைப் பெண்ணை நுங்கொடு பிறவுந்
தீம்பல் றார முனையிற் சேம்பின்
முளைப்புற முதிர்கிழங் கார்குவிர் பகற்பெயல்
மழைவீழ்ந் தன்ன மாத்தாட் கமுகின்
புடைசூழ் தெங்கின் முப்புடைத் திரள்கா
யாறுசெல் வம்பலர் காய்பசி தீரச்
சோறடு குழிசி யிளக விழூஉம்
வீயா யாணர் வளங்கெழு பாக்கத்துப்
பன்மர நீளிடைப் போகி நன்னகர்
விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த
வாடா வள்ளியின் வளம்பல தரூஉ
நாடுபல கழிந்த பின்றை நீடுகுலைக்
காந்தளஞ் சிலம்பிற் களிறுபடிந் தாங்குப்
பாம்பணைப் பள்ளி யமர்ந்தோ னாங்கண்
வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்க்
குறுங்காற் காஞ்சி சுற்றிய நெடுங்கொடிப்
பாசிலைக் குருகின் புன்புற வரிப்பூக்
காரகற் கூவியன் பாகொடு பிடித்த

---

357. குழவி ஓரறிவுயிரின் இளமைப்பெயர். (தொல். மரபு, சூ. 24 - உரை, மேற்.)

363. "மேகமேய்க்கு மிளங்கமுகம்பொழில்" (தே. பிரமபுரம், செய். "விளங்கயனூர்")

370. "வாடாவள்ளியங்காடு" (குறுந். 216); "வாடாவள்ளியவர்" (தொல். புறத்திணை. 5.)

374. (மு. மணி. 4 : 5); "கதிர்நுழைகல்லா மரம்பயில்கடிமிளை" (புறநா. 21.)

377. சிலப். 5 : 24 - அடியார். மேற்.

வளைசூழ் வட்டம் பால்கலந் தவைபோ
னிழறாழ் வார்மண னீர்முகத் துறைப்பப்
புனல்கால் கழீஇய பொழிலொறுந் திரள்காற்
சோலைக் கமுகின் சூல்வயிற் றன்ன
நீலப் பைங்குடந் தொலைச்சி நாளும்
பெருமகி ழிருக்கை மரீஇச் சிறுகோட்டுக்
குழவித் திங்கட் கோணேர்ந் தாங்குச்
சுறவுவா யமைத்த சுரும்புசூழ் சுடர்நுத
னறவுபெயர்த் தமைத்த நல்லெழின் மழைக்கண்
மடவரன் மகளிரொடு பகல்விளை யாடிப்
பெறற்கருந் தொல்சீர்த் துறக்க மேய்க்கும்
பொய்யா மரபிற் பூமலி பெருந்துறைச்
செவ்விகொள் பவரோ டசைஇ யவ்வயி
னருந்திறற் கடவுள் வாழ்த்திச் சிறிதுநுங்
கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்
காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ
நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங்
கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற்
களிறுகத னடக்கிய வெளிறில் கந்திற்
றிண்டேர் குழித்த குண்டுநெடுந் தெருவிற்
படைதொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க்
கடைகால் யாத்த பல்குடி கெழீஇக்
கொடையுங் கோளும் வழங்குநர்த் தடுத்த
வடையா வாயின் மிளைசூழ் படப்பை
நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றிச்

---

380. "புனல்கால் கழீஇய மணல்வார் புறவு" (மலை. 48.)

390. பா. கொள்பவரோடும்

392. நன். சூ. 350 - மயிலை; நன் - வி சூ 351 - மேற்.

394. "நெய்ம்மலி கவளங்கொள்ளா" (சீவக 1076.); "நெய்ம்மிதி கவளந் தெவிட்டியின் றடாக்கு கிழல்களி தறுகண்மால் யானை". "கைம்முகக் கெடுத்த நெய்ம்மிதி கவளங் களித்தெறி மும்மதக் களிறு" (கூர்ம. சூரியன் மரபு. 8, 22) பா. நெய்மிதி.

402. "நீனிறவுருவினெடியோனும்" (புறநா. 58 - 15.)

402 - 4. முருகு. 164 - 5.

சுடும ணோங்கிய நெடுநகர் வரைப்பி
னிழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக்
கொழுமென் சினைய கோளி யுள்ளும்
பழமீக் கூறும் பலாஅப் போலப்
புலவுக் கடலுடுத்த வானஞ் சூடிய
மலர்தலை யுலகத் துள்ளும் பலர்தொழ
விழவுமேம் பட்ட பழவிறன் மூதூ
ரவ்வாய் வளர்பிறை சூடிச் செவ்வா
யந்தி வானத் தாடுமழை கடுப்ப
வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப
வீரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தே
ராராச் செருவி னைவர் போல
வடங்காத் தானையோ டுடன்றுமேல் வந்த
வொன்னாத் தெவ்வ ருலைவிடத் தார்த்துக்
கச்சி யோனே கைவண் டோன்ற
லச்சிச் சென்றோர்க் கேம மாகிய
வளியுந் தெறலு மெளிய வாகலின்
மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட
நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப
நட்புக்கொளல் வேண்டி நயந்திசி னோருந்
துப்புக்கொளல் வேண்டிய துணையி லோருங்

405. பா. நெடுமதில்வரைப்பு.

102 - 5. “மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப், பூவொடு புரையுஞ் சீறூர் பூவி, னிதழகத் தனைய தெருவே யிதழகத், தரும்பொகுட் டனையதே யண்ணல் கோயில்” (பரிபாடல்); இராசகிரியநகரத்தைத் தாமரைமலராகவும் அந்நகரின் உறுப்புக்களை அம்மலரின் உறுப்புக்களாகவும் (பெருங்கதையில் 50 - அடிகளாற் கூறியிருத்தல் இங்கே அறிந்து மகிழத்தக்கது; (3 - மகத காண்டம், 3 - இராசகிரியம்புக்கது.)

407. பா. சினைஇய.

415. “ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழிய” (புறநா. 2.)

419. மூ. மலை. 386.

421. பா. ஏமமாக.

422. பா. அளியுந்தெறலுந்தனக்கெளிய.

423 - 4. கருத்து: “நீ உடன்றுநோக்கும் வாய்பெரிதவழ, நீ நயந்து நோக்கும் வாய்பொன்பூப்ப” (புறநா. 38.)

கல்வீ ழருவி கடற்படர்ந் தாங்குப்
பல்வேறு வகையிற் பணிந்த மன்ன
ரிமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை
வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப்
பொன்கொழித் திழிதரும் போக்கருங் கங்கைப்
பெருநீர் போகு மிரியன் மாக்க
ளொருமரப் பாணியிற் றூங்கி யாங்குத்
தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇச்
செவ்வி பார்க்குஞ் செழுநகர் முற்றத்துப்
பெருங்கை யானைக் கொடுந்தொடி படுக்குங்
கருங்கைக் கொல்ல னிரும்புவிசைத் தெறிந்த
கூடத் திண்ணிசை வெரீஇ மாடத்
திறையுறை புறவின் செங்காற் சேவ
லின்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர்க்
குணகடல் வரைப்பின் முந்நீர் நாப்பட்
பகல்செய் மண்டிலம் பாரித் தாங்கு
முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும்
வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி
யிடைத்தெரிந் துணரு மிருமுர் காட்சிக்
கொடைக்கட னிறுத்த கூம்பா வுள்ளத்
துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப்
பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான்
கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப்
புலவர் பூண்கட னாற்றிப் பகைவர்
கடிமதி லெறிந்து குடுமி கொள்ளும்

428. மலை. 52.

429. பா. இமையோர்.

432. பா. நீர்ப்போகும்.

443 - 5. ‘முறைவேண்டினோர்க்கும் குறைவேண்டினோர்க்கும் காண்டற் கெளியனாய்’ (குறள், 386 - பரி); “முறைவேண்டுபொழுதிற் பதனெளியோர்” (புறநா. 35 - 15.)

445. பா. இடைத்தெரிந்து.

446. “கொடைக்கடனிறுத்தசெம்மலோய்” (மலை. 543); “கொடைக் கடனிறுக்குமிக்குவாகுப்பெயர்ப்பெரியோன்” (சூ. ரீம. குரியன்மரபு. 8.)

447. “உரும்பில்கூற்றத்தன்ன” (பதிற். 26 - 13.)

வென்றி யல்லது வினையுடம் படினு
மொன்றல் செல்லா வுரவுவாட் டடக்கைக்
கொண்டி யுண்டித் தொண்டையோர் மருக
மன்னர் மன்ன மறவர் மறவ
செல்வர் செல்வ செருமேம் படுந
வெண்டிரைப் பரப்பிற் கடுஞ்சூர் கொன்ற
பைம்பூட் சேஎய் பயந்தமா மோட்டுத்
துணங்கையஞ் செல்விக் கணங்குநொடித் தாங்குத்
தண்டா வீகைநின் பெரும்பெய ரேத்தி
வந்தேன் பெரும வாழிய நெடிதென
விடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பிக்
கடனறி மரபிற் கைதொழூஉப் பழிச்சி
நின்னிலை தெரியா வளவை யந்நிலை
நாவலந் தண்பொழில் வீவின்று விளங்க
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
யந்நிலை யணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
யாவி யன்ன வயிர்நூற் கலிங்க
மிரும்பே ரொக்கலொ டொருங்குட னுடீஇக்
கொடுவாள் கதுவிய வடுவாழ் நோன்கை
வல்லோ னட்ட பல்லூன் கொழுங்குறை
யரிசெத் துணங்கிய பெருஞ்செந் நெல்லின்
றெரிகொ ளரிசித் திரணெடும் புழுக்க
லருங்கடித் தீஞ்சுவை யமுதொடு பிறவும்
விருப்புடை மரபிற் கரப்புடை யடிசின்

---

455 - 6. இடையினவெதுகை : (தொல். செய். சூ 63 - உரை, மேற்.)

457. கடலிற்சூர்கொன்றமை: (பதிற். 11 - பார்க்க.)

454 - 8. ‘தொண்டையோர்மருக ........ சேஎய்’ என்றாற்போல்வன எகாரத்தாற்பொருள்கூறுமாறு உணர்க; (தொல். விளி. சூ. 34 - ந. மேற்.)

459. “பெருங்காட்டுக்கொற்றிக்குப் பேய்நொடித்தாங்கு” (கலி. 89.) பா. நொடித்தாங்கு.

458 - 9. முருகு. 259.

461 முருகு. 285. பா. வாழியபெரிதென.

466. மு. பொருந. 176. பா. நிலைமைநோக்கி.

468 - 70. பொருந. 153 - 5.

475. பா. அமிசொடுபிறவும்.

மீன்பூத் தன்ன வான்கலம் பரப்பி
மகமுறை மகமுறை நோக்கி முகனமர்ந்
தாஅ விருப்பிற் றானின் றூட்டி
மங்குல் வானத்துத் திங்க ளேய்க்கு
மாடுவண் டிமிரா வழலவிர் தாமரை
நீடிரும் பித்தை பொலியச் சூட்டி
யுரவுக்கடன் முகந்த பருவ வானத்துப்
பகற்பெயற் றுளியின் மின்னுமிழ்ந் தாங்குப்
புனையிருங் கதுப்பகம் பொலியப் பொன்னின்
றொடையமை மாலை விறலியர் மலைய
நூலோர் புகழ்ந்த மாட்சிய மால்கடல்
வளைகண் டன்ன வாலுளைப் புரவி
துணைபுணர் தொழில நால்குடன் பூட்டி
யரித்தேர் நல்கியு மமையான் செருத்தொலைத்
தொன்னாத் தெவ்வ ரிலைவிடத் தொழித்த
விசும்புசெ லிவுளியொடு பசும்படை தரீஇ
யன்றே விடுக்குமவன் பரிசி லின்சீர்க்
கின்னர முரலு மணங்குடைச் சாரன்
மஞ்ஞை யாலு மரம்பயி லிறும்பிற்
கலைபாய்ந் துதிர்த்த மலர்வீழ் புறவின்

---

478 - 9. மகமுறை: சிறுபாண். 192; மலைபடு. 185.

479. மு: சிறுபாண். 245.

481. "ஆடுவண் டிமிராத் தாமரை" (புறநா. 69.)

481 - 2. "வாடாமிஞிறிமிராமுடிமாலை" (தக்க. 557) என்பதற்கு இவை மேற்கோள். பா. அழலிவர். பித்தை சிகைவிப்பசகுடி

483. பா. புலவுக்கடல்.

486. பா. விறலியர்வேய.

485 - 6. "வாடாமாலை பாடினி யணிய" (புறநா. 364 - 1.)

489. நால்கு - நான்கு; "நால்குபண்ணினூர்" (சீவக. 1774.)

491. பா. ஒழிந்த.

492. பா. விசும்புதோயிவுளி.

490 - 92. சிறுபாண். 246 - 8.

494. "பாடுகின்றனகின்னரமிதுனங்கள்பாராய்" (கம்ப. சித்திரகூட. 12.)

496. பா. மலர்சூழ்.

மந்தி சீக்கு மாதுஞ்சு முன்றிற்
செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டுக்
களிறுதரு விறகின் வேட்கு
மொளிறிலங் கருவிய மலைகிழ வோனே.

## இதன்பொருள்.

1. அகல் இரு விசும்பில் பாய் இருள் பருகி—தன்னையொழிந்த நான்கு பூதமும் தன்னிடத்தே அகன்று விரிதற்குக் காரணமாகிய பெரிய ஆகாயத்திடத்தே தோன்றிப் பரந்த *இருளை விழுங்காநின்று,

அகலிருவிசும்பென்பது. †"நோய்தீருமருந்து" போனின்றது. பருகி யென்னுஞ் செய்தெனெச்சம் நிகழ்காலம் உணர்த்திநின்றது.

2. பகல் கான்று எழுதரு பல் கதிர் பருதி—மறைந்த பகற்பொழுதை உலகத்தேதோற்றுவித்து எழுதலைசெய்யும் பலகிரணங்களையுடைய கனலி,

3. காய் சினம் திருகிய கடு திறல் வேனில்—கோபிக்கின்ற சினமுறுகிய கடிய வலியையுடைய முதுவேனிற்காலத்தே,

4. பசு இலை ஒழித்த பரு அரை பாதிரி—பின்பனிக்காலத்தே பசிய இலைகளையுதிர்த்த பரிய தாளினையுடைய பாதிரியினது,

5 - 6. வள் இதழ் மா மலர் வயிறு இடை வகுத்ததன் உள் அகம் புரையும் ஊட்டுறு பச்சை—பெருமையையுடைய இதழையுடைத்தாகிய வண்மையுடைய பூவினுடைய வயிற்றிடத்தைப்பிளந்த ‡புலாலினுடைய உள்ளிடத்தையொக்கும் நிறமூட்டுதலுற்ற தோல்.

7 - 8. பரிய அரை கமுகின் பாளை அம் பசு பூ கரு இருந்தன்ன கண் கூடு செறி துளை—பரிய தாளினையுடைய கமுகினது பாளையாகிய அழகினையுடைய பசியபூ விரியாமற் கருவாயிருந்தாலொத்த இரண்டுகண்ணுங்கூடின செறிந்த துளை,

9. உருக்கி அன்ன பொருத்துறு போர்வை—உருக்கி ஒன்றாக வார்த்தாற்போன்ற தோல்களின் வேறுபாடுதெரியாமல் இசைத்தலுறும் போர்வையினையும்,

பச்சைப்போர்வை; பொருத்துறுபோர்வை; துளையினையுடையபோர்வை.

---

500. மலைகிழவோன்: முருகு. 317 - ஆம் அடிக்குறிப்பைப்பார்க்க. நன். சூ. 104 - மயிலை. மேற்.

497 - 500. "யானை தந்த முளிமர விறகிற், கானவர் பொத்திய ஞெலிதீ விளக்கத்து, மடமான் பெருநிரை வைகுதுயி லெடுப்பி, மந்தி சீக்கு மணங்குடை முன்றில்", "கானயானை தந்தவிறகின், கடுந்தெறற் செந்தீவேட்டு" (புறநா. 247. 251.)

* பி - ம். இருளைமறைத்து.

† கலித்தொகை, 60.

‡ பி - ம். பூவினுடைய.

10. சுனை வறந்தன்ன இருள் தூங்கு வறு வாய்—சுனை வற்றி உள்இருண்டாலொத்த இருள்செறிந்த உண்ணுக்கினையில்லாத வாயினையும்,

11. பிறை பிறந்தன்ன பின் ஏந்து கவை கடை—முதற்பிறை பிறந்து ஏந்தியிருந்தாற்போன்ற பிற்பு ஏந்தியிருக்கின்ற கவைத்தலையுடைய கடையினையும்,

12 - 13. நெடு பணை திரள் தோள் மடந்தை முன் கை குறு தொடி ஏய்க்கும் மெலிந்து வீங்கு திவவின்—நெடிய மூங்கிலையொத்த திரண்ட தோளினையுடைய மகளுடைய முன்கையிற் குறிய தொடியையொக்கும் நெகிழ வேண்டியவழிநெகிழ்ந்து இறுகவேண்டியவழியிறுகும் வார்க்கட்டினையும்,

14. மணி வார்ந்தன்ன மா இரு மருப்பின்—நீலமணி ஒழுகினாலொத்த கருமைநிறத்தையுடைய பெரிய தண்டினையுமுடைய,

15 - 6. பொன் வார்ந்து அன்ன புரி அடங்கு நரம்பின் தொடை அமை கேள்வி—பொன் கம்பியாய் ஒழுகினாலொத்த முறுக்கடங்கின நரம்பின் கட்டமைந்த யாழை,

கேள்வி, ஆகுபெயர்.

போர்வையினையும் (9) வாயினையும் (10) கடையினையும் (11) திவவினையும் (13) மருப்பினையுமுடைய யாழையெனமுடிக்க.

16. இடம் வயின் தழீஇ--இடத்தோட்பக்கத்தே அணைத்து,

17. வெவ் தெறல் கனலியொடு மதி வலம் திரிதரும்—வெய்ய தெறுதற்றொழிலையுடைய ஞாயிற்றோடே திங்களும் மேருவை வலமாகத் திரிதலைச் செய்யும்,

18. தண் கடல் வரைப்பில் தாங்குநர் பெறாது—குளிர்ந்த கடல்சூழ்ந்த உலகில் நின்னைப் புரப்பாரைப் பெறாமல்,

19. பொழி மழை துறந்த புகை வேய் குன்றத்து—பெய்கின்ற மழை துறத்தலால் நிலத்தின்கண்ணெழுந்த ஆவிசூழ்ந்த மலையிடத்தே,

20. *பழு மரம் தேரும் பறவை போல—பழுத்த மரத்தைத் தேடித் திரியும்பறவைகளைப்போல,

21. கல்லென் சுற்றமொடு கால் கிளர்ந்து திரிதரும்--பசிமிகுதியால் அழுகின்ற சுற்றத்தாருடனே ஓரிடத்திராமற் பயனின்றி ஓடித் திரிதலைச் செய்யும்,

22. புல்லென் யாக்கை புலவு வாய் பாண—பொலிவழிந்த வடிவினையும் கற்ற கல்வியை வெறுத்துக்கூறுகின்ற வாயினையுமுடைய பாண,

† "சில்செவித் தாகிய கேள்வி நொந்து" என்றார் பிறரும்; புலால் நாறுகின்ற வாயுமாம்.

கேள்வியைத் தழீஇத் (16) தாங்குநர்ப்பெறாது (18) குன்றத்தே (19) கடுந்திறல் வேனிற்காலத்தே (3) பறவைபோலத் (20) திரிதரும் பாணவென முடிக்க.

---

* "பட்டபயில் பழுமரப் பொலிவிற்று" (சீவக. 93.)

† புறநானூறு, 68.

23 - 4. பெரு வறம் கூர்ந்த கானம் கல்லென கருவி வானம் துளி சொரிந்தாங்கு — பெரிய *வற்கடமிக்க காடு உழவுந்தொழில் முதலியவற்றால் ஆரவாரிக்கும்படி தொகுதியையுடைய மேகம் துளியைச் சொரிந்தாற் போல,

25 - 6. பழ பசி கூர்ந்த எம் இரு பெரு ஒக்கலொடு வழங்க தவாஅ பெரு வளன் எய்தி — தொன்றுதொட்டு பசிமிக்க எம்முடைய கரிய பெரிய சுற்றத்தோடே யாங்கள் பிறர்க்குக்கொடுக்கவும் மாளாத பெரிய செல்வத்தைப் பெற்று,

27 - 8. வால் உளை புரவியொடு வய் களிறு முகந்துகொண்டு யாம் அவணின்றும் வருதும் — வெள்ளிய தலையாட்டத்தையுடைய குதிரையோடே வலியினையுடைய யானைகளையும் வாரிக்கொண்டு யாம் அவனூரினின்றும் வாரா நின்றேம்;

28. நீயிரும் — நீங்களும்,

29 - 37. [இருநிலங் கடந்த திருமறு மார்பின், முந்நீர் வண்ணன் பிறங்கடை யந்நீர்த், திரைதரு மரபி னுரவோ னும்பல், மலர்தலை யுலகத்து மன்னுயிர் காக்கு, முரசுமுழங்கு தானை மூவ ருள்ளு, மிலங்குநீர்ப் பரப்பின் வளைமீக் கூறும், வலம்புரி யன்ன வசைநீங்கு சிறப்பி, னல்லது கடிந்த வறம்புரி செங்கோற், பல்வேற் றிரையற் படர்குவி ராயின் :]

மலர் தலை உலகத்து மன் உயிர் காக்கும் முரசு முழங்கு தானை மூவருள்ளும் — அகன்ற இடத்தையுடைய உலகத்தில் நிலைபெற்ற உயிர்களைப்புரக்கும் முரசுமுழங்குகின்ற நாற்படையினையுமுடைய சேரசோழபாண்டியரென்னுமூவரினும்,

இலங்கு நீர் பரப்பின் வளை மீ கூறும் வலம்புரி அன்ன வசை நீங்கு சிறப்பின் — விளங்குகின்ற நீரையுடைய கடலிடத்துப்பிறந்த சங்கில் மேலாக உலகங்கூறும் வலம்புரிச்சங்கையொத்த குற்றநீங்குந் தலைமையினையும்,

அல்லது கடிந்த அறம் புரி செங்கோல் — மறத்தைப்போக்கின அறத்தை விரும்பின செங்கோலினையுமுடைய,

இரு நிலம் கடந்த †திரு மறு மார்பின் முந்நீர் வண்ணன் பிறங்கடை உரவோன் உம்பல் — பெரிய நிலத்தையளந்த திருவாகிய மறுவையணிந்த மார்பினையுடைய கடல்போலுநிறத்தையுடையவன் பின்னிடத்தோன்றிய சோழன் குடியிற்பிறந்தோன்,

மூவருள்ளுஞ் சிறப்பினையும் செங்கோலினையுமுடைய உரவோனென்க.

‡ திருமால்குடியிற்றோன்றிய உரவோன்.

அந்நீர் திரை தரு மரபின் பல் வேல் திரையன் — அக்கடலின் திரை கொண்டுவந்து ஏறவிட்டமரபால் பலவேற்படையினையுடைய திரையனென்னும் பெயரையுடையவன்,

---

* பி - ம். வறட்காலமிக்க.

† "திருமறுமார்ப நீ யருளல்வேண்டும்" (பரிபாடல், 1.)

‡ திருமாலென்றது, இராமபிரானை.

என்றதனால், நாகபட்டினத்துச் சோழன் பிலத்துவாரத்தால் நாகலோகத்தே சென்று நாககன்னியைப்புணர்ந்தகாலத்து அவள் யான்பெற்றபுதல்வனை என்செய்வேனென்றபொழுது, தொண்டையை அடையாளமாகக்கட்டிக் கடலிலேவிட அவன்வந்து கரையேறின் அவற்கு யான் அரசவுரிமையை எய்துவித்து நாடாட்சி கொடுப்பலென்று அவன்கூற, அவளும் புதல்வனை அங்ஙனம் வரவிடத் திரைதருதலின், திரையனென்று பெயர்பெற்றகதை கூறினார்.

திரையன் படர்குவிராயின் நின் உள்ளம் சிறக்க—திரையனை நினைப்பீராயின் அவனை நினைத்தலின், நின் நெஞ்சு சிறப்புக்களைப்பெறுக;

சிறக்கநின்னுள்ள (45) மென மேல்வருவதனை இதனோடுங்கூட்டுக.

38. [கேளவ னிலையே கெடுகநின் னவலம் :]

நின் அவலம் கெடுக—நினது மிடி கெடுவதாக;

அவன் நிலை கேள்—அங்ஙனம் அவனை நினைத்துப்போகின்ற நீ *அவன் தன்மையைக் கேட்பாயாக;

39 - 41. [அத்தஞ் செல்வோ ரலறத் தாக்கிக், கைப்பொருள் வௌவுங் களவேர் வாழ்க்கைக், கொடியோ ரின்றவன் கடியுடை வியன்புலம் :] அவன் கடி உடை வியல் புலம் அத்தம் செல்வோர் அலற தாக்கி கை பொருள் வௌவும் களவு ஏர் வாழ்க்கை கொடியோர் இன்று—அவனுடைய காவலையுடைத்தாகிய அகலத்தையுடைய நிலம், வழிப்போவாரைக் கூப்பிடும்படி வெட்டி அவர்கள் கையிலுள்ள பொருள்களைக் கைக்கொள்ளும் களவே உழவு போலும் இல்வாழ்க்கைப் பொருளாகவுடைய கொடுமையையுடையோரில்லை;

42 - 3. உருமும் உரறாது அரவும் தப்பா காடு மாவும் உறுகண் செய்யா—உருமேறும் இடியாது; பாம்புகளும் கொல்லுதலைச்செய்யா; காட்டிடத்துப் புலிமுதலியனவும் வருத்தஞ்செய்யா; ஆகலின்,

இஃது அவனாணை †கூறிற்று.

43 - 5. [வேட்டாங், கசைவுழி யசைஇ நசைவுழித் தங்கிச் சென்மோ :]

ஆங்கு அசைவுழி அசைஇ—அக்காட்டின்கண் இளைத்தவிடத்தே இளைப்பாறி.

நசைவுழி வேட்டு தங்கி சென்மோ — எங்களிடத்தே நீதங்கிப்போக வேண்டுமென்று நச்சினவிடத்தே நீயும் அதற்கு விரும்பித் தங்கிச் செல்வாயாக.

45. இரவல—இரத்தற்றொழிலை வல்லோய்.

45 - 7. [சிறக்கநின் னுள்ளம், கொழுஞ்சூட் டருந்திய திருந்துநிலை யாரத்து, முழவி னன்ன முழுமர வுருளி :]

* பி - ம். அவ்வழியை அவன்தன்மையை.

† பி - ம். கூறினன்.

முழவின் அன்ன முழுமரம் திருந்து இலை ஆரத்து கொழு சூட்டு அருக்கிய உருளி—மத்தளத்தையொத்த குறட்டிடத்தேதைத்த செல்கின்ற தன்மையையுடைய ஆரிடத்தே நன்றாகி விளைந்தமரம் சூழ்ந்து இடைக்கப்பட்ட உருளையையும்,

அச்சுக்கோக்கின்ற இடமுமாம். அக்குறட்டிலே தைத்துக்கிடக்கின்றது ஆர். சூட்டு - விளிம்பில் வைத்த விளைந்த மரம்.

48. எழூஉ புணர்ந்தன்ன பரூஉ கை நோன் பார்—கணையமரம் இரண்டு சேர்ந்தாலொத்த பருத்த கைகளையுடைய வலிய பாரையுமுடைய,

அச்சுமரத்தின்மேலே நெடியவாய் இரண்டு பக்கத்தும் நெடுகக்கிடக்கின்ற பருமரங்களைப் பரூஉக்கை யென்றார். அம்மரங்களிரண்டினையும் நெருங்கத் துளைத்துக் குறுக்கே எணிபோலக் கோத்ததனைப் பாரென்றார்.

49 - 50. [மாரிக் குன்ற மழை சுமந்தன்ன, வாரை வேய்ந்த வறை வாய்ச் சகடம்;]

குன்றம் மாரி மழை சுமந்தன்ன ஆரை வேய்ந்த அறை வாய் சகடம்—மலை மாரிக்காலத்து மேகத்தைச் சுமந்துநின்றாற் போன்ற *தொத்துளிப்பாயாலே வேய்ந்த ஒலிக்கின்ற வாயையுடைய சகடம்,

'ஆர்வை வேய்ந்த' என்று பாடமாயின் நிறைந்த வரகுவைக்கோலாலே வேய்ந்த வென்க.

அந்த இரண்டு மரத்திலும் கால்களைநட்டுக் குடிலாகக்கட்டி மேலே வசம்பு முதலியனவற்றைக் கயிற்றாலே கோத்தபாயெடுத்தலைக்கூறினர்.

உருளியையும், பாரையுமுடைய சகடமென்க.

51 - 52. வேழம் காவலர் குரம்பை எய்ப்ப கோழி சேக்கும் கூடு உடை புதவின்—யானையைப் புனத்தில் தின்னுமற் காக்கின்ற தொழிலையுடையார் இதண்மேலே கட்டின குடிலையொப்பச் சிறுகக்கட்டின கோழிகிடக்கும் கூட்டையுடைத்தாகிய குடிலின் வாசலிலே.

53 - 4. முளை எயிறு இரு பிடி முழந்தாள் எய்க்கும் துளை அரை சிறு உரல் தூங்க தூக்கி—மூங்கில் முளைபோலும் கொம்பினையுடைய கரிய பிடியினது முழந்தாளையொக்கும் துளையைத் தன்னிடத்தேயுடைய சிறிய உரலை அசையும்படி தூக்கி,

கோத்து நாற்றுதற்குத் துளையிடுதலின், 'துளையரைச் சிறுரல்' என்றார்

55 - 6. நாடகம் மகளிர் ஆடு களத்து எடுத்த விசி வீங்கு இன் இயம் கடுப்ப—நாடகமாடுமகளிர் ஆடுங்களத்தே கொண்டுவந்த வாராற்பிணித்தலிறுகின இனிய முழவை யொப்ப,

56 - 7. கயிறு பிணித்து காடி வைத்த கலன் உடை மூக்கின்—நகராதபடி கயிற்றாலே வரிந்து காடிவைத்த மிடாவையுடைய அப்பாரிற்றலையிலே,

---

* பி - ம். தொத்தளி, கொத்தளி.

புளியங்காய் நெல்லிக்காய் முதலியன ஊறவிட்டு வைத்ததனைக் காடி யென்றார்; இனிக்காடி செய்யென்பாருமுளர், இனிப் பாரிற் கழுத்தாணியிடத் தேணைத்த மிடாவென்றுமாம்.

58. மக உடை மகடூஉ பகடு புறம் துரப்ப—குழவியைக் கைக்கொண்ட மகளிருந்து பூண்ட எருத்தை முதுகிலேஅடிப்ப,

சகடப் (50) புதவின் (52) முக்கின்கண்ணே (57) வேப்பிலைமிடைந்த (59) மகடூஉ இருந்து துரப்பவெனமுடிக்க.

59. கோடு இணர் வேம்பின் ஒடு இலை மிடைந்த மகடூஉ (58)—கொம்பிடத்தே பூங்கொத்தையுடைய வேம்பினுடைய மேன்மையையுடைய இலையைப் பிள்ளைக்குக் காவலாகக்கொணடிருக்கின்ற மகடூஉ,

60. *படலை கண்ணி—தழைவிரவின மாலையையும்,

பரு ஏர் எறுழ் திணி தோள்—பரிய அழகினையும் வலியினையுமுடையு இறுகின தோளினையும்,

61. முடலை யாக்கை—முறுக்குண்ட உடம்பினையும,

முழு வலி மாக்கள்—நிரம்பிய மெய்வலியினையுமுடையமாக்கள்,

62 - 3 [சிறு துளைக் கொடுநுகம் நெறிபட நிரைத்த பெருங்கயிற் றொழுகை] சிறு துளை கொடு நுகம் பெரு கயிறு நெறிபட நிரைத்த ஒழுகை—சிறிய துளையினையுடைய கொடிய நுகத்தின்கணணே பெரியகயிற்றாலே எருதுகளை ஒருவழிப்பட நிரைத்துக்கட்டின சகடவொழுங்கினை,

துளைகளிற் செருகினகழிகள் கழுத்தசையப் பட்டுநிற்றலின், கொடுநுக மென்றார். ஒருசகடத்திற் பலபூட்டுதல் கூறினார்

63. மருங்கில் காப்ப—எருதுகள்திருகாமல் அச்சுமுறியாமற் பக்கத்தே சாத்துச்செல்ல,

64. சில் பத உணவின்—இடப்படும் பொருள்களுக்குச் சிறியவாக இடப்படுமுணவினது.

என்றது உப்பை. பதம் - பக்குவம்.

கொள்ளை சாற்றி—விலைசொல்லி,

65. பல் எருது உமணர் பதி போகு நெடு நெறி—இளைத்தாற்பூட்டுதற்குப பல எருத்தையும்அடித்துக்கொண்டுபோம் உப்புவாணிகர் ஊர்களதோறும செல்லும் நெடிய வழியினையும்,

பதிபோலப் போகுமென்றுமாம்.

மகடூஉத்துரப்ப மாக்கள் காப்பச் சாற்றிப்போம் நெடுநெறியையுமென்க.

66. எல் இடை கழியுநர்க்கு ஏமம் ஆக—பகற்பொழுதுபோவார்க்கு இளைப்புத்தீர,

* "முறி மிடை படலை மாலை" (சீவக. 188௪.)

67 - 76. [மலையவுங் கடலவு மாண்பயன் றரூஉ, மரும்பொரு ளருத்துந் திருந்துதொடை நோன்ற, ளடிபுதை யரண மெய்திப் படம்புக்குப், பொருகணை தொலைச்சிய புண்டீர் மார்பின், விரவுவரிக் கச்சின் வெண்கை யொள்வாள், வரையூர் பாம்பிற் பூண்டுபுடை தூங்கச், சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவுடைக், கருவி லோச்சிய கண்ணக னெறுழ்த்தோட், கடம்பமர் நெடுவே ளன்ன மீளி, யுடம்பிடித் தடக்கை யோடா வம்பலர் :]

மலையவும் கடலவும் மாண் பயன் தரூஉம் அரு பொருள் அருத்தும் ஓடா வம்பலர்—மலையிலுள்ளனவும் கடலிலுள்ளனவுமாகிய மாட்சிமையையுடைய பயனைக் கொடுக்கும் பெறுதற்கரிய பொருள்களை உலகத்தோரெல்லாரையும் நுகரப்பண்ணும் பிறக்கிடாத புதியோர்,

என்றது - மாணிக்கமும், முத்தும், சந்தனமுமுதலியன கொண்டுபோய் விற்றுத் திரிவாரைக்கூறிற்று.

பொரு கணை தொலைச்சிய புண் தீர் மார்பின்—பொருகின்ற அம்புகள் தசையைப்போக்கின புண்கள் தீர்ந்த மார்பினையும்,

சுரிகை நுழைந்த சுற்று வீங்கு செறிவு உடை—பத்திரம் செருகப்பட்ட கட்டுதலிறுகும் சேலையினையும்,

கரு வில் திருந்து தொடை ஓச்சிய கண் அகல் எறுழ் தோள்—கொடிய வில்லைத் தப்பாததொடையிலே கிரம்பவாங்கின இடமகன்ற வலியினையுடைத்தாகிய தோளினையுமுடைய,

கடம்பு அமர் நெடு வேள் அன்ன வம்பலர்—கடம்பிடத்தேயிருந்த நெடிய முருகனையொத்த வம்பலர்,

மீளி உடம்பிடி தட கை ஓடா வம்பலர்—கூற்றுவனையொத்த வேலைப் பெருமையையுடைய கையிலேயுடைய பிறக்கிடாதவம்பலர்,

மார்பினையும், உடையினையும், தோளினையுமுடைய வம்பலர்.

வரை ஊர் பாம்பின் வெள் கை ஒள் வாள் விரவு வரி கச்சில் பூண்டு புடை தூஙக—மலையிடத்தே யூர்கின்ற பாம்புபோலே யானைக்கொம்பாற் கடைந்திட்ட வெள்ளிய சூசினையுடைய ஒள்ளியவாள் தன்னிடத்தில்விரவின வரியையுடைய கச்சினாலே தோளிலேகோக்கப்பட்டு ஒருபக்கத்தே தூங்காநிற்க,

நோன் தாள் அடி புதை அரணம் எய்தி—நடந்து வலியையுடையவாகிய காலில் அடியைமறைக்கின்ற செருப்பைக்கோத்து,

படம் புக்கு—சட்டையிட்டு,

வம்பலர் (75) தூங்க (72) எய்திப் புக்கு (69) வழங்கும் (80) பெரிய வழி (81) என்க.

77 - 8. தடவு நிலை பலவின் முழுமுதல் கொண்ட சிறு சுளை பெரு பழம் கடுப்ப—பெருமையையுடைய நிலையினையுடைய பலாவினடியிலே குலை கொண்ட *சிலவாகிய சுளையினையுடைய பெரிய பழத்தையொப்ப,

* பி - ம். சிறியவாகிய.

நல்லபழம் சிலேமிக இராதென்றார்.

78 - 80. [நெரியற், புணர்ப்பொறை தாங்கிய வடுவாழ் நோன்புறத், தணர்ச்செவிக் கழுதை :]

நெரியல் புணர் பொறை தாங்கிய கழுதை மிளகினது ஒத்தகனமாகச் சேர்த்த பாரத்தைத் தாங்கிய கழுதை,

வடு ஆழ் நோன் புறத்து அணர் செவி கழுதை – வடுவழுந்தின வலியினை யுடைய முதுகினையும் எடுத்தசெவியினையுமுடைய கழுதை,

80 - 81. கழுதை சாத்தொடு வழங்கும் உல்கு உடை பெரு வழி கவலை காக்கும் — கழுதையிலே மிளகெடுத்துக் கொண்டுபோகின்ற திரளோடே வம்பலர் (76) வழங்கும் பெரியவழியில் கவர்த்தவழிகளையும் காத்திருக்கும்,

உல்கு - சுங்கம்.

82. வில்லுடை வைப்பின் — விற்படையிருக்கின்ற ஊர்களில்,

வியல் காடு இயவின் — அகன்ற காட்டுவழிகளில்.

83 - 5. நீர் அசை இலவத்து அலங்கு சினை பயந்த பூளை அம் பசு காய் புடை விரிந்தன்ன வரி புற அணிலொடு— நீண்ட தாளினையுடைய இலவத்தினது அசைகின்ற கொம்பு காய்த்த பஞ்சியினையுடைய அழகினையுடைத் தாகிய பசிய காயினது முதுகு விரிந்து பஞ்சுதோன்றினாலொத்த வரியை முதுகிலேயுடைய அணிலோடே,

85. கருப்பை ஆடாது — எலியும் திரியாதபடி,

86 - 8. [யாற்றறல் புரையும் வெரிநுடைக் கொழுமடல், வேற்றலை யன்ன வைந்நுதி நெடுந்தக, ரீத்திலை வேய்ந்த வெய்ப்புறக் குரம்பை :]

யாறு அறல் புரையும் வெரிந் கொழு மடல் உடை நெடு தகர் ஈந்து— யாற்றினது அறலையொக்கும் முதுகினையும் கொழுவிய மடலினையுமுடைய நெடிய மேட்டு நிலத்திநின்ற ஈந்து,

மடலினடி தன்னிடத்தே குறிற்க மேலறுப்புண்டஈந்து அறல் போன்றிருக்கு மாறு உணர்க.

வேல் தலை அன்ன வை நுதி ஈந்து இலை வேய்ந்த எய் புறம் குரம்பை— வேலின்முனையையொத்த கூர்மையினையுடைய முனையினையுடைய ஈந்தினு டைய இலையாலேவேய்ந்த *எய்ப்பன்றிமுதுகுபோலும் புறத்தினையுடைய குடிலில்,

89 - 90. [மான்றோற் பள்ளி மகவொடு முடங்கி, யீன்பிண வொழியப் போகி :] ஈன் பிணவு மான் தோல் பள்ளி மகவொடு முடங்கி ஒழிய போகி— பிள்ளையைப்பெற்றஎயிற்றி மான்றோலாகிய படுக்கையிலே அப்பிள்ளையோடே முடங்கிக்கிடக்க ஒழிந்தோர் போய்,

---

* பி - ம். எய்ப்பன்றிபோலும்.

* பெண்ணும் பிணவு மக்கட் குரிய" என்பதனுள் வந்த பிணவென்னும் ஆனாரீறு அல்வழிக்கண் வன்கணமன்மையிற் †குறியதன் இறுதிச்சினை கெட்டு உகரம் பெறுதலின்றது.

90 - 92 [நோன்காழ், இரும்புதலை யாத்த திருத்துறை விழுக்கோல், உளிவாய்ச் சுரையின் மிளிர மிண்டி ;] இரும்பு தலை யாத்த திருத்து றை நோன்காழ் விழு கோல் உளி வாய் சுரையின் மிளிர மிண்டி—பூண் தலையிலே அழுத்தின நன்றாகிய திரட்சியையும் வலியையுமுடைத்தாகிய வயிரத்தினையு முடைய சீரிய கோல்செருகின உளிபோலும் வாயினையுடைய பாரைகளாலே கட்டிகள் கீழ்மேலாகக் குத்துகையினாலே,

கோல்செருகப்படுகின்ற சுரையையுடைமையிற் சுரையென்றார் ; ஆகு பெயர். சுரை - குழைச்சு.

93. இரு நிலம் கரம்பை படு நீறு ஆடி—கருநிலமாகிய கரம்பைநிலத்தி லுண்டாகிய புழுதியையளைந்து,

94. நுண் புல் அடக்கிய வெள் பல் எயிற்றியர்—மெல்லிய புல்லரிசியை வாரியெடுத்துக்கொண்ட வெள்ளிய பல்லையுடைய எயிற்குடியிற்பிறந்த மகளிர்,

போகி மிண்டுகையினாலே ஆடி அடக்கிய எயிற்றியரென்க.

மிகவிளைந்து உதிர்ந்தபுல்லை எறும்பிழுத்துச் சேரவிட்டுவைத்த இடமறிந் தெடுத்தல் அந்நிலப்பண்பு.

95 - 6. பார்வை யாத்த பறை தாள் விளவின் நீழல் முன்றில் நிலவு உரல் பெய்து பார்வைமான்கட்டின பறந்த தேய்ந்ததாளினையுடைய விளவினது நிழலையுடைய முற்றத்திடத்தே தோண்டின நிலவுரலிலே அப்புல்லரிசியைச் சொரிந்து,

97. குறு காழ் உலக்கை ஓச்சி—குறிய வயிரமாகிய உலக்கையாலே ‡குத்தி,

97 - 8. நெடு கிணறு வல் ஊற்று உவரி தோண்டி—ஆழ்ந்த கிணற்றிற் சில்லூற்றாகிய உவரிநீரை முகந்துகொண்டு,

98 - 9. தொல்லை முரவு வாய் குழிசி முரி அடுப்பு ஏற்றி - பழைய §ஓறுவாய்போன பானையிலே வார்த்தவுலையை முரிந்த அடுப்பிலேவைத்து,

100. [வாரா தட்ட வாடூன் புழுக்கல் ']

வாராது அட்ட புழுக்கல்—அரியாதாக்கின சோற்றை,

எயிற்றியர் (94) பெய்து (96) ஓச்சி (97) தோண்டி (98) ஏற்றி (99) அட்ட புழுக்கலெனமுடிக்க.

வாடு ஊன்—உப்புக்கண்டத்தோடே,

---

* தொல்காப்பியம், மரபியல், 61.

† " உயிர்மயங்கியல். 32.

‡ பி - ம், குற்று.

§ பி - ம், வெறுவாய்.

101 - 2. [கெடாத் தும்பை வயவர் பெருமக, னோடாத் தானை] ஓடா தானை கெடா தும்பை வயவர் பெருமகன்—முதுகிடாதபடையினையுடைய கெடாத தும்பையுடனே போரைவல்ல வீரருடைய தலைவனாகிய

102 - 3. ஒண் தொழில் கழல் கால் செ வரைநாடன் சென்னியம் எனின்—ஒள்ளிய தொழில்களையுடைத்தாகிய வீரக்கழலணிந்த காலினையுடைய செவ்விய மலைநாட்டையுடையவனுடைய *பாணச்சாதியேமென்று கூறுவீராயின்,

104. தெய்வம் மடையின் தேக்கிலை குவைஇ - தெய்வங்களுக்குச் சோற இட்டுவைத்த பலிபோலே புழுக்கலையும் வாடூனையும் (100) தேக்கிலையிலே குவிக்கையினாலே,

104 - 5. [நும் பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர் :] பதம் நும் பைதீர் கடும்பொடு மிக பெறுகுவிர்—அவ்வுணவை நும்முடைய பசுமைதீர்ந்த சுற்றத்தோடே மிகப்பெறுகுவிர் ;

வியன்காட்டியவுகளில் (82) உல்குடைத்தாகிய (81) நெடுநெறியையும் (65) வம்பலர் (76) கழுதைச்சாத்தொடுவழங்கும் (80) உல்குடைப்பெருவழிக் கவலையையும் காத்திருக்கும் (81) வில்லுடைவைப்பின் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்கொட்டபுழுக்கலையும் வாடூனையும் (100) எல்விடைக்கழியுநர்க்கு ஏமமாகத் (66) தேக்கிலையிலே குவிக்கையினாலே (104) அப்பதத்தைப் (105) பெருமகனாகிய (101) வரைநாடன் சென்னியமெனின் (103) நும் (104) கடும்பொடு மிகப்பெறுகுவிர் (105) எனமுடிக்க.

உல்கு - இரண்டுவழிக்குங்கொள்க. குவைஇயென்னும் செய்தெனெச்சம் காரணகாரியப்பொருட்டு.

106. [மானடி பொறித்த மயங்கதர் மருங்கின் :] மயங்கு மான் அடி பொறித்த அதர் மருங்கின்—நீரின்மையின் மயங்கித்திரியும் மானடி அழுந்திக் கிடக்கின்ற வழியிடத்திலே,

107 - 8. வான் மடி பொழுதில் நீர் நசைஇ குழித்த அகழ்—மழை பெய்யாதொழிந்த காலத்தே நீர்நிற்கவேண்டுமென்று நச்சுதலாலே குழித்தகுளம்,

அகழப்படுதலின் அகழென்றது ஆகுபெயர்.

108. சூழ் பயம்பின் அகத்து ஒளித்து ஒடுங்கி—அதனைச் சூழப்பறித்துக்கிடக்கின்ற மட்டுக்குழிகளினுள்ளே மறைந்தொதுங்கி,

தண்ணீர்குடிக்கவருமென்று குளத்தைச்சூழப்பறித்தகுழி.

109 - 10. புகழா வாகை பூவின் அன்ன வளை மருப்பு ஏனம் வரவு பார்த்து இருக்கும்—அகத்திப்பூவினையொத்த வளைந்த கொம்பினையுடைய பன்றியினது நீருண்ணவரும் வரவைப்பார்த்திருக்கும்,

111. அரை நாள் வேட்டம் அழுங்கின் – நடுவியாமத்து வேட்டை ஒழிந்தார்களாயின்,

---

* பி - ம். பாண்சாதியேம்.

பகல் நாள்—அதன் பிற்றைநாளிலே,

112 - 5. [பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி, முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு, நெடுஞ் செவிக் குறுமுயல் போக்கற வளைஇ :]

முள் அரை தாமரை புல் இதழ் புரையும் நெடு செவி குறு முயல் போக்கு அற — முள்ளைத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழையொக்கும் நெடிய செவியினையுடைய குறிய முயல்களை ஓரிடத்தும்போக்கில்லாதபடி,

தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி வளைஇ — குவிந்த இடத்தை யுடைய வேலியிடத்தே ஒன்றோடொன்றுபிணைக்த வலைகளை *மாட்டிவளைத்து,

பகு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி — அங்காந்த வாயையுடைய நாய்களுடனேசென்று பசியதாறுகளையடித்து அவற்றிற்கிடவாமலோட்டி,

116 - 7. [கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு, மருஞ்சுரம் :]

கடறு கூட்டுண்ணும் அரு சுரம் — காட்டிலுள்ள முயல்களைக் கொள்ளை கொண்டுண்ணும் அரிய பாலைநிலம்.

கடுங்கண் கானவர் — தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (116) பயம்பின் ஒடுங்கிப் (108) பார்த்திருக்கும் (110) இரா வேட்டமழுங்கிற் பகலிலே (111) முயலைப் போக்கறவளைத்து (115) எருக்கிக் (112) கூட்டுண்ணும் (116) அருஞ்சுரமெனமுடிக்க,

117. அரு சுரம் இறந்த †அம்பர் குறும்பில் சேப்பின் — இவ்வரியநிலத்தைக் கைவிட்ட மற்றைநிலத்திற் குறும்பிற்றங்கில்,

குறும்பிற்சேப்பின் (129) என்பதனை இவ்விடத்துக்கூட்டுக.

இதனால் நண்பகலும் வேனிலுமாகிய பாலைநிலங்கூறி அதனைக்கலந்தநிலமும் கூறினார்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக்கடந்தபின்னரென்றுமுரைப்பர்.

117 - 8. [பருந்துபட, வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி :] ஒன்னா தெவ்வர் நடுங்க பருந்து பட ஓச்சி —பொருந்தாதபகைவர் அஞ்சப் பருந்துகள் ‡படியக் குத்தி,

119 - 20. வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணி பலகையொடு நிரைஇ—கூர்மையையுடைய முனைமழுங்கின புலாலுறும் வாயையுடைய வேலை வடித்த மணிகட்டின பலகைகளோடே நிரைத்துவைத்து,

120 - 21. முடி நாண் சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர்— தலையிலே முடிந்த நாணையுடைய வில்லைச்சார்த்திவைத்த அம்புதங்கும் அகற்சியையுடைய வீடுகளையும்,

---

* பி - ம். மூட்டிவளைத்து.
† பி - ம். உம்பர், அம்பல்.
‡ பி - ம். மடிய.

122. ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்—ஊகம்புல்லாலே வேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மதிலையும்,

123 - 4. வரை தேன் புரையும் கவை கடை புதையொடு கடு துடி தூங்கும் கணை கால் பந்தர்—மலையிற்றேனிறாலையொக்கும் குதையினையுடைத்தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுகளுடனே ஓசைகடிய துடியுந்தூங்கும் திரண்ட காலையுடைய பந்தரினையும்,

125. தொடர் நாய் யாத்த துன் அரு கடி நகர்—சங்கிலிகளாலே நாய்களைக்கட்டிவைத்த கிட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

126. [வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை :] முள் வாழ் வேலி சூழ் மிளை படப்பை—முள்ளையுடைய வாழ்வேலியினையும் அதனைச்சூழ்ந்த காவற்காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

127. கொடு நுகம் தழீஇய புதவின்—கொடிய கணையமரம் ஏறட்ட உட்கதவையுடைய வாயிலினையும்,

127 - 8. செ நிலை நெடு நுதி வய கழு நிரைத்த வாயில்—செவ்விய நிலையினையும் நெடிய முனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர் வாசலினையுமுடைய.

பகைவரைக்குத்துதற்குக் கழுவைத்தார்.

129. கொடு வில் எயினர் குறும்பில் சேப்பின்—கொடிய வில்லையுடைய எயினச்சாதியிலுள்ளாருடைய அரணிலேதங்கின்,

கணைதுஞ்சுவியனகர் (121) முதலியவற்றையுடைய குறும்பெனக.

130 - 31. களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன சுவல் விளை நெல்லின் செ அவிழ் சொன்றி—களர்நிலத்தேவளர்ந்த ஈந்தினது விதையைக் கண்டாற் போன்ற மேட்டுநிலத்தேவிளைந்த நெல்லினது சிவந்த அவிழாகியசோற்றை,

132 - 3. ஞமலி தந்த மனவு சூல் உடும்பின் வறை கால்யாத்தது வயின் தொறும் பெறுகுவிர்—நாய்கடித்துக்கொண்டுவந்த அக்குமணிபோலும் முட்டைகளையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்ததனை மனைகடோறும் பெறுகுவிர் ;

சேப்பிற் பெறுகுவிரெனக.

134 - 6. யானை தாக்கினும் அரவு மேல் செலினும் நீல் நிறம் விசும்பின் வல் ஏறு சிலைப்பினும் சூல் மகள் மாறு மறம் பூண் வாழ்க்கை—யானை தன் எதிரே செல்லினும் பாம்பு தன்மேலே செல்லினும் நீலநிறத்தையுடைய மேகத்திடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூற்கொண்டமகள் அவையிற்றிற்கு அஞ்சி மீளா மறத்தைப்பூண்ட வாழ்வினையும்,

137. வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த—தமது வலியாற் கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய வாட்டொழிலேசெய்யுங் குடியிற்பிறந்த,

138. புலி போத்து அன்ன புல் அணல் காளை—புலியினது போத்தை யொத்த புல்லென்ற தாடியையுடைய அந்நிலத்துத்தலைவன்,

பகல் நாள்—அதன் பிற்றைநாளிலே,

112 - 5. [பகுவாய் ஞமலியொடு பைம்புத லெருக்கித், தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி, முள்ளரைத் தாமரைப் புல்லிதழ் புரையு, நெடுஞ் செவிக் குறுமுயல் போக்கற வளைஇ :]

முள் அரை தாமரை புல் இதழ் புரையும் நெடு செவி குறு முயல் போக்கு அற — முள்ளைத் தண்டிலேயுடைய தாமரையினது புறவிதழையொக்கும் நெடிய செவியினையுடைய குறிய முயல்களை ஓரிடத்தும்போக்கில்லாதபடி,

தொகு வாய் வேலி தொடர் வலை மாட்டி வளைஇ — குவிந்த இடத்தை யுடைய வேலியிடத்தே ஒன்றோடொன்றுபிணைந்த வலைகளை *மாட்டிவளைத்து,

பகு வாய் ஞமலியொடு பைம்புதல் எருக்கி — அங்காந்த வாயையுடைய நாய்களுடனேசென்று பசியதூறுகளையடித்து அவற்றிற்கிடவாமலோட்டி,

116 - 7. [கடுங்கட் கானவர் கடறுகூட் டுண்ணு, மருஞ்சுரம் :]

கடறு கூட்டுண்ணும் அரு சுரம்—காட்டிலுள்ள முயல்களைக் கொள்ளை கொண்டுண்ணும் அரிய பாலைநிலம்,

கடுங்கண் கானவர்—தறுகண்மையையுடைய கானவர்,

கானவர் (116) பயம்பின் ஒடுங்கிப் (108) பார்த்திருக்கும் (110) இரா வேட்டமழுங்கிற் பகலுளிலே (111) முயலைப் போக்கறவளைத்து (115) எருக்கிக் (112) கூட்டுண்ணும் (116) அருஞ்சுரமெனமுடிக்க,

117. அரு சுரம் இறந்த †அம்பர் குறும்பில் சேப்பின்—இவ்வரியநிலத் தைக் கைவிட்ட மற்றைநிலத்திற் குறும்பிற்றங்கில்,

குறும்பிற்சேப்பின் (129) என்பதனை இவ்விடத்துக்கூட்டுக.

இதனால் நண்பகலும் வேனிலுமாகிய பாலைநிலங்கூறி அதனைக்கலந்தநில மும் கூறினர்.

இனி நீங்கள் அருஞ்சுரத்தைக்கடந்தபின்னரென்றுமுரைப்பர்.

117 - 8. [பருந்துபட, வொன்னாத் தெவ்வர் நடுங்க வோச்சி :] ஒன்னா தெவ்வர் நடுங்க பருந்து பட ஓச்சி —பொருந்தாதபகைவர் அஞ்சப் பருந்துகள் ‡படியக் குத்தி,

119 - 20. வை நுதி மழுங்கிய புலவு வாய் எஃகம் வடி மணி பலகை யொடு நிரைஇ—கூர்மையையுடைய முனைமழுங்கின புலானாறும் வாயையுடைய வேலை வடித்த மணிகட்டின பலகைகளோடே நிரைத்துவைத்து,

120 - 21. முடி நாண் சாபம் சார்த்திய கணை துஞ்சு வியல் நகர்—தலை யிலே முடிந்த நாணையுடைய வில்லைச்சார்த்திவைத்த அம்புதங்கும் அகற்சியை யுடைய வீடுகளையும்,

---

* பி - ம். மூட்டிவளைத்து.
† பி - ம். உம்பர், அம்பல்.
‡ பி - ம். மடிய.

122. ஊகம் வேய்ந்த உயர் நிலை வரைப்பின்—ஊகம்புல்லாலேவேய்ந்த உயர்ந்த நிலைமையினையுடைய மதிலையும்,

123 - 4. வரை தேன் புரையும் கவை கடை புதையொடு கடு துடி தூங்கும் கணை கால் பந்தர்—மலையிற்றேனிறாலையொக்கும் குதையினையுடைத் தாகிய அடியினையுடைய அம்புக்கட்டுகளுடனே ஓசைகடிய துடியுந்தூங்கும் திரண்ட காலையுடைய பந்தரினையும்,

125. தொடர் நாய் யாத்த துன் அரு கடி நகர்—சங்கிலிகளாலே நாய் களைக்கட்டிவைத்த கிட்டுதற்கரிய காவலையுடைய வீட்டினையும்,

126. [வாழ்முள் வேலிச் சூழ்மிளைப் படப்பை:] முள் வாழ் வேலி சூழ் மிளை படப்பை—முள்ளையுடைய வாழ்வேலியினையும் அதனைச்சூழ்ந்த காவற் காட்டினையுடைத்தாகிய பக்கத்தினையும்,

127. கொடு நுகம் தழீஇய புதவின்—கொடிய கணையமரம் ஏறட்ட உட் கதவையுடைய வாயிலினையும்,

127 - 8. செ நிலை நெடு நுதி வய கழு நிரைத்த வாயில்—செவ்விய நிலை யினையும் நெடிய முனையினையுமுடைய வலியையுடைய கழுக்கள் நிரைத்த ஊர் வாசலினையுமுடைய.

பகைவரைக்குத்துதற்குக் கழுவைத்தார்.

129. கொடு வில் எயினர் குறும்பில் சேப்பின்—கொடிய வில்லையுடைய எயினசசாதியிலுள்ளாருடைய அரணிலேதங்கின்,

கணை துஞ்சுவியனகர் (121) முதலியவற்றையுடைய குறும்பெனக.

130 - 31. களர் வளர் ஈந்தின் காழ் கண்டன்ன சுவல் விளை நெல்லின் செ அவிழ் சொன்றி—களர்நிலத்தேவளர்ந்த ஈந்தினதுவிதையைக் கண்டாற் போன்ற மேட்டுநிலத்தேவிளைந்த நெல்லினது சிவந்த அவிழாகியசோற்றை,

132 - 3. ஞமலி தந்த மனவு சூல் உடும்பின் வறை கால்யாத்தது வயின் தொறும் பெறுகுவிர்—நாய்கடித்துக்கொண்டுவந்த அக்குமணிபோலும் முட்டை களையுடைய உடும்பினது பொரியலாலே மறைத்ததனை மனைகடோறும் பெறு குவிர்;

சேப்பிற் பெறுகுவிரெனக.

134 - 6. யானை தாக்கினும் அரவு மேல் செலினும் நீல் நிறம் விசும்பின் வல் ஏறு சிலைப்பினும் சூல் மகள் மாறு மறம் பூண் வாழ்க்கை—யானை தன் எதிரே செல்லினும் பாம்பு தன்மேலே செல்லினும் நீலநிறத்தையுடைய மேகத் திடத்தே வலிய உருமேறு இடிப்பினும் சூற்கொண்டமகள் அவையிற்றிற்கு அஞ்சி மீளா மறத்தைப்பூண்ட வாழ்வினையும்,

137. வலி கூட்டுணவின் வாள் குடி பிறந்த—தமது வலியாற் கொள்ளை கொண்டுண்ணும் உணவினையுமுடைய வாட்டொழிலேசெய்யுங் குடியிற்பிறந்த,

138. புலி போத்து அன்ன புல் அணல் காளை—புலியினது போத்தை யொத்த புல்லென்ற தாடியையுடைய அந்நிலத்துத்தலைவன்,

139 - 40. செல் நாய் அன்ன கரு வில் சுற்றமொடு கேளா மன்னர் கடி புலம் புக்கு—தான் குறித்தவிலங்கின்மேலே செல்கின்றநாய் அதனைத் தப்பாமற் கொன்றுமாறுபோன்ற கொடியவில்லையெடுத்த காவலாளருடனே தன் வார்த்தைகேளாத பகைவருடைய காவலையுடைய நிலத்தேசென்று,

141. நாள் ஆ தந்து நறவு நொடை தொலைச்சி—விடியற்காலையிலே அவர்கள்பசுக்களை அடித்துக்கொண்டுபோந்து அவற்றைக் கள்ளுக்கு விலையாகப் போக்கி,

142. இல் அடு கள் இன் தோப்பி பருகி—அதற்குப் பின்பாகத் தமது இல்லிலே சமைத்த கள்ளுக்களில் இனிதாகிய நெல்லாற்செய்த கள்ளையுண்டு,

143. மல்லல் மன்றத்து மத விடை கெண்டி—வளப்பத்தினையுடைய மன்றிலே வலியையுடைய ஏற்றை அறுத்துத்தின்று,

144. மடி வாய் தண்ணுமை நடுவண் சிலைப்ப—தோலை மடித்துப் போர்த்த வாயையுடைய மத்தளம் தங்களுக்குநடுவே முழங்காநிற்ப,

145 - 7. [சிலைநவி லெறுழ்த்தோ ளோச்சிவலன் வளையூஉப், பகன் மகிழ் தூங்குந் தூங்கா விருக்கை, முரண்டலை கழிந்த பின்றை:] சிலை நவில் எறுழ் தோள் ஓச்சி வலன் வளையூஉ பகல் மகிழ் தூங்கும் தூங்கா முரண் தலை இருக்கை கழிந்த பின்றை—வில்லூப்பயின்ற வலியையுடைய இடத்தோளையெடுத்து வலப்பக்கத்திலேவளைந்து பகற் பொழுதிலே மகிழ்ச்சியுடனே யாடும் அசையாப்பொருதலையுடைய குடியிருப்பினைக் கடந்தபின்பு,

இதனாற் குறிஞ்சிநிலம் முற்கூறி அதன்பகைப்புலமும் பிற்கூறினார்.

147 - 8. மறிய குளகு அரை யாத்த குறு கால்—ஆட்டுமறிகள் நின்று தின்னுந் தன்மையையுடைய தழைகளைத் தம்மிடத்தேசட்டின குறிய கால்களையும்,

148 - 9. [குரம்பைச், செற்றை வாயிற் செறிகழிக் கதவின்:]

செற்றை வாயில்—சிறுதூற்றையுடைய வாயிலினையும்,

குரம்பை—குரம்பையினையும்,

கழி செறி கதவின்—கழிகளாற் கட்டப்பட்ட கதவினையும்,

150. [கற்றை வேய்ந்த கழித்தலைச்சாம்பின்:]. கழித்தலை கற்றை வேய்ந்த சாம்பின்—வரிந்த கழிகளிடத்தே வரகுகற்றைகளாலே வேய்ந்த சேக்கையையும்,

151. [அதளோன் றுஞ்சுங் காப்பி னுதள:] உதள அதளோன் துஞ்சும் காப்பின்—கிடாயினுடைய தோல்களைப் பாயலாகவுடைய முதியோன் துயில் கொள்ளுங் காவலையுமுடைய,

* "மோத்தையுந் தகரு முதளு மப்பரும், யாத்த வெண்ப யாட்டின் கண்ணே" என்றார்மரபியலில்.

---

* தொல்காப்பியம், மரபியல், 47.

கவலினையும் (148) வாயிலினையும் கதவினையும் (149) சாம்பினையும் (150) காப்பினையு (151) முடைய குரம்பை (148) யென்க.

152. நெடு தாம்பு தொடுத்த குறு தறி முன்றில்—தாமணிதொடுத்த நெடிய தாம்புகள்கட்டின குறியமுளைகளையுடைய முற்றத்தினையும்,

153 - 4. கொடு முகம் துருவையொடு வெள்ளை சேக்கும் இடு முள் வேலி எரு படு வரைப்பின்—வளைந்த முகத்தினையுடைய செம்மறியாட்டுடனே வெள்ளாடுங்கிடக்குங் கட்டுமுள்ளாகிய வேலியினையுமுடைய எருமிகுகின்ற வளரிடத்து,

குரம்பையினையும் (148) முன்றிலினையும் (152) வேலியினையுமுடைய வரைப்பென்க.

155. [நள்ளிருள் விடியற் புள்ளெழுப் போகி·]

நள் இருள் விடியல் புள் எழ—செறிந்த இருள்போகின்ற காலத்தே பறவைகள் துயிலெழாநிற்ப,

போகியென்பதனை மேலேகூட்டுக.

156. புலி குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி—புலியினது முழக்கம்போலும் முழக்கத்தையுடைய மத்தை ஆரவாரிக்கும்படி கயிற்றைவலித்து,

157 - 8. ஆம்பி வால் முகிழ் அன்ன கூம்பு முகை உறை அமை தீ தயிர் கலக்கி—குடைக்காளானுடைய வெள்ளிய முகைகளையொத்த குவிந்த முகிழ்களையுடைய உறையாலே இறுகத்தோய்ந்த இனிய தயிரைக்கடைந்து,

முகை - மொட்டு. முகிழ் - ஆடையின்மேல் புடைத்துநிற்பது.

158. நுரை தெரிந்து—வெண்ணெயையெடுத்து,

159. புகர் வாய் குழிசி பூ சுமடு இரீஇ போகி (155)—தயிர் புள்ளியாகத்தெறித்த *வாயையுடைய மோர்ப்பானையைப் பூவாற்செய்த சுமட்டைத் தலையிலேவைத்து முற்கூறிய குறிஞ்சிநிலத்தேறப்போய்,

160. நாள் மோர் மாறும்—காலையிலே மோரைவிற்கும்,

நல் மா மேனி—நன்றாகிய மாமையாகிய நிறத்தினையும்,

161. சிறுகுழை துயல்வரும் காதின்—தாளுருவியசையுமக் காதினையும

பணை தோள்—மூங்கில்போலும் தோளினையும்,

162. குறு நெறி கொண்ட கூந்தல்—குறிதாகிய அறலைத் தன்னிடத்தே கொண்ட மயிரினையுமுடைய,

ஆய் மகள்—ஆய்ச்சாதியிற்பிறந்தமகள்,

மேனி முதலியவற்றையுடையமகள்.

163. அளை விலை உணவின் கிளை உடன் அருத்தி - மோர்விற்றதனாலுண்டாகிய நெல் முதலியவற்றாலே சுற்றத்தாரெல்லாரையும் உண்ணப் பண்ணி;

* பி-ம். நிறத்தையுடைய.

164. நெய் விலை கட்டி பசு பொன் கொள்ளாள்—பின்பு தான் நெய்யை விற்கின்றவிலைக்குக் கட்டியாகப் பசும்பொன்னை வாங்காளாய்,

165. எருமை நல் ஆன் கரு நாகு பெறூஉம் குடி (166)—பாலெருமை யையும், நல்லபசுவையும், கரிய எருமைநாகினையும் நெய்க்கு ஒப்பாகச்சொல்லி வாங்குங்குடி,

* அட்டியென்றுபாடமோதி வார்த்தென்றுகூறுதலுமாம்.

குறிஞ்சிநிலத்தே நெய்யைவிற்று அவர்கள் அடித்துக்கொண்ட எருமை முதலாயவற்றை விலையாகவாங்கினளென்க.

166. மடி வாய் கோவலர்—சீழ்க்கைபிடித்தலாலே மடித்த வாயையுடைய இடையர்.

குடி வயின் சேப்பின்—குடியிருப்பிலே தங்குவீராயின்,

167-8. [இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப் பன்ன, பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவிர் :] ஞெண்டின் இரு கிளை சிறு பார்ப்பு அன்ன பசு தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்—நண்டினது பெரிய சுற்றமாகிய சிறிய பார்ப்பை யொத்த செவ்வித்தினையரிசியாலாக்கின சிலுத்தசோற்றைப் பாலுடனேபெறு குவிர் ;

புள்ளெழாநிற்க (155) வாங்கிக் (156) கலக்கித் தெரிந்து (158) இரீஇப் (159) போகி (155) மாறும் (160) ஆய்மகள் (162) என்க.

மடிவாய்க்கோவலர் (166) வரைப்பிடத்து (154) ஆய்மகள் (162) அருத்தி (163) கொள்ளாளாய்ப் (164) பெறூஉங் (165) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும்பெறுகுவிரெனமுடிக்க.

169. தொடுதோல் மரீஇய வடு ஆழ் நோன் அடி—செருப்புவிடாமற் கிடந்த வடுவழுந்தின வலியையுடைய அடியினையும்,

170. விழு தண்டு ஊன்றிய கை—பசுக்களுக்கு வருத்தஞ்செய்யும் தடி யையூன்றின கை,

மழு தின் வல் கை—மரங்களை ஒடியெறிந்து கொடுக்கும் கோடாரியால் தழும்பிருந்த வலிய கையினையும்,

171. உறி கா ஊர்ந்த மறு படு மயிர் சுவல்—இரண்டுதலைகளிலும் உறி யினையுடைய காக்கள் மேலேயிருந்ததனால் உண்டாகிய தழும்புமிக்க மயி ரெழுந்த தோட்கட்டினையும்,

172. மேம் பால் உரைத்த ஓரி—எல்லாமணமும் பொருந்தும் பசுக்கறந்த பாற்கையைத் தடவின மயிரையும்,

172-4. [ஓங்குமிசைக், கோட்டவுங் கொடியவும் விரைஇக் காட்ட, பல்பூ மிடைந்த படலைக் கண்ணி :] காட்ட ஓங்கு மிசை கோட்டவும் கொடிய வும் பல் பூ விரைஇ மிடைந்த படலை கண்ணி—காட்டிடத்தனவாகிய உயர்

---

* 'நெய்விலைக்கட்டி' (164) என்பதை நெய்விலைக்கு அட்டியெனப்பிரிக்க.

இன்ற உச்சியினையுடைய கொம்புகளிலுள்ளவும் கொடிகளிலுள்ளவுமாகிய பல் பூக்கள் கலந்துநெருங்கிய கலம்பகமாகிய மாலையினையும்,

175. ஒன்று அமர் உடுக்கை—ஒன்றாய்ப்பொருந்திய உடையினையு முடைய,

கூழ் ஆர் இடையன்—பாற்சோற்றையுண்கின்ற இடையன்,

அடிமுதலியவற்றையுடையஇடையன்.

176. கன்று அமர் நிரையொடு கானத்து அல்கி—கன்றுகள்பொருந்தின பசுத்திரளோடே காட்டிலேதங்கி

177 - 9. [அந்நுண்ணவிர்புகை கமழக் கைம்முயன்று, ஞெலிகோற் கொண்ட பெருவிறன் ஞெகிழிச், செந்தீத் தொட்ட கருந்துளைக் குழலின் :]

ஞெலிகோல் அம் நுண் அவிர் புகை கமழ கை முயன்று கொண்ட செ தீ ஞெகிழி தொட்ட கரு துளை குழலின்—தீக்கடைகோலாலே அழகிய நுணிய தாய்விளங்கும் புகை முற்படப்பிறக்கும்படி கையாலேகடைந்துகொண்ட சிவந்த நெருப்பினையுடைய கடைக்கொள்ளியால் துளையிட்ட கரிய துளையினை யுடைய குழலாலெழுப்பின,

பெருவிறலென்பதனை இடையனென்பதனொடு முன்னேகூட்டியெண்ணுக.

இனி, ஞெலிகோல் படுத்தகோல், ஞெகிழி கடைகின்றகோலென்று முரைப்பர்.

180. இன் தீ பாலை முனையின்—மிகவுமினிய பாலையென்கின்ற பண்ணைத் தான் வெறுக்கில்,

180 - 82 [குமிழின், புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின், வில்யா ழிசைக்கும் விரலெறி குறிஞ்சி :] குமிழின் புழல் கோடு தொடுத்த மரல் புரி விரல் எறி நரம்பின் வில் யாழ் இசைக்கும் குறிஞ்சி—குமிழினது உட் பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக்கட்டின மரற்கயிறாகிய விரலாலேதெறித்துவாசிக்கும் நரம்பினையுடைய வில்லாகிய யாழொலிக்குங் குறிஞ்சியென்கின்ற பண்ணை,

183. பல் கால் பறவை கிளை செத்து ஓர்க்கும்—பலகாலினையுடைய வண்டுகள் தம் சுற்றத்திஞ்ஞைசயாகக்கருதிச் செவிகொடுத்துக்கேட்கும்.

* "நண்டுந்தும்பியும்" என்னுஞ் சூத்திரத்திற் செவிப்பொறியான் இசை யுணர்தல்கூறினும்.

184. புல் ஆர் வியல் புலம் போகி—புல்லுநிறைந்த அகற்சியையுடைய நிலத்தைக்கடந்துபோய்,

முன்னர் இடையர்குடியிருப்புக்கூறிப் பின்னர் அவர்பசுக்கள்முதலியன நிற்கின்ற முல்லைநிலமுங்கூறினர்.

* தொல்காப்பியம், மரபியல், 31.

184 - 5. முள் உடுத்து எழு காடு ஓங்கிய தொழு உடை வரைப்பின்—முள்ளுந் தன்னிடத்தேசூழ்ந்து எழுகின்ற * விடத்தேரை முதலிய காடு கள்சூழவளர்ந்த தொழுக்களையுடைய ஊர்களில்,

இது, பசுக்கள்முதலியனமேயாமற் காக்கின்ற இளங்காட்டையுடைய படைத்தலைவரிருப்புக்கூறிற்று.

186. பிடி கணத்து அன்ன குதிர் உடை முன்றில்—பிடித்திரள்நின்றாற் போன்ற வரகுமுதலியனவிற்குங் குதிர்களையுடைய முன்றிலினையும்,

187. களிறு தாள் புரையும் திரிமரம் பந்தர் — யானையினுடைய காலை யொக்கும் வரகுதிரிகை நட்டுநிற்கும் பந்தரினையும்,

188 - 9. குறு சாடு உருளையொடு கலப்பை †சாத்தி நெடு சுவர் பறைந்த புகை சூழ் கொட்டில்—குறிய சகடத்திலுருளைகளோடே கலப்பையையும் சார்த்திவைக்கையினாலே நெடிய சுவரிடத்தில் தேய்ந்த புகைசூழ்ந்த கொட்டிலினையுமுடைய,

நெடுகக்கட்டி ஒருபக்கத்திலே அடுப்பெரித்து ஒருபக்கத்திலே தொழிலொழிந்த நாளில் சகடையினுருளையையும் கலப்பையையுஞ்சார்த்தி எருதுகளுங் கட்டிநிற்றலிற் கொட்டிலென்றார்.

190 - 91. பருவ வானத்து பா மழை கடுப்ப கரு வை வேய்ந்த கவின் குடி சிறு ஊர்—மாரிக்காலத்தையுடைய விசும்பிடத்தே பரந்த மேகத்தையொப்ப வரகுவைக்கோலாலேவேய்ந்த அழகினையுடைய குடியிருப்பினையுடைய சிறிய ஊர்களிலே,

சீறூர், அம்முல்லைநிலத்து உழுதுண்பாரிருப்பு.

192 - 3. நெடு குரல் பூளை பூவின் அன்ன குறு தாள் வரகின் குறள் அவிழ் சொன்றி—நெடிய கொத்தினையுடைய சிறுபூளையினது பூவையொத்த குறிய தாளினையுடைய வரகினது சிறிய அவிழ்களாகிய சோற்றை

194 - 5. புகர் இணர் வேங்கை வீ கண்டன்ன அவரை வால் புழுக்கு அட்டி—கிறத்தையுடைய கொத்தினையுடைய வேங்கைப்பூவைக் கண்டாலொத்த அவரைவிதையினது நன்றாகியபருப்பை மிகவிட்டு,

வேங்கைப்பூ வரிகளையுடைய விதைக்கு உவமை. புழுக்கு - புழுங்கவெந்தது; கும்மாயமுமாம்; பருப்புச்சோறுமென்ப.

195 - 6. ‡ [பயில்வுற், றின்சுவை மூரற் பெறுகுவிர்.]

இடையன் (175) அல்கிப் (176) பாலையைத் தான்முனையின் (180) அதனைக் கைவிட்டு விரலாலே வாசிக்குங்குறிஞ்சியைப் (182) பறவையோர்க்கும

---

* விடத்தே தொடரி - ஒருவகை முள் மரம்; விடத்தர், விடத்தேரை, விடத்தேரென இப்பெயர் வழங்கும்,

† பி - ம். சாத்தி.

‡ இதற்கு ஒருபிரதியிலும் உரைகிடைத்திலது. கலத்தலினாலே இனிய சுவையினையுடைத்தாகிய மூரலோடே பெறுகுவிரென்க.

(183) புலைத்தைப் போகி (184) வலைப்புக்களின் (185) முன்றில் (186) முதலியவற்றையுடைய சீறூர்களிலே (191) வாகின்சொன்றியைப் (193) புறத்தலைக்கட்டி (195) மூரலோடே பெறுகுவிரெனமுடிக்க.

196. ஞாங்கர்—அந்நிலத்திற்குமேல்,

197. குடி நிறை வல்சி செ சால் உழவர்— அக்குடியிருப்புநிறைந்த உணவினையுடைய செவ்விய சாலாகவுழுகின்ற உழவுத்தொழிலையுடையோர்,

ஒருசால் இருசாலென்றல் உழவுத்தொழிற்குமரபு.

198. நடை நவில் பெரு பகடு புதவில் பூட்டி- உழவுத்தொழிலிலே பயின்ற பெரிய எருதுகளை வாயிலிலே நுகத்தைப் பூட்டிக் கொண்டுசென்று,

199 - 200. பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில் உடும்பு முகம் முழு கொழு மூழ்க ஊன்றி – பிடியினது வாயையொத்த வளைந்தவாயையுடைய கலப்பையினுடைய உடும்பினது முகத்தையொத்த பெருங்கொழு மறைய அமுக்கி

201. தொடுப்பு எறிந்து உழுத துவர் படு துடவை— முற்பட வளைய வுழுது விதைத்தபின்னர் இடையே உழுத களைகளைக் களைக்கொட்டுச்செத்திய தோட்டத்தை,

202. அரி புகு பொழுதின —அறுக்கும்பருவம் வருங்காலத்தே,

202 - 5. [இரியல் போகி, வண்ணக் கடம்பி னறுமல ரன்ன, வளரிளம் பிள்ளை தழீஇக் குறுங்காற். கறையணற் குறும்பூழ் கட்சி சேக்கும்:]

குறு கால் கறை அணல் குறும்பூழ் –அதன்கட்டங்குங் குறுங்காலினையும் கருமையையுடையகழுத்தினையுமுடைய குறும்பூழ்,

வண்ணம் கடம்பின் நறு மலர் அன்ன வளர் இள பிள்ளை தழீஇ—வெள்ளிய நிறத்தையுடைய கடம்பினது நறுநாற்றத்தினையுடைய பூவையொத்த வளருகின்ற இளையபிள்ளைகள் மிகவும் பறததலாற்றுதனவற்றையும் கூட்டிக்கொண்டு,

*"பார்ப்பும் பிள்ளையும் பறப்பவற் றிளமை" என்றார்.

இரியல் போகி கட்சி சேக்கும்—அவர்களாரவாரத்திற்கஞ்சிக் கெடுதற்றன்மையையுடையவாய் ஆண்டுநின்றும்போய்க் காட்டிலேதங்கும்,

206. வல் புலம் இறந்த பின்றை—முல்லைநிலத்தைப் போனபின்பு,

இதனால், முற்றுங்குடிச்சீறாருழவரால் உழுதற்குரிய முல்லைநிலமுங்கூறினார். இது மருதநிலத்தைச்சேர்ந்த முல்லைநிலம்.

உழவர் பூட்டி ஊன்றி உழுததுடவை அரிபுகுபொழுதில் குறும்பூழ் பிள்ளை தழீஇப் போகிச் சேக்கும் வன்புலமென்க.

206 - 7. மெல் தோல் மிதி உலை கொல்லன் முறி கொடிறு அன்ன மெத்தென்ற துருத்தியை அமுக்கி ஊதுகின்ற உலையில் கொற்றொழில்செய்கின்றவனுடைய முறிந்த கொடிற்றையொத்த,

---

* தொல்காப்பியம், மரபியல், 4.

208. கவை தாள் அலவன் அளறு அளை சிதைய—கப்பித்த காலையுடைய ஞெண்டினது சேற்றின்கண்உண்டாகிய முழைகெடும்படி,

209 - 10. பை சாய் கொன்ற மண் படு மருப்பின் கார் ஏறு பொருத கண் அகல் செறுவின்—பசியகோரையை அடியிலே குத்தியெடுத்த மண்கிடக்கின்ற கொம்பையுடைய கரிய கடாக்கள் தம்மிற்பொருத இடமகன்ற செய்யின்கண்,

211. உழாஅ நுண் தொளி நிரவிய வினைஞர்—தாம் உழப்படாத அந்த நுண்ணிய சேற்றை ஒக்கமிதித்தஉழவர்,

212. முடி நாறு அழுத்திய நெடு நீர் செறுவில் — முடியாகக்கிடக்கின்ற நாற்றைநட்ட நெடியநீரையுடைய செய்களில்,

சிதையக் கொன்ற மருப்பின் ஏறுபொருத செறுவில் தொளியைநிரவிய வினைஞர் நாற்றையழுத்திய செறுவென்க.

213 - 4. களைஞர் தந்த கணை கால் நெய்தல் கள் கமழ் புது பூ முனையின்—அச்செய்யில் களைகளைப்பறிப்பார் பறித்து ஏறட்ட திரண்டதாளினையுடைய நெய்தலினது தேனுறுகின்ற புதியபூவை வெறுத்தாராயின்,

214 - 6. [முட்சினை, முகைசூழ் தகட்ட பிறழ்வாய் முள்ளிக், கொடுங்கான் மாமலர் கொய்து கொண்டு:] முகை சூழ் முள் சினை முள்ளி தகட்ட கொடு கால் பிறழ் வாய் மா மலர் கொய்து கொண்டு—அரும்புகள் சூழ்ந்த முள்ளையுடைய கொம்புகளையுடைய முள்ளியின் இதழையுடையவாகிய வளைந்த காலையும் மறிந்தவாயையும் கருமையையுமுடைய பூவைப்பறித்துக்கொண்டு,

216 - 8. அவண பஞ்சாய் கோரை பல்லின் சவட்டி புணர் நார் பெய்த புனைவு இன் கண்ணி—அந்நிலத்திலுண்டாகிய தண்டானுகிய கோரையைப் பல்லாலே மென்றுமென்று கிழித்து முடிந்த நாரார்கட்டின புனைதற்கினிய மாலையை,

219. ஈர் உடை இரு தலை ஆர சூடி—ஈருடைத்தாகிய கரிய தலைநிறையும்படி சூடி,

220. பொன் காண் கட்டளை கடுப்ப *சண்பின்—பொன்னையுரைத்து மாற்றுக்காணும் உரைகல்லையொப்பச் சண்பினது,

221. புல் காய் சுண்ணம் புடைத்த மார்பின்—புல்லிய காயிற்றோன்றின தாதை அக்கநிரைமுறித்து அடித்துக்கொண்ட மார்பினையும்,

தாதுநீளக்கிடந்தது உரைத்தாற்போன்றது.

222. இருப்பு வடித்தன்ன மடியா மெல் தோல்—இரும்பைத் தகடாக்கினலொத்த திரையாத மெல்லிய தோலினையுமுடைய,

223. கரு கை வினைஞர் காதல் அம் சிறாஅர்—வலிய கையால் தொழில் செய்வாருடைய விருப்பத்தையுடைய அழகிய சிறுபிள்ளைகள்,

* பி - ம். கணப்பின், சணப்பின்.

224. பழ சோறு அமலை முனைஇ — பழைய சோற்றின்து கட்டியை வெறுத்து,

224 - 6. வரம்பில் புது வை வேய்ந்த கவி குடில் முன்றில் அவல் எறி உலக்கை பாடு விறந்து —வரம்பிடத்துப் புதிய வைக்கோலாலேவேய்ந்த கவிந்த குடிலினுடைய முற்றத்தே அவலையிடிக்கும் உலக்கையினது ஓசை செறிகை யினாலே,

குடில்கள், பன்றிமுதலியனவற்றைக் காத்தற்குக் கட்டினவை.

226 - 7. அயல கொடு வாய் கிள்ளை படு பகை வெரூஉம்—அதற்கு அயலிடத்தனவாகிய வளைந்த வாயையுடைய கிளிகள் தமக்குண்டாகின்ற பகையாக நினைத்து அஞ்சும்,

228. நீங்கா யாணர் வாங்கு கதிர் கழனி—இடையறாத புதுவருவாயினையுடைய வளையுங்கதிரினையுடைத்தாகிய கழனியிடத்து,

229. கடுப்பு உடை பறவை சாதி அன்ன —எறியப்பட்டார்க்குக் கடுக்குந் தன்மையைக் கொடுத்தலையுடைய குளவித்திரளையொத்த,

230. பைது அற விளைந்த பெரு செ நெல்லின் — பசுமையறும்படி முற்றின பெரிய செந்நெல்லினுடைய,

231. தூம்பு உடை திரள் தாள் துமித்த வினைஞர்—உள்ளும்பொய்யையுடைத்தாகிய திரண்டதாளையறுத்த தொழில்செய்வார்,

232. பாம்பு உறை மருதின் ஓங்கு சினை நீழல்—பாம்புகிடக்கின்ற மருதினது உயர்ந்த கொம்பாலுண்டாகிய நிழலிலே,

பழையமரமாதலிற் பாம்புகிடக்குமென்றார்.

233. பலி பெறு வியல் களம் மலிய ஏற்றி—ஆண்டுறையுந்தெய்வங்கள் பலிபெறுகின்ற அகன்ற களங்களிலே மிகவுநிறையப் போராகவிட்டு,

234 - 5. [கணங்கொள் சுற்றமொடு கைபுணர்ந் தாடுந், துணங்கையம் பூதந் துகிலுடுத்தவைபோல் :] கணம் கொள் சுற்றமொடு கை புணர்ந்து துணங்கை ஆடும் அம் பூதம் துகில் உடுத்தவைபோல் —திரட்சிகொண்ட தம்முடைய சுற்றத்தோடே ஒழுங்காகச்செறிந்துநின்று துணங்கைக்கூத்தாடுகின்ற அழகினையுடையபூதங்கள் வெள்ளிய துகிலையுடுத்துநின்றவைபோல,

என்றது, தமமில் விளையாடுவதற்குத்திரண்ட பூதமென்றவாறு.

236 - 7. சிலம்பி வால் நூல் வலந்த மருங்கின் குழுமு நிலை *போரின் முழு முதல் தொலைச்சி — சிலந்தியினது வெள்ளியநூல்சூழ்ந்த பக்கத்தினையுடைய பலவாகத்திரண்ட தன்மையினையுடைய போர்களினுடைய பெரிய அடியை வாங்கிவிரித்து,

238. பகடு ஊர்பு இழிந்த பின்றை—எர்கள் கடாவிட்டுப் போனபின்பு,

238 - 9. துகள் தப வையும் துரும்பும் நீக்கி—குற்றமறும்படி வைக்கோலையும் கூளத்தையும் அதனிடத்துநின்றுநீக்கி,

* பி - ம். போர்பின்.

239. வைந்த அற—காம் உலராநிற்க,

240. குடகாற்று எறிந்த குப்பை—மேல்காற்றாலே கையாலே அறிந்தார் போல வெறுவி,

240-41. வடபால் வெம்பொன் மலையின் சிறப்ப தோன்றும்—வட திசைக்கண்ணதாகிய மேருவாகிய மலைபோலே மிகும்படி தோன்றும்,

242. தண் பணை தழீஇய தளரா இருக்கை—மருதநிலஞ்சூழ்ந்த அசையாத குடியிருப்புக்களில்,

மார்பினையும் (221) தோளினையுமுடைய (222) வினைஞர்கள் (223) முன்னர் (224) அவலெறி புலக்கைப்பாடுவிறக்கையாலே (226) கின்னை வெருஉம் (227) கழனிகளில் (228) விளைந்த நெல்லினைத் (230) தமிழ்த்த வினைஞர் (231) ஏற்றித் (233) தெரிவச்சி (237) நீக்கி (239) எறிந்தகுப்பை (240) தோன்றும் இருக்கை யெனக்கூட்டுக.

243-4. பகடு ஆ ஈன்ற கொடு நடை குழவி கவை தாம்பு தொடுத்த காழ் ஊன்று அல்குல்—பெருமையையுடைய பசுக்களீன்ற வளைந்த அடியை யுடைய கன்றுகளைக் கட்டின தாமணியையுடைய நெடியதாம்புகள் கட்டிக கிடக்கின்ற தறிகள்நட்ட பக்கத்தினையும்,

முழுவலி துஞ்சும் நோய்தபு நோன்றொடை, நுண்கொடி யுழிஞை வெல்போ ரறைக" என்றார்பிறரும். கவை-ஆகுபெயர்.

245. [எணி யெய்தா நீணெடு மார்பின் :] நீள் எணி எய்தா செடு மார் பின்—நீண்ட எணிக்கு எட்டாத நெடிய வடிவினையும்,

246. முகடு தமித்து அடுக்கிய பழ பல் உணவின்—தலையைத்திறந்து உள்ளே சொரியப்பட்ட பழையவாகிய பல நெல்லினையுமுடைய,

பல்லுணவென்றார், செந்நென் முதலிய சாதிப்பன்மைகருதி.

247. குமரி மூதத கூடு ஓங்கு நல் இல்—அழியாத்தன்மையவாய் முதிர்ந்த கூடுகள் வளர்ந்த நல்ல இல்லினையும்.

அல்குலினையும், மார்பினையும், உணவினையுமுடைய கூடென்க.

248-9. தச்சச்சிறாஅர் நச்ச புனைந்த ஊரா நல் தேர் உருட்டிய புதல வர்—தச்சத்தொழிற்பிறந்த தொழில்செய்தற்குரிய சிறியோர் பிறர்விரும்பும்படி பண்ணின பிறராலே ஏறப்படாத நல்ல சிறுதேரை உருட்டிக்கொண்டுதிரிக்க பிள்ளைகள்,

250. தளர் நடை வருத்தம் வீட தமது தளர்நடையாலுண்டானவருத் தம் தம்மைவிட்டு நீங்கும்படி,

250-52. அலர் முலை செவிலி அம் பெண்டிர் தழீஇ பால் ஆர்ந்து அமளி துஞ்சும் அழகு உடை நல் இல்—பால்சுரந்த முலையினையுடைய செவிலித தாயாகிய அழகினையுடைய மகளிரைத் தழுவிக்கொண்டு அம்முலையிற் பாலை

* பதிற்றுப்பத்து, 44.

நின்றியவுண்டு நடப்படுகின்றவில் துயில்கொள்ளும் அழகுசெய்யுண்டாகிய நல்ல இல்லினையும்,

செவிலியம் பெண்டிரென்பது ஒருமைபன்மைமயக்கம்.

253 - 4. தொல் பசி அறியா துளங்கா இருக்கை மல்லல் பெரு ஊர் மடியின்—வினைகாட்டிற்குஇயல்பாகிய பழையமிடியையறியாத அசையாத குடியிருப்பினையுடைய வளப்பத்தையுடைத்தாகிய பெரிய ஊரின்கண்ணே தங்கின்,

254-6. மடியா வினைஞர் தந்த வெண் நெல் வல்சி மனை வாழ் அளகின் வாட்டொடும் பெறுகுவிர்—தொழிலொழிந்திராத தொழில்செய்வார் கொண்டுவந்த வெள்ளிய நெற்சோற்றை மனையின்கண்ணேவாழும் கோழிப்பெடையினாற் சமைத்த பொரியலோடு பெறுகுவிர்;

*“கோழி கூகை யாயிரண் டல்லவை. சூழுங் காலை யளகென லமையா” என்றார்.

செறுவிற் (212) புதுப்பூமுனையின் (211) மாமலர் கொய்துகொண்டு (216) சுவட்டிப் (217) பெய்தகண்ணியைச (218) சூடித் (219) தளராவிருக்கை களிற் (242) கூடோங்கு நல்ல இல்லையும் (247) அழகினையுடைய நல்ல இல்லையும (252) துளங்காவிருக்கையினையுமுடைய (253) பேரூரிலே தங்குவீராயின் (254) வல்சியை (255) வாட்டொடும்பெறுகுவிரெனக் கூட்டுக.

257 - 9. [மழை விளையாடுங் கழைவள ரடுக்கத், தணங்குடை யாளி தாக்கலிற் பலவுடன், கணஞ்சால் வேழங் கதழ்வுற் றாங்கு :] மழை விளையாடும் கழை வளர் அடுக்கத்து அணங்கு உடை யாளி தாக்கலின் கணம் சால் வேழம் பல உடன் கதழ்வு உற்றாங்கு—மேகங்கள் விளையாடித்திரியும் மூங்கில்வளர்கின்ற பக்கமலையிலே தம்மைவருத்துந்தொழிலையுடைய யாளிபாய்கையினாலே திரட்சியமைந்த யானைபலவுங்கூடிக் கலங்கிக் கூப்பிட்டாற்போல,

260 - 61. எந்திரம் சிலைக்கும் துஞ்சா கம்பலை விசயம் அடூஉம் புகை சூழ் ஆலைதொறும்—ஆலையாரவாரிக்கும் மாறாத ஓசையையுடைய கருப்பஞ்சாற்றைக் கட்டியாகக் காய்ச்சும் புகைசூழ்ந்த கொட்டில்கடோறும்,

ஆலை ஆகுபெயர்.

262. கரும்பின் தீ சாறு விரும்பினிர் மிசைமின்—கரும்பினது இனிய சாற்றை முற்படக்குடித்துப் பின்னர் அக்கரும்பின் கட்டியைத் தின்பீராக.

† “பூங்கள் மிசைந்த முழந்தா ளிரும்பிடி,” ‡ “வீழ் களிறு மிசையாப் புலியினும்” என மிசைதல் தின்றற்றொழின் மேனின்றது.

263 - 5. [வேழ நிரைத்து வெண்கோடு விரைஇத், தாழை முடித்துத் தருப்பை வேய்ந்த, குறியிறைக் குரம்பை :] வெண் கோடு விரைஇ வேழம் நிரைத்து தாழை முடித்து தருப்பை வேய்ந்த குறி இறை குரம்பை—வஞ்சிமா

* தொல்காப்பியம், மரபியல், 55.

† கலித்தொகை, 50. ‡ அகநானூறு, 2௯

மும் காஞ்சிமரமுமாகிய வெள்ளிய கொம்புகளைக் கைகளுக்குநடுவே கலந்து நாற்றி வேழக்கோலை வரிச்சாகநிரைத்துத் தாழைநாராற்கட்டித் தருப்பைப் புல்லாலே வேயப்பட்ட குறிய இறப்பையுடைய குடிலினையும்,

முடிதந்து முடித்தெனவிகாரம். குறியிறை பண்புத்தொகையாதலின், மருவின்பாத்தியதாய் நின்றது.

265. பறி உடை முன்றில்—மீனைவாரியெடுக்கும் பறிகளையுடைய முற்றத்தினையுமுடைய,

266 - 7. கொடு கால் புன்னை கோடு துமித்து இயற்றிய பைங்காய் தூங்கும் பாய் மணல் பந்தர்—வளைந்த காலையுடைய புன்னைகளினது கொம்புகளை வெட்டியிட்ட பசியகாய்கள்நாலும் பரந்த மணலையுடைய பந்தரிலே,

பைங்காய் - சுரைக்காய்முதலியன; புன்னைங்காயுமாம்.

268. இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி—இளையவர்களும் முதிர்ந்தவர்களும் சுற்றத்துடனே நிறைந்திருந்து பின்பு,

269 - 71. புலவு நுனை பகழியும் சிலையும் மான செ வரி கயலொடு பசு இறா பிறழும் மை இரு குட்டத்து மகவொடு வழங்கி—புலாலுறுமுனையினையுடைய அம்பையும்வில்லையுமொப்பச் சிவந்தவரியினையுடைய கயல்களோடே பசியஇறாப் பிறழும் கருமையையுடைய பெரிய ஆழ்ந்த குளங்களைப் பிள்ளைகளோடேயுலாவி மீனைப்பிடித்து,

272 - 3. கோடை நீடினும் குறைபடல் அறியா தோள் தாழ் குளத்த கோடு காத்திருக்கும்—கோடைக்காலம் நீட்டித்துநின்றதாயினும் வற்றுதலையறியாத கையை மேலே கூப்பிமுழுகி நீர்நிலைகாட்டுங்காலத்துக் கையமிழ்க்குங் குளங்களினுடைய கரையைக்காத்திருக்கும்,

* "வெளிற்றுடற் குருதிவெள்ள நிலையிது வென்ப வேபோற், களிற்றுகிர்ப் பிறழ்பற் பேய்கள் கைகளை யுச்சிக் கூப்பி, யளித்தவை பாடி யாட" என்றார்பிறரும்.

274. கொடு முடி வலைஞர் குடி வயின் சேப்பின்—வளைந்த முடியினையுடைய வலையை வீசுவாருடைய குடியிருப்பிலே தங்குவீராயின்,

பந்தரிலே (267) துவன்றி (268) வழங்கிக் (271) காத்திருக்கும் (273) வலைஞரெனமுடிக்க.

குரம்பையினையும், முன்றிலினையு (265) முடைய குடி (274) யென்க.

275. அவையா அரிசி அம் களி துழவை—குற்றுத கொழியலரிசியை அழகினையுடைய களியாகத் துழாவி யட்ட கூழை,

276. மலர் வாய் பிழாவில் புலர ஆற்றி – அகன்ற வாயையுடைய தட்டுப் பிழாவிலே உலரவாற்றி,

277 - 8. பாம்பு உறை புற்றின் குரும்பி எய்க்கும் பூ புறம் நல் அடை அளைஇ—பாம்புகிடக்கின்ற புற்றின்கட்கிடக்கும் புற்றாம்பழஞ்சோற்றையொக்

* சீவகசிந்தாமணி, 804.

கும பொலிவுபெற்ற புறத்தினையுடைய நல்ல முளையையிடித்துச் சோற்றினை அதிலேகலந்து,

செல்லுடையும பாடம

278 - 9 [தேமபட, எல்லையும இரவும இருமுறை கழிப்பி ] தேம பட இரு எல்லையும இரு இரவும முறை கழிப்பி—இனிமைபிறக்குமபடி இரண்டு பகலும இரண்டிரவும அறியாமல் வைத்து,

280 - 81 [வல்வாயச சாடியின வழைசசற விளைந்த, வெந்நீ ரரியல் விரலலை நறுமபிழி ]

வல வாய சாடியின வழைசசு அற விளைந்த—வலியவாயினையுடைய சாடியினகண்ணே இளமையறுமபடி முற்றின,

விரல் அலை அரியல் வெ நீர நறு பிழி—விரலாலே அலைத்து அரிக்குந்தன்மையையுடைத்தாகிய வெவவிய நீரமையையுடைய நறியகள்ளை,

282 தண மீன சூட்டொடு தளாதலும பெறுகுவிர—மிகவும உலராத மீனைசசுட்டதனோடே இளை தவளவிலே பெறுகுவிர,

ஆற்றி (276) அளைஇக (278) கழிப்பி (27?) விளைந்த (280) பிழியெனக குடிவயிற் சேப்பின (271) பிழி யப பெறுகுவிரெனமுடிகக

283 பசு ஊன பெய்த சுவல பிணி பைந்தோல—செவவியான இறைசசியிட்டுவைத்த தோளிடத்தே சேர்த்து நாற்றின பசியதோலினையுடைய,

என்றது தூண்டிலிற கோக்கும இரையிட்டுவைக்கும தோற்பையை

284 கோள வல பாண மகன மீனைத் தப்பாமறபிடிக்கவல்ல பாணசாதியிற்பிறந்தவன,

281 - 7 [தலைவலித் தியாத்த, நெடுங்கழைத் தூண்டி நடுங்க நாண கொளீஇக, கொடுவா யிருமபின மடிதலை புலமபப, பொதியிரை கதுவிய போழ்வாய் வாளை ]

நெடு கழை தலை வலித்து யாத்த நாண தூண்டில கொளீஇ பொதி இரை—நெடிய மூங்கிறகோலைத் தலையிலேவலித்துககட்டின கயிற்றிடத்தே தூண்டிலைக கொளுத்தி அதனை மறையப பொதிந்த இரையை

கொடு வாய இருமபின மடி தலை புலமப நடுங்க கதுவிய போழ வாய வாளை—வளைந்த வாயினையுடைய தூண்டிலினது மடிந்ததலை இரையினறித் தனிக்குமபடியாகக கயிறுநடுங்க அவவிரையைக கௌவி அகப்படாதுபோன அங்காந்தவாயையுடையவாளைமீன,

288 - 9 நீர நணி பிரமபின நடுங்கு நிழல வெரூஉம நீத்து உடை நெடு கயம—நீர்க்கு அணித்தாயநின்ற பிரமபினது காற்றாலசையுநிழலை நீரிற்கண்டஞ்சும பெருக்கினையுடைய நெடியகுளத்திலே,

289 - 90 தீ பட மலர்ந்த கடவுள ஒள பூ அடைதல ஓமபி—நெருப்பினதன்மை நீரிலே யுண்டாகப்பூத்த கடவுள்சூடுதற்குரிய ஒள்ளிய தாமரைப் பூவைப்பறித்துமுடித்தலைப் பரிகரித்து,

291 - 2. [உறைகான் மாறிய வோங்குயர் நனந்தலை, யகலிரு வானத் துக் குறைவில் லேய்ப்ப :]

ஓங்கு உறை கால் மாறிய உயர் அகல் இரு வானத்து குறைவில் ஏய்ப்ப— ஓங்குகின்ற துளி காலுதல்தவிர்ந்த உயர்ச்சியையுடைய அகன்ற பெரிய வானத்திடத்துக் குறைவில்லாகிய இந்திரவில்லையொப்ப,

293 - 4. [அரக்கிதழ்க் குவளையொடு நீல நீடி. முரட்பூ மலிந்த முதுநீர்ப் பொய்கை :] அரக்கு இதழ் குவளையொடு நீலம் நீடி முரண் பூ மலிந்த முதுநீர் நனை தலை (291) பொய்கை—சாதிலிங்கம்போன்ற இதழையுடைய குவளையோடே நீலப்பூவும்வளர்ந்து ஒன்றற்கொன்று நிறம் மாறுபடுதலையுடைய ஏனைப் பூக்களுமிக்க முதிய நீரையுடைத்தாகிய அகன்ற இடத்தையுடைய பொய்கைகளிடத்தே,

295 - 6. குறுநர் இட்ட கூம்பு விடு பல் மலர் பெரு நாள் அமயத்து பிணையினிர் கழிமின்—பறிப்பார் நுங்களுக்கிட்ட குவிதல்நெகிழ்ந்த பல்பூக்களைப் பெரிதாகிய நாட்காலத்தே சூடிப் போமின் ;

வாளை (287) வெரூஉம் (288) கயத்திலே மலர்ந்த (289) பூவை ஓம்பிக் (290) குறைவில்லேய்ப்பப் (292) பூமலிந்த பொய்கைகளிடத்தே (294) குறுநரிட்டமலரைப் (295) பிணையினிர்கழிமினென முடிக்க.

297. செழு கன்று யாத்த சிறு தாள் பந்தர்—வளவிய கன்றைக்கட்டின சிறியகால்களையுடைய பந்தரினையும்,

298. [பைஞ்சேறு மெழுகிய படிவ நன்னகர் :]

பைஞ்சேறு மெழுகிய நல் நகர்—ஆப்பியான் மெழுகிய நன்றாகிய அகங்களையும்,

படிவம்—தாம் வழிபடுந்தெய்வங்களையுமுடைய உறைபதி (301) யென்க.

299. மனை உறை கோழியொடு ஞமலி துன்னாது—மனைகளிலேதங்குங் கோழிகளுடனே நாயுஞ்சேராமல்,

300. வளை வாய் கிள்ளை மறை விளி பயிற்றும்—வளைந்தவாயினையுடைய கிளிக்கு வேதத்தின் ஓசையைக் கற்பிக்கும்.

301. மறை காப்பாளர் உறை பதி சேப்பின்—வேதத்தைக் காத்தற்றொழிலைச் செய்வார் இருக்கின்ற ஊரிடத்தே தங்குவீராயின்,

துன்னாமல் (299) உறையும்பதியென்க.

302. பெரு நல் வானத்து வடவயின் விளங்கும்—பெரிய நன்றாகிய விசும்பிடத்து வடதிசைக்கண்ணே நின்றுவிளங்கும்.

303. சிறுமீன் புரையும் கற்பின்—அருந்ததியையொக்குங் கற்பினையும்,

நறு நுதல்—நறிய நுதலினையுமுடைய,

304. வளை கை மகடூஉ வயின் அறிந்து அட்ட—வளையையுடையவாகிய கையையுடைய பார்ப்பினி பதமறிந்தட்டனவற்றை,

என்றது பாற்சோறு பருப்புச்சோறு முதலியவற்றை.

305. சுடர்க் கடை—ஞாயிறுபட்ட காலத்தே,
பறவை பெயர் படு வத்தம்—பறவையினது பெயரைப்பெறுநெல்லு, என்றது-இராசான்னமென்னும் பெயர்பெறுகின்ற நெல்லென்றவாறு. ஆகுதி பண்ணுதற்கு இந்நெல்லுச்சோறே சிறந்ததென்று இதனைக்கூறினார். இனி மின்மினி நெல்லென்பாருமுளர்; இப்பெயர் வழக்கின்மையும் ஆகுதிக்குச் சிறவாமையுமுணர்க.

306 - 8 [சேதா நறுமோர் வெண்ணெயின் மாதுளத், துருப்புறு பசுங்காய்ப் போழொடு கறிகலந்து, கஞ்சக நறுமுறி யளைஇ :] மாதுளத்து பசு காய் கறி கலந்து கஞ்சகம் நறு முறி அளைஇ சேதா நறு மோர் வெண்ணெயின் உருப்பு உறு போழொடு—கொம்மட்டிமாதுளையினுடைய பசியகாய் மிளகு பொடிகலக்கப்பட்டுக் கருவேம்பினது நறியஇலை அளாவப்பட்டுச் சிவந்தபசுவினது நறியமோரின்கணெடுத்த வெண்ணெயின்கண்ணேகிடந்து வேகலின் வெம்மையுறுகின்ற வகிரோடே,

308 - 10. [பைந்துணர். நெடுமரக் கொக்கி னறுவடி விதிர்த்த. தகைமாண் காடியின் :] நெடு மரம் கொக்கின் பைந்துணர் நறு வடி விதிர்த்த தகைமாண் காடியின்—நெடிய மரமாகிய மாவினது பசியகொத்திடத்து நறிய வடுவினைப் பலவாகப்போகட்ட அழகுமாட்சிமைப்பட்ட ஊறுகறியோடே.

310. வகைபட பெறுகுவிர்—சோற்றின்கூறுகளுண்டாகப் பெறுகுவிர்; சேப்பின் (301) மகடூஉ (304) வத்தத்தானுண்டான அரிசியை (305) அட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடியோடே பெறுகுவிரென்க.

311 - 2. வண்டல் ஆயமொடு உண்துறை தலைஇ புனல் ஆடும் மகளிர் இட்ட பொலங்குழை—விளையாட்டினையுடைய திரள்களோடே நீருண்ணுந்துறையிலேகூடி நீராடுகின்ற மகளிர் போகட்டுப்போன பொன்னாற்செய்த மகரக்குழையினை,

313. இரை தேர் மணிசிரல் இரை செத்து எறிந்தென—இரையைத் தேடுகின்ற நீலமணிபோலுஞ்சிச்சிலி தனக்கு இரையாகத்துணிந்தெடுத்ததாக,

314. புள் ஆர் பெண்ணை புலம்பு மடல் செல்லாது—பறவைகள் நிறைந்திருக்கின்ற பனையில் தனித்தமடலிற்போகாமல்,

315 - 6. கேள்வி அந்தணர் அரு கடன் இறுத்த வேள்வி தூணத்து அசைஇ—நூற்கேள்வியையுடைய அந்தணர் செய்தற்கரிய கடனைச் செய்துமுடித்த யாகசாலையிடத்துநட்ட யூபத்தின்மேலேயிருந்து.

316 - 7. [யவன, ரோதிம விளக்கி னுயர்மிசைக் கொண்ட :] யவனர் உயர்மிசை கொண்ட ஓதிம விளக்கின்—சோனகர் கூம்பின்மேலிட்ட அன்னவிளக்குப்போல,

ஈண்டுக் *காரன்னமென்றுணர்க.

---

* காரன்னம் இனஞ்சுட்டியபுள்ளென்பர்; (சீவக. 930 - உரை.)

318. வைகுறும் மீனின்—இராக்காலம் விடிதற்குக் காரணமான *வெள்ளியாகிய மீன்போல,

பையப் தோன்றும்—ஒளி விட்டுவிளங்காது தோன்றும்,

319. நீர்ப்பெயற்று எல்லை போகி—நீர்ப்பெயற்றென்னும் ஊரினெல்லையிலேபோய்,

அசைஇ விளக்கின் மீனிற்றோன்றும் நீர்ப்பெயற்றென்க.

319 - 21. பால் கேழ் வால் உளை புரவியொடு வடவளம் தரூஉம் நாவாய் சூழ்ந்த நளி நீர் படப்பை—பால்போலும் வெள்ளியநிறத்தினையும் வெள்ளிதாகிய தலையாட்டத்தினையுமுடைய மேற்றிசைக்கணுளவாகிய குதிரைகளுடனே வடதிசைக்கணுளவாகிய நுகரப்படும்பொருள்களைக் கொண்டுவந்துதரும் மரக்கலங்கள்சூழ்ந்துகிடக்கப்பட்ட பெருமையையுடைய கடற்பக்கத்தினையும்,

322 - 4. [மாட மோங்கிய மணன்மலி மறுகிற், பரதர் மலிந்த பல்வேறு தெருவிற், சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பின் :]

மணல் மலி மறுகின் சிலதர் காக்கும் சேண் உயர் வரைப்பின்—மணல்மிக்க தெருவுகளில் தொழில்செய்வார்காக்கப்படும் மிகவுமுயர்ந்த பண்டசாலைகளையும்,

தொழில்செய்வார் - கம்மகாரர்.

பரதர் மலிந்த மாடம் ஓங்கிய பல் வேறு தெருவின்—பரதவர்மிக்க மாடங்களுயர்ந்த பலவாய்வேறுபட்ட தெருக்களையும்,

325 - 7. நெல் உமு பகட்டொடு கறவை †துன்று மேழகம் தகரோடு எகினம் கொட்கும் கூழ் உடை நல் இல்—நெல்லினைப் பெறுதற்குஉழுகின்ற எருதுகளுடனே பசுக்கள்நெருங்காவாய் மேழகக்கிடாயோடே நாயும் சுழன்று திரியும் சோறுடைய நன்றான அகங்களையுமுடைய பட்டினம் (336).

இது திமிலர்முதலியோரிருப்புக்கூறிற்று.

327. [கொடும்பூண் மகளிர் :]

உயர் நிலை (332) வான் தோய் மாடத்து (333) கொடு பூண் மகளிர்—உயர்ந்தநிலைமையையுடைய தேவருலகத்தைத்தீண்டும் மாடத்துறையும் வளைந்த பேரணிகலங்களையுடைய மகளிர்,

328 - 9. கொன்றை மெல் சினை பனி தவழ்பவை போல் பைங்காழ் அல்குல் நுண் துகில் நுடங்க—கொன்றையிடத்து அரும்புகளையுடைய மெல்லிய கொம்புகளிலே பனிமாசுகிடந்து தவழ்கின்றவைபோலப் பசிய மணிகள்கோத்த வடங்களையுடைய அல்குலிற்கிடக்கின்ற மெல்லியதுகிலசைய.

330 - 31. மால் வரை சிலம்பின் மகிழ்சிறந்து ஆலும் பீலி மஞ்ஞையின் இயலி—பெருமையையுடைய பக்கமலையிலே மனவெழுச்சிமிக்கு ஆரவாரிக்கும் தோகையையுடையமயில்போலே உலாவி,

* வெள்ளிதாகிய மீனென்றும் பிரதிபேதமுண்டு.

† பி - ம். துன்று தேழகத் தகரோடு.

331 - 3. [கால, தமனியப் பொற்சிலம் பொலிப்ப வுயர்நிலை, வான்றோய் மாடத்து *வரிப்பந் தசைஇ:]

தமனியம் கால பொன் சிலம்பு ஒலிப்ப வரி பந்து அசைஇ—பொற்பூண் களையுடைய கால்களிடத்தனவாகிய பொன்னாற்செய்த சிலம்புகளாரவாரிப்ப நூலால்வரிந்தலையுடைய பந்தையடித்து இளைத்து,

334 - 5. [கைபுனை குறுந்தொடி தத்தப் பைபய, முத்த வார்மணற் பொற்கழங் காடும்:] முத்தம் வார் மணல் பைபய கை புனை குறு தொடி தத்த பொன் கழங்கு ஆடும்—முத்தையொத்த வார்ந்தமணலிலே மெத்தென மெத்தெனக் கையிற்புனைந்த குறுந்தொடியசையப் பொன்னாற்செய்த கழலைக்கொண்டு விளையாடும்,

மாடத்து (333) மகளிர் (327) நுடங்க (329) இயலி (331) ஒலிப்ப (332) அசைஇப் (333) பின்னர்க் கழங்காடும் (335) பட்டின (336) மென்க.

இது வணிகரிருப்பைக்கூறிற்று.

படப்பையினையும் (321) வரைப்பினையும் (324) தெருவினையும் (322) இல்லினையு (327) முடைய பட்டின (336) மென்க.

336. பட்டினமருங்கின் அசையின்—பட்டினத்திடத்தே இளைப்பாறுவீராயின்,

முட்டு இல்—முட்டில்லையாகப் பெறுகுவி (315) ரெனமேலே கூட்டுக.

337. †பைங்கொடி நுடங்கும் பலர் புகு வாயில்—பசியகொடிகளசையும் கள்ளுண்பார்பலரும் புகுகின்ற வாயிலிடத்து,

338. [செம்பூத் தூய செதுக்குடை முன்றில்:] தூய செ பூ ‡செதுக்கு உடை முன்றில்—தெய்வத்திற்குத்தூவின செய்யபூவாடலையுடைய முற்றத்தில்,

339 - 40. கள் அடு மகளிர் வள்ளம் நுடக்கிய வார்ந்து உகு சில் நீர் வழிந்த குழம்பின்—கள்ளைச்சமைக்கின்றமகளிர் வட்டில்கழுவின வடிந்துசிந்தின சிலநீர் பலகால்வடிதலின் நிறைந்துவழிந்த குழம்பிடத்து,

341 - 2. ஈர்ஞ்சேறு ஆடிய இரு பல் குட்டி பல் மயிர் பிணவொடு—ஈரத்தையுடைய சேற்றையளைந்த கரிய பலவாகிய குட்டிகளையுடைய பலவாகிய மயிர்களையுடைய பெண்பன்றிகளுடனே,

வாயிலிடத்து (337) முற்றத்துக் (338) குழம்பிடத்துச் (340) சேறு (341)

342. §பாயம் போகாது—புணர்ச்சியைக் கருதுங்கருத்தாற் போகாமல்.

* "வரிப்பந்துகொண்டோடி" (கலி. 51.)

† கள்விற்போர் கடைவாயிலிற் செம்பூச்சிதறிக் கொடிகட்டுதல், பட்டினப்பாலையின் 178 - ஆம் அடிமுதலியவற்றாலும், "கட்கொடி நுடங்கு மாவணம் புக்கு" (பதிற். 68) என்பதனாலும் அறியலாகும்; மதுரை. 372.

‡ "செதுகளுமணத்தர்" (தே. திருப்பூந்துருத்தி.)

§ பாயம் - மனத்திற்கு விருப்பமானதென்று பொருளெழுதுவர்; (குறு[illegible]. 58.)

என்றது புணரிற் கொழுப்பின்றாமென்றவாறு.

343. நெல் மா வல்சி தீற்றி—நெல்லையிடித்த மாவாகிய உணவைத் தின்னப்பண்ணி,

343 - 5. பல் நாள் குழி நிறுத்து ஓம்பிய குறு தாள் ஏற்றை கொழு நிணம் தடியொடு – பலநாள் குழியிலேநிறுத்திப் பாதுகாத்த குறியகாலையுடைய ஆண்பன்றியின் கொழுவிய நிணத்தையுடைய தசையோடே,

*“ஆற்றலொடு புணர்ந்த வாண்பால்” ஆதலின் ஏற்றையென்றார்.

345. கூர் நறா பெறுகுவிர்—களிப்புமிக்க கள்ளைப் பெறுகுவிர்;

போகாமற் (342) குழிநிறுத்து (344) என்க.

அசையிற் (336) பெறுகுவிரென்க.

346 - 8. [வான மூன்றிய மதலை போல, வேணி சாத்திய வேற்றருஞ் சென்னி, விண்பொர நிவந்த வேயா மாடத்து :]

வானம் ஊன்றிய மதலை போல விண் பொர நிவந்த மாடம்— ஆகாயத்தே திரிகின்ற தேவருலகுக்கு முட்டுக்காலாக ஊன்றிவைத்த ஒருபற்றுக்கோடு போல விண்ணைத்தீண்டும்படி ஓங்கினமாடம்,

சாத்திய ஏணி ஏற்று அரு சென்னி மாடம்—தன்னிடத்துச்சாத்திய ஏணியால் ஏறுதற்கரிய தலையினையுடையமாடம்,

வேயா மாடத்து—கற்றைமுதலியவற்றால் வேயாது சாந்திட்ட மாடத்திடத்தே.

349. இரவில் மாட்டிய இலங்கு சுடர்—இராக்காலத்தேகொளுத்தின விளங்குகின்ற விளக்கு.

349 - 51. [ஞெகிழி, யுரவுநீ ரழுவத் தோடு†கலங் கரையுந், துறை:] உரவு நீர் அழுவத்து ஞெகிழி ஓடு கலம் கரையும் துறை— உலாவுகின்ற கடற்பரப்பிலேவந்து நாம்சேரும் துறையன்றென்று நெகிழ்ந்து வேறொருதுறைக் கண் ஓடுங்கலங்களை இது நம்துறையென்று அழைக்குந் துறை.

இனி, ஞெகிழியைக் கடைக்கொள்ளியாக்கி அதனைஎரித்துக்கொளுத்தின இலங்குசுடரென்றுமுரைப்பர்.

351. பிறக்கு ஒழிய போகி— பின்னேகிடக்கப்போய்,

351 - 3. [கறையடிக், குன்றுறழ் யானை மருங்குல் லேய்க்கும், வண்டோட்டுத் தெங்கின் :]

குன்று உறழ் கறை அடி யானை மருங்குல் ஏய்க்கும் தெங்கின்—மலையோடு மாறுபடுகின்ற உரல்போன்ற அடியினையுடைய யானையினுடம்பையொக்கும் சருச்சரையையுடைத்தாகிய தெங்கினுடைய,

353. [வாடுமடல் வேய்ந்த :]

---

* தொல்காப்பியம், மரபியல், 49.

† கலங்கரைவிளக்கமென்னும்பெயர் ஈண்டு அறியற்பாலது.

வள் தோட்டு (353) வாடு மடல் வேய்ந்த—வளவிய இலையினையுடைய உலர்ந்த *பழுத்தலை முடைந்துவேய்ந்த தனிமனை (355) யெனக.

354. மஞ்சள் முன்றில்—மஞ்சளையுடைய முற்றத்தினையும், மணம் நாறு படப்பை—மணநாறுகின்ற பூந்தோட்டங்களையுமுடைய,

355. தண்டலை உழவர் தனி மனை சேப்பின—தோப்புக்குடிகளுடைய ஒப்பில்லாத மனைகளிலேதங்கின

356. [தாழ்கோட் பலவின் சூழ்சுளைப் பெரும்பழம்]

தாழ் கோள் பலவின் பழம்—தாழ்ந்த குலைகளையுடைய பலாவினதுபழம், சூழ் சுளை பெரு பழம்—இன்பார் விரும்பிச்சூழும் சுளையையுடைய பெரிய பழத்தையும்,

357. †வீழ் இல் தாழை ‡குழவி தீ நீர்—விழுதில்லாத தாழையாகிய தெங்கின் இளைதாய இனியநீரையும்,

§"பிள்ளை குழவி கன்றே போத்தெனக் கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே" என்றதனாற் குழவித்தீநீரென்றார்.

358 கவை முலை இரு பிடி கவுள் மருப்பு ஏய்க்கும்—கவைத்த முலையையுடைய பெரிய பிடியினுடைய கவுளிடத்துக் கொம்புகளையொக்கும்,

359 [குலைமுதிர் வாழைக் கூனி வெண்பழம்] குலை கூனி முதிர் வாழை வெள் பழம்—குலைகள் தம்பெருமையாலே நிலத்தே தாழவளைந்து முற்றின வாழையினது வெள்ளிய பழத்தையும்

360 - 61 திரள் அரை பெண்ணை நுங்கொடு பிறவும் தீ பல் தாரம் முனையின்—திரண்ட அடியையுடைய பனையினது நுங்கோடே வேறு இனிய பலபண்டங்களையும் வெறுக்கின்.

361 - 2. [சேம்பின் முளைப்புறம்] முளை புறம் சேம்பின—முளையை இடத்தேயுடைய சேம்பினது இலையோடே

362 முதிர் கிழங்கு ஆர்குவிர்—முற்றின வள்ளிமுதலிய கிழங்குகளைத் தின்பீர்,

சேப்பிற் (355) பழத்தையும் (356) நீரையும் (357) பழத்தையும் (359) நுங்கோடே (360) பலபண்டங்களையுமுனையிற் (361) கிழங்கார்குவிரெனக

362 - 4. பகல் பெயல் மழை வீழ்ந்தன்ன மா தாள் கமுகின் புடை சூழ் தெங்கின்—பகற்பொழுதிலே பெய்தலையுடைய மழை கால்வீழ்ந்தாலொத்த பெரிய தண்டினையுடைய கமுகுகளின் பக்கத்தேசூழ்ந்த தெங்கினுடைய,

---

* பழுத்தல் - பழுப்பு; கீழ்ந்து இதனால் முடையப்பட்டது கீற்று

† வீழில்தாழையென்பது தென்னைக்குவெளிப்படை, மற்றொன்று "வீழ் தாட் டாழை" (நற் 78) "வீழ்தாழ் தாழை யூழுறு கொழுமுகை" (குறு 228), "தாழை வீழ்கயிற்றூசல்" (அகநா 20) எனக் கூறப்படுதல்காண்க

‡ குழவித்தீநீர் - இளநீர்.

§ தொல்காப்பியம், மரபியல், 24.

364. முப்புடை இரள் காய் — மூன்றுபுடைப்பினையுடைய திரண்டகாய், பழுத்தால் அடி மூன்றாகப்புடைத்தல் அதற்கியல்பு. இனி முட்புடை திரள் காயும் பாடம்.

365 - 6. ஆறு செல் வம்பலர் காய் பசி தீர சோறு அடு குழிசி இளக விழூஉம் — வழிச்செல்கின்ற புதியோர் தமது மிக்கபசிதீரும்படி சோற்றை ஆக்குகின்றபானை அடுப்பினின்றும் அசைந்துவிழும்படி கிடந்தேவிழும்,

367. வீயா யாணர் வளம் கெழு பாக்கத்து — கெடாத புதுவருவாயினையுடைய செல்வம்பொருந்தின பாக்கத்திடத்து,

368. பல் மரம் நீள் இடை போகி — பலமரங்கள்வளர்ந்த இடத்திலேபோய்,

368 - 9. [நன்னகர், விண்டோய் மாடத்து விளங்குசுவ ருடுத்த] விளங்கு சுவர் உடுத்த விண் தோய் மாடத்து நல் நகர் — விளங்குகின்ற மதில் சூழ்ந்த விண்ணைத்தீண்டும் மாடங்களையுடைய நன்றாகிய ஊர்களிலே,

370 - 71. வாடா வள்ளியின் வளம் பல தரூஉம் நாடு பல கழிந்த பின்றை — வாடுங்கொடியினையுடைய வள்ளியல்லாத வள்ளிக்கூத்தின் வளப்பம்பலவற்றையுந் தருதற்குக்காரணமாகிய புறநாடுபலவற்றையும் போனபின்பு.

வளம்பலவென்றார், இக்கூத்து ஆண்பாற்கும்பெண்பாற்கும் பொதுவாய் வருதலின்.

என்றது-சிறப்புடையநாடுகளைப்பாடித் தாழ்ச்சிபெற்ற இழிகுலத்தோரறையும் புறநாடுகளைப் பாடாமல்தொகுக்கின்றார், அவைபுறநாடென்பதுதோனற அவர்கள் காண்டற்குரிய வள்ளிக்கூத்தினைக்கூறி அதனைவெளிப்படுத்தினா இது. புறத்திணையியலில் * "வெறியறிசிறப்பு" எனனுஞ்சூத்திரத்து. 'வாடாவள்ளி' என்பதனுலும. †" மண்டம ரட்ட மறவர் குழாத்திடை" என்னுமுதாரணத்தானும உணர்க.

371 - 2. நீடு குலை காந்தள் அம் சிலம்பில் களிறு படிந்தாங்கு — நீணட பூங்கொத்துக்களையுடைய காந்தளையுடைய அழகிய பக்கமலையிலே யானைகிடநதாற்போல.

373. பாம்பு அணை பள்ளி அமர்ந்தோன ஆங்கண் — பாம்பணையாகிய படுக்கையிலே துயில்கொண்டோனுடைய ‡திருவெஃகாவிடத்து.

காந்தளென்றதற்கேற்பப் பாம்பணையென மெலித்தார்.

374. [வெயினுழை பறியாக் குயினுழை பொதும்பர்:]

வெயில் நுழைபு அறியா பொதும்பர் — ஞாயிற்றின்கதிர் தோன்றியகாலத்தும் படுகின்றகாலத்துமுட்படச் சிறிதும் செல்லுதலறியாத பொதும்பர்,

---

* தொல்காப்பியம், புறத்திணையியல், 5.

† " மண்டம ரட்ட மறவர் குழாத்திடைக் - கண்ட முருகனுங் கண்களித்தான் - பண்டே - குறமகள் வள்ளிதன் கோலங்கொண் டாடப் - பிறமகளோ றற்றான் பெரிது."

‡ திருவெஃகாவென்பது திருமாலினுடைய நூற்றெட்டுத் திருப்பதியுளொன்று. இது காஞ்சிப்பதியிலுள்ளது.

குயில் நுழை பொதும்பர்—இலைநெருக்கத்தாலே குயில்கள் நுழைந்துசெல்லும் இளமரக்காவில்,

375-6. குறு கால் காஞ்சி சுற்றிய நெடு கொடி பசு இலை குருகின் புன் புறம் வரி பூ—குறிய காலினையுடைய காஞ்சிமரத்தைச்சூழ்ந்த நெடியகொடியினையும் பசிய இலையினையுமுடைய குருக்கத்தியினுடைய *புற்கென்றபுறத்தினையும் வரிகளையுமுடைய பூக்கள் உறைப்ப (379) வென்க.

377-8. கார் அகல் கூவியன் பாகொடு பிடித்த இழை சூழ் வட்டம் பால் கலந்தவை போல்—கரிதாகியசட்டியிலே அப்பவாணிகன் பாகுடனே வேண்டுவனகூட்டிச் சேர்க்கப்பட்ட நூல்போலச் சூழ்ந்துகிடக்கின்ற அப்பம் பாலிலே கிடந்தவைபோல,

சட்டியிலே கிடந்த அப்பம் பின்பு பாலிலேகிடந்தவைபோலவென்க.

பிடித்தவட்டமென்க.

379. நிழல் தாழ் வார் மணல் நீர்முகத்து உறைப்ப—நிறங்கிளர்கின்ற வார்ந்த மணலிடத்துக் குழிகளினின்றநீரிடத்தே மிகவிழும்படி,

உறைப்பவென்றதனைத் துளிப்பவென்றால் ஈண்டு ஒப்பன்மையான், உப்புறைப்ப என்றார்போலக்கொள்க.

380. புனல் கால் கழீஇய பொழில் தொறும்—நீர் பெருகியகாலத்தே ஏறிய இடத்தைத் தூய்தாக்கிப்போன பொழில்கடோறும்,

என்பதனால், முன்பு நீர்வினைறுபோகலிற் பூத்தவென்றார்.

380-82. திரள் கால் சோலை கமுகின் சூல் வயிறு அன்ன நீலம் பைங் குடம் தொலைச்சி—திரண்ட தண்டினையுடைய சோலையிடத்துநிற்குங் கமுகினுடைய சூர்கொண்ட வயிற்றையொத்த பச்சைக்குப்பிகளை உண்டு போக்கி,

382-3. நாளும் பெரு மகிழ் இருக்கை மரீஇ நாடோறும் பெரிய மகிழ்ச்சியையுடைய இருப்பைமருவி,

383-4. சிறு கோடு குழவி திங்கள் கோள் நேர்ந்தாங்கு—சிறிய கோட்டையுடைய †இளைதாகிய பிறையைச் செம்பாம்பு தீண்டினாற்போல,

இஃது இல்பொருளுவமை.

385. சுறவுவாய் அமைத்த சுரும்பு சூழ் சுடர் நுதல் ‡மகரவாயாகிய தலைக்கோலத்தைச் சேர்த்தின சுரும்புகள்சூழும் ஒளியையுடைய நுதலினையும்,

386. நறவு பெயர்த்து அமைத்த நல் எழில் மழை கண் கள்ளினை உண்டுபொருந்திய நன்றாகிய அழகினையுடைய குளிர்ச்சியையுடைத்தாகிய கண்ணினையுமுடைய,

---

* புற்கென்ற - அழகில்லாத; (சீவக. 2823.)

† இளைதாகிய - இளையதாகிய; "இளைதாக முண்மரங் கொல்க" (திருக்குறள், 879.)

‡ "மகரப் பகுவாய் தாழமண் ணுறுத்து" (முருகு. 25.)

வள்ளத்தினறவைத் தம்முள்ளே ஆக்கினமையிற் பெயர்த்தென்றார்.

387. *மடவரல் மகளிரொடு பகல் விளையாடி—மடப்பம் தோற்றுதலையுடைய மகளிரோடே பகற்பொழுது விளையாடி,

388 - 9. பெறற்கு அரு தொல் சீர் துறக்கம் ஏய்க்கும் பொய்யா மரபின் பூ மலி பெரு துறை—பெறுதற்கரிய பழைமையையுடைத்தாகிய புகழினையுடைய துறக்கத்தையொக்கும் தப்பாமல் நீர்வருமுறைமையினையுடைய பூ மிகுகின்ற பெரிய துறையிடத்தே,

துறை, நுகர்பொருள்குறைவின்மையின், துறக்கமேய்க்குமென்றார்.

390. செவ்வி கொள்பவரோடு அசைஇ—இளவேனிற்செவ்வியை நுகர்வாரோடு இளைப்பாறி,

390 - 91. அவ்வயின் அரு திறல் கடவுள் வாழ்த்தி—அத்திருவெஃகாவணையில் அரியதிறலினையுடைய திருமாலைவாழ்த்தி,

391 - 2. [சிறிதுநடங், கருங்கோட் டின்னிய மியக்கினிர் கழிமின்:] நும் கரு கோடு இன் இயம் சிறிது இயக்கினிர் கழிமின்—நும்முடைய கரிய தண்டினையுடைய இனியயாழைச் சிறிதுவாசித்து அவ்விடத்துநின்றும் போமின்;

ஆங்கட் (373) பொதும்பர்க் (374) குருகின்பூ (376) உறைப்பக் (379) கழீஇயபொழிறொறும் (380) மகளிரோடேபகல்விளையாடிப் (387) பெருந்துறைச் (388) செவ்விகொள்பவரோடசைஇ (390) நீலப்பைங்குடந் தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள்வாழ்த்தி (391) இயக்கினிர்கழிமினெனமுடிக்க.

393 - 6. [காழோ ரிகழ்பத நோக்கிக் கீழ, நெடுங்கை யானை நெய்ம்மிதி கவளங், கடுஞ்சூன் மந்தி கவருங் காவிற், களிறுகத னடக்கிய வெளிறில் கந்தின்:]

†வெளிறு இல் கந்தின் கதன் அடக்கிய களிறு கீழ நெடு கை யானை * * * களுந்தின்கின்ற:

நெய் மிதி கவளம்—நெய்யைவார்த்து மிதித்த கவளங்களை,

‡கடு சூல் மந்தி காழோர் இகழ் பதம் நோக்கி கவரும் காவின்—முற்பட்ட சூலையுடைய மந்தி பரிக்கோலையுடையோர் நெகிழ்ந்தசெவ்வியைப்பார்த்து எடுத்துக்கொண்டுபோய்த்தின்னும் சோலையினையும்,

397. திண் தேர் குழித்த குண்டு நெடு தெருவின் திண்ணியதேர்கள் பலகால் ஓடிக்குழித்த தாழ்ச்சியையுடைய நெடியதெருவினையும்,

* "மடவரல்வள்ளியொடு" (முருகு. 102); மடவரலென்பதற்கு மடப்பமென்று பொருள்கூறுவாருமுண்டு; (புறநா. 89.)

† இந்தப்பாகத்துக்கு எந்தப்பிரதிகளிலும் உரைகிடைத்திலது. வயிரமுள்ளகந்தினுற் கோபத்தையடக்கிய ஆண்யானைகளும், கீழேதாழ்ந்த நெடிய கையையுடைய பெண்யானைகளுந்தின்கின்றவென்க.

‡ "கடுஞ்சூன் மகளே" (ஐங்குறு. 386.)

398 - 400. [படை தொலை பறியா மைந்துமலி பெரும்புகழ்க், கடை கால் யாத்த பல்குடி கெழீஇக், கொடையுங் கோளும்:]

தொலைவு அறியா மைந்து மலி பெரு புகழ் படை—கெடுதலறியாத வலி மிகுகின்ற பெரிய புகழினையுடைய படையினையும்,

*கொடையும் கோளும் கெழீஇ கால் யாத்த பல் குடி கடை—பண்டங் களை விற்றலும் கொள்ளலும்பொருந்தி அவ்விடத்து நெருங்கின பலகுடிகளை யுடைய கடையினையுமுடைய மூதூர் (411.)

400 - 401. †வழங்குநர் தடுக்க அடையா வாயில்—உலகத்துக் கொடுப் பாரைக் கொடாமல் தடுத்த பரிசிலர்க்கு அடையாத வாசலினையும்,

இவன் கொடைப்பெருமையாற் பிறர் தவிர்ந்தாரென்றார்.

401. மிளை சூழ் படப்பை—காவற்காடுசூழ்ந்த பக்கத்தினையும்.

402 - 4. [நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ் நான்முக வொருவற் பயந்த பல்விதழ்த், தாமரைப் பொகுட்டிற் காண்வரத் தோன்றி:] நான்முக ஒருவன் பயந்த நீல் நிற உருவின் நெடியோன் கொப்பூழ் பல் இதழ் தாமரை பொகுட்டின் காண் வர தோன்றி—நான்குமுகத்தையுடைய ஒருவனைப்பெற்ற நீலநிறத்தையுடைத்தாகிய வடிவினையுடைய திருமாலுடைய திருவுந்தியாகிய பலஇதழையுடைய தாமரையினது கொட்டைபோலே அழகுவிளங்கத்தோன்றி,

இதனாற் ‡பழமையும் சிறப்பும் தூய்மையுங் கூறினார்.

405. §சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின்—செங்கலாற்செய்யப்பட்டு உயர்ந்த புறப்படைவீட்டைச்சூழ்ந்த மதிலினையும்,

406 - 7. [இழுமென் புள்ளி னீண்டுகிளைத் தொழுதிக், கொழுமென் சினைய கோளியுள்ளும்:] கொழு மெல் சினைய இழுமென் புள்ளின் ஈண்டு கிளை தொழுதி கோளியுள்ளும்—கொழுவிய மெல்லிய கொம்புகளிடத்தனவாகிய இழு மென்னும் ஓசையையுடைய பறவையினுடைய சேருகின்ற சுற்றத்திரட்சியை யுடைய பூவாமற் காய்க்கு மரங்களில் விசேடித்தும்.

408. பழம் மீ கூறும் பலா போல—பழத்தின் இனிமையால் மேலா கச்சொல்லும் பலாமரத்தையொக்க,

409 - 10. புலவு கடல் உடுத்த வானம் சூடிய மலர் தலை உலகத்துள் ளும்—புலால்நாற்றத்தையுடைய கடல்சூழ்ந்த ||ஆகாயங்கவிந்த அகன்ற இடத் தையுடைய உலகத்து நகரில் விசேடித்தும்,

---

* "கொள்வதூஉ மிகைகொளாது கொடுப்பதூஉங் குறைபடாது" (பட். 210.)

† இதன் பொருள்நயம்பாராட்டத்தக்கது.

‡ பெருமையுமென்றும் பிரதிபேதமுண்டு.

§ "சுடுமணோங்கியநெடுநிலைமனை" (மணி. 3. 127.)

|| "வான்கவிந்த வையகமெல்லாம்" (நாலடி. பொறை. 10.)

410 - 11. *பலர் தொழு விழவு மேம்பட்ட பழ விறல் மூதூர்—பலரும் தொழும்படி எடுத்த விழாக்களாலே விசேடிக்கின்ற பழைய வெற்றியினையுடைய பழைய ஊராகிய,

412 - 3. அ வாய் வளர் பிறை சூடி செ வானத்து அந்தி வாய் ஆடும் மழை கடுப்ப—அழகிய இடத்தையுடைய வளரும்பிறையைத் தன்மேலேசூடிச் செக்கர்வானமாகிய அந்திக்காலத்தே உலாவுகின்ற மேகத்தையொப்ப,

கொம்பும் யானையும் குருதியும் உவமிக்கப்படும்பொருள்.

414 - 7. [வெண்கோட் டிரும்பிணங் குருதி யீர்ப்ப, வீரைம் பதின் மரும் பொருதுகளத் தவியப், பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர், ஆராச செருவினைவர் போல :]

வெள் கோடு இரு பிணம் குருதி ஈர்ப்ப பொருது—வெள்ளிய கொம்பினையுடைய கரியயானைப்பிணத்தைக் குருதியாகிய ஆறு இழுத்துக்கொண்டுபோம் பொருது,

ஈரைம்பதின்மரும் களத்து அவிய பெரு அமர் கடந்த ஐவர் போல—துரியோதனன் முதலிய நூற்றுவரும் களத்திலே படும்படி பெரியபோரைவென்ற தருமன் முதலியோரைப்போல,

கொடுஞ்சி நெடு தேர் ஆரா செருவின் ஐவர்—முன்னே தாமரை முகையினையுடைய நெடியதேரினையும் தொலையாத போரினையுமுடைய ஐவர்,

418. அடங்கா தானையோடு உடன்று மேல் வந்த—ஓரெண்ணின்கண் அடங்காத படையுடனே கோபித்துத் தன்மேல்வந்த,

419. ஒன்னா தெவ்வர் உலைவிடத்து ஆர்த்து—தன்னைவிலைப் பொருந்தாத பகைவர் தோற்றவிடத்தே வெற்றிக்களிப்புத்தோன்ற ஆரவாரித்து,

420 - 21. [கச்சி யோனே கைவண் டோன்றல், நச்சிச் சென்றோர்க் கேம மாகிய·] கை வள் தோன்றல் நச்சி சென்றோர்க்கு ஏமம் ஆகிய கச்சியோனே—கைவளப்பத்தையுடைய தலைவன் தன்பாரிசிலைவிரும்பித் தன்பாற் சென்றோர்க்குப் பாதுகாவலாகிய காஞ்சிபுரத்தேயிருக்கின்றோன்,

படப்பையினையும (401) காவினையும் (395) வரைப்பினையும் (405) அடையாவாயிலினையும் (401) தெருவினையும் (397) கடையினையும் (399) படையினையு (398) முடைய மூதூர் (411) என்க.

காண்வரத்தோன்றிப் (404) பலாஅப்போல (408) விழவுமேம்பட்ட (411) மூதூரென்க.

கைவண்டோன்றல் (420) ஐவர்போலக் (417) குருதியீர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்து (419) ஏமமாகிய (421) மூதூராகிய (411) கச்சியிடத்தேயிருக்கின்றோனென்க.

* பலசமயதெய்வங்களுக்கும் காஞ்சி இடமாகஇருத்தலின், பழவிறன்பதற்குப் பலசமயத்தாரொன்று பொருள் செய்தனர்; "பதிவெண் கச்சி குமரர்மால் புறத்தோர் பலரும்வீற் றிருப்பவப் பதியே" (கந்த. ககா. 90.)

422 - 3. [அளியுந் தெறலு மெளிய வாகலின், மலைந்தோர் தேஎ மன்றம் பாழ்பட :]

மலைந்தோர் தேஎம் மன்றம் பாழ்பட தெறலும்—தன்னுடனே பொருதார் தேயத்திலுள்ளாரின் மன்றுகள் மக்களின்றாய்ப் பாழாம்படி அழித்தலும்,

424. [நயந்தோர் தேஎ நன்பொன் பூப்ப :] நயந்தோர் தேஎம் நன்பொன் பூப்ப அளியும் (422)—தன்னை விரும்பியிருந்தோர் தேயம் திருமடந்தை பொலிவுபெற்றிருப்ப அளித்தலும்,

422. எளிய ஆகலின்—தனக்கு எளியவாய் நடக்கையினாலே,

425. நட்பு கொளல் வேண்டி நயந்திசினோரும்—மலையலாகாதென்று உறவுகொள்ளுதலைவேண்டி அவன்றாளை விரும்பினவர்களும்,

426. துப்பு கொளல் வேண்டிய துணையிலோரும்—அவன் பகையைத் தெறும் வலியைத் தமக்குப்பெறவேண்டின வேறோர் உதவியில்லாதவர்களுமாய்,

427. கல் வீழ் அருவி கடல் படர்ந்தாங்கு—மலையினின்றும்விழுகின்ற அருவி அம்மலையிலுள்ளபண்டங்களை வாங்கிக்கொண்டு கடலுக்குக்கொடுப்பதாகச் சென்றாற் போல,

428. பல் வேறு வகையின் பணிந்த மன்னர்—பலவாகிய வேறுபட்ட திறைகளின் கூறுபாட்டோடே சென்று வணங்கின அரசர்,

429 - 31. [இமையவ ருறையுஞ் சிமையச் செவ்வரை, வெண்டிரை கிழித்த விளங்குசுடர் நெடுங்கோட்டுப், பொன்கொழிக் திழிதரும் போக்கருங் கங்கை :]

இமையவர் உறையும் சிமையம் செ வரை விளங்கு சுடர் நெடு கோடு—தேவர்களிருக்கும் உச்சியையுடைய சிவந்த மேருவினது விளங்குகின்ற ஒளியையுடைய நெடிய சிகரத்தினின்றும்,

பொன் கொழித்து இழிதரும் போக்கு அரு கங்கை—பொன்னைக்கொழித்துக் குதிக்கும் மாக்கட்குக் கடத்தலரிதாகிய கங்கையாகிய ஆற்றிலே,

வெண் திரை கிழித்த கங்கை—நடலிடத்து வெள்ளியதிரையைக் கிழித்துச்சென்ற கங்கை,

432. பெரு நீர் போகும் இரியல் மாக்கள்—பெரிய நீரைக்கடந்துபோம் கெடுதலையுடையமாக்கள்,

கெடுபட்டுப்போவார் ஒருவர்க்குமுன்னே ஒருவர் விரைந்துபோதலைக் கருதுவர்.

433. ஒருமரம் பாணியில் தூங்கியாங்கு—விடுகின்ற தோணியாலையினாலே அது வருங்காலம் பார்த்திருந்து தூங்கினாற்போல,

434 - 5. தொய்யா வெறுக்கையொடு துவன்றுபு குழீஇ செவ்வி பார்க்கும் செழு நகர் முற்றத்து—கெடாத யானைமுதலிய செல்வங்களோடே நெருங்கா நின்று திரண்டு அலம்பார்த்திருக்கும் வளவிய நகரின்முற்றத்தினையுடைய வியனகர் (440),

எளியவாகலின் (422), நயந்திசினோரும் (425) துணையிலோருமாய்ப் (426) பணிந்தமன்னர் (428) தூங்கியாங்குச் (433) செவ்விபார்க்குமுற்றமெனக.

436 - 7. பெருங்கை யானை கொடு தொடி படுக்கும் கருங்கை கொல்லன் — பெரிய கையினையுடைய யானைக்கு வளைந்துகிடக்கும் பூணைச்சேர்க்கும் வலிய கையினையுடைய கொல்லன்,

437 - 8. இரும்பு விசைத்து எறிந்த கூடம் திண் இசை வெரீஇ—இரும்பைக் கையை உரத்துக்கொட்டின கூடத்தெழுந்த திண்ணியவோசையை வெருவி,

438 - 10 [மாடத், திறையுறை புறவின் செங்காற் சேவ. லின்றுயி லிரியும் பொன்றுஞ்சு வியனகர் :]

மாடத்து புறவின் செ கால் சேவல் இன் துயில் இரியும் நகர்—மாடத்திடத்துப் புறவினுடைய சிவந்த காலையுடையசேவல் இனிய துயிலை நீங்குநகர்;

இறை உறை நகர்—இறைவனிருக்கு நகர்,

பொன் துஞ்சு வியல் நகர்—திருத்தங்குகின்ற அகலத்தையுடைய கோயிற் கண்ணே இருந்தோன் (447)

441 - 2. குணகடல் வரைப்பில் முந்நீர் நாப்பண் பகல் செய் மண்டிலம் பாரித்தாங்கு—கீழ்கடலாகிய எல்லையிடத்து நிலத்தைப் படைத்தலும் காத்தலும் அழித்தலுமாகிய மூன்றுதொழிலையுடைய நீர்க்குநடுவே *பகற்பொழுதைச் செய்யுஞாயிறு தன்கிரணங்களைப்பரப்பித் தோன்றினாற்போல,

443 - 50. [முறைவேண்டு நர்க்குங் குறைவேண்டு நர்க்கும், வேண்டுப வேண்டுப வேண்டினர்க் கருளி, யிடைத்தெரிந் துணரு மிருடீர் காட்சிக், கொடைக்கட னிறுத்த கூம்பாவுள்ளத், துரும்பில் சுற்றமோ டிருந்தோற் குறுகிப். பொறிவரிப் புகர்முகந் தாக்கிய வயமான், கொடுவரிக் குருளை கொளவேட் டாங்குப். புலவர் பூண்கட னாற்றி :]

இடை தெரிந்து உணரும் இருள் தீர் காட்சி—நடுவுநிலையை ஆராய்ந்தறியும் மயக்கந்தீர்ந்த அறிவாலே,

†முறை வேண்டுநர்க்கும் குறை வேண்டுநர்க்கும் வேண்டுப வேண்டுப அருளி—முறைப்பாட்டைவிரும்புவார்க்கும் காரியங்களைவிரும்புவார்க்கும் அவரவர் விரும்புவனவற்றை விரும்புவனவற்றை அருளிச்செய்து.

புலவர் பூண் கடன் ஆற்றி—புலவர்க்குப் பேரணிகலங்களையும் கொடுத்தற்குரிய பிறகலங்களையுங் கொடுத்து,

வேண்டினர்க்கு கொடை கடன் இறுத்த கூம்பா உள்ளத்து உரும்பு இல் சுற்றமோடு இருந்தோன் குறுகி—வேண்டிவந்த பரிசிலர்க்குக் கொடையாகிய கடனை முடித்த குவியாத நெஞ்சத்தோடே கொடுமையில்லாத ‡மந்திரச்சுற்றத்தோடே இருந்தோனையணுகி,

---

* "பகற்செய்யுஞ்செஞ்ஞாயிறும்" (மதுரை. 7.)

† முறைவேண்டுநர் - வறியரால் நலிவெய்தினோர்; குறைவேண்டுநர் - வறுமையுற்றிரந்தார்; 386 - ஆம் திருக்குறளுரையைப்பார்க்க.

‡ "மந்திரச் சுற்றத்தாரும்" (கம்ப. கும்ப. 5.)

ஞாயிறுபோல இருளைக்கடிந்து முறைவேண்டுநர்க்கும் குறைவேண்டுநர்க்கும் வேண்டுவன வேண்டுவன முடித்துக்கொடுத்தலின், அதனை உவமித்தார்.

கடலைச் சுற்றத்திரட்சிக்கு உவமையாக்கலுமொன்று.

*பொறி வரி புகர்முகம் தாக்கிய வயமான் கொடுவரி குருளை கொள வேட்டாங்கு—ஒளியினையும் வரியினையுமுடைய யானையைப்பாய்ந்த வலியையுடைய சிங்கத்தினுடைய வளைந்தவரியினையுடைய குருளை அவ்வியானையின் மத்தகத்தைக் கொள்ளவிரும்பினாற்போல,

450 - 52. பகைவர் கடி மதில் எறிந்து குடுமி கொள்ளும் வென்றி அல்லது—பகைவரது காவலையுடைய மதில்களையழித்து ஆண்டிருந்த அரசருடைய முடிக்கலமுதலியவற்றை வாங்கிக்கொண்டு வீரமுடிபுனையும் வெற்றியினை விரும்புதலல்லது,

இதனால் †"இகன்மதிற் குடுமி கொண்ட மண்ணுமங்கலம்" என்னுந் துறை கூறினார்; ‡குடுமிகொள்ளும் வென்றியெனவே மண்ணுமங்கலமாயிற்று

452 - 4 வினை உடம்படினும் ஒன்றல் செல்லா உரவு வாள் தட கை கொண்டி உண்டி தொண்டையோர் மருக—அம்மதிலரசர் §சந்துசெய்தற்கு உடம்பட்டாராயினும் அதற்கு மனம்பொருந்துதல் நிகழாமைக்குக்காரணமாகிய உலகெங்கும்பரக்கும் வாளையுடைத்தாகிய பெருமையையுடைய கையினையும் பகைப்புலத்துக் கொள்ளையாகிய உணவினையுமுடைய தொண்டையைச்சூடினோருடைய குடியிலுள்ளவனே,

455. மள்ளர் மள்ள—வீரர்க்கு வீரத்தைக்கொடுக்கின்றவனே,

மறவர் மறவ—கொடியோர்க்குக் கொடியவனே.

456. செல்வர் செல்வ—செல்வமுடையோர்க்குங் கொடுத்தலைவிரும்புபவனே,

செரு மேம்படுந—போர்த்தொழிலிலே மிக்கவனே.

பெரும (461)—பெருமானே,

457 - 8. வெள் திரை பரப்பில் கடு சூர் கொன்ற பைம்பூண் சேஎய் பயந்த மாமோடு—வெள்ளிய திரையினையுடைய கடலிலேசென்று கடியசூரனைக்கொன்ற பசிய பூணினையுடைய முருகனைப்பெற்ற பெருமையையுடைய வயிற்றினையும்,

459. துணங்கை அம் செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு—பேய்களாடுந் ||துணங்கைக்கூத்தினையும் அழகினையுமுடைய இறைவிக்குப பேய்மகள் சில நொடிசொன்னாற்போல,

* பொறி - ஒளி; (புறநா. 161)
† "தொல்லிலங்கை குடுமிகொண்டு" (கூர்ம. சவேத. 5.)
‡ "குடுமிகொள்ளு மண்ணுமங்கலம்" (கூர்ம 27 - 5.)
§ சந்துசெய்தல் - பொருத்துதல்.
|| துணங்கை: (முந்த. 56.)

மாட்டிய துணை புணர் தொழில் மால் கடல் வளை கண்டன்ன *வால் உளை புரவி நால்கு உடன் பூட்டி—குதிரைநூல்கற்றோர்புகழ்ந்த அழகினையுடையவாய்த் தனித்துத்தொழில்செய்யாமல் இனங்களோடேகூடும் தொழிலையுடையவாய்க் கருமையையுடையகடலிற் சங்கைக்கண்டாற்போன்ற வெள்ளிய †கழுத்தின் மயிரையுடைய குதிரைகள்நான்கைச் சேரப்பூட்டி.

நான்கு நால்எனப்பெயர்த்திரிசொல்.

490. அரி தேர் நல்கியும் அமையான்—பொன்னாற்செய்த தேரைத்தந்தும் கொடைமேல் விருப்பந்தவிரானாய்,

490 - 92. செரு தொலைத்து ஒன்னா தெவ்வர் உலைவிடத்து ஒழித்த விசும்பு செல் இவுளியொடு பசு படை தரீஇ—தம்முடன்வந்து பொருதோருடைய போர்களை மாளப்பண்ணித் தன்னோவலைப்பொருந்தாத பகைவர்முதுகிட்டவிடத்து விட்டுப்போன ஆகாயத்தேசெல்கின்ற குதிரைகளுடனே பசிய பொன்னாற்செய்த ‡பக்கரைகளையுந்தந்து,

493. [அன்றே விடுக்குமவன் பரிசில்:] அவன் அன்றே பரிசில் விடுகுகும்—அவன் நீசென்ற அற்றைநாளே இவையொழிந்த பரிசில்களையுந்தரும்;

493 - 4. இன் சீர் கின்னரம் முரலும் அணங்குடை சாரல்—இனியதாளத்திலே கின்னரமென்னும் பறவைகள்பாடுந் தெய்வங்களையுடைய சாரலிடத்து,

495. மஞ்ஞை ஆலும் மரம் பயில் இறும்பின்—மயில்களாரவாரிக்கு மரம்நெருங்கின இளமரக்காட்டினையுமுடைய,

496. கலை பாய்ந்து உதிர்த்த மலர் வீழ் புறவின்—முசுக்கலைகள்பாய்ந்து உதிர்த்த மலர்கள்சிந்தின காட்டினையும்,

497. மந்தி சீக்கும் மா துஞ்சும் முன்றில்—மந்திகள் அவ்விடத்துக் கிடந்த §துராலைவாரும் மானும்புலியுந் துயில்கொள்ளும் முற்றத்தே,

புறவினையும் (496) இறும்பினையு (495) முடைய சாரலிடத்து (494) முன்றிலிலே (497) வேட்கு (499) மென்க.

498. செந்தீ பேணிய முனிவர்—சிவந்ததீயைக் கைவிடாமற்காத்துப் போந்த இருடிகள்,

498 - 9. வெள் கோடு களிறு தரு விறகின் வேட்கும்—வெள்ளிய கொம்பினையுடைய களிறு முறித்துக்கொண்டுவந்த சமிதையாலே வேள்வியைச்செய்யும்.

மந்தி சீத்தலும், மாத் துஞ்சலும், களிறு விறகுதருதலும் இருடிகளாணையால் நிகழ்ந்தனவென்றுணர்க.

500. [ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே:]

ஒளிறு மலை—இவற்றால்விளங்குமலை.

இலங்கு அருவிய மலை—விளங்குகின்ற அருவிகளையுடையமலை.

மலை கிழவோன்—இச் சிறந்த மலையையாளும் உரிமையையுடையோன்.

---

* பொருந. 165.

† கழுத்தின்மயிர் தலைபாட்டமெனவும்வழங்கும்.

‡ பக்கரை - சேணம்.

§ துரால் - செத்தை.

புலவுவாய்ப்பாண (22), பெருவளனெய்தி (26) முகந்துகொண்டு (27) யாம் அவனூரினின்றும் வருகின்றேம் ; நீயிரும் (28) இரையற்படர்குவிராயின் (37) நின்னுள்ளஞ்சிறக்க (45) ; நின்னவலங்கெடுக (38) ; இரவல (45). அவனிலைகேள் (38) ; அவன்புலம் கொடியோரின்று (41) ; அதுவேயன்றி அப் புலத்தில் உருமுமுரறாது ; அரவுந் தப்பா (42) ; மாவும் உறுகண்செய்யா ஆகலின், ஆங்கு (43) அசைவுழி அசைஇத் தங்கிச் (44) சென்மோ (45) ; அங்ஙனஞ்செல்லுங்கால் வில்லுடைவைப்பிற் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்ட புழுக்கலையும் வாடூனையும் (100) எல்லிடைக்கழியுநர்க்கு எமமாகத் (66) தேக்கிலையிலேகுவிக்கையினாலே (104) அப்பதத்தைப் (105) பெருமகனாகிய (101) வரைநாடன் சென்னியமெனிற் (103) கடும்போடே மிகப்பெறுகுவிர் (105) ; பின்னர் அருஞ்சுரமிறந்த அம்பர்க் (117) குறும்பிற் சேப்பின் (129) சொன்றியை (131) வறைகால்யாத்ததுவயின்றொறும்பெறுகுவிர் (133) ; பின்னர்த் தூங்கா (146) முரண்டலை (117) யிருக்கை (146) கழிந்தபின்றைக் (147) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும்பெறுகுவிர் (168) ; பின்னர்ப் பறவையோர்க்கும் (183) புலத்தைபபோய்ச் (184) சீறூர் களிலே (191) வரகின் சொன்றியைப் (193) புழுக்கையட்டி (195) மூரலோடேபெறுகுவிர் (196) ; பின்னர் ஞாங்கர் (196) வன்புலமிறந்தபின்றை (206) மல்லற்பேரூர்மடியின் (254) வல்சியை (255) வாட்டொடும் பெறுகுவிர் (256) ; பின்னர்க் கருப்பின்றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின் (262) ; பின்னர் வலைஞர் குடிவயிற் சேப்பின் (274) பிழியைச் (281) சூட்டொடும் பெறுகுவிர் (282) ; பின்னர்த் தீப்பட மலர்ந்த (289) பூவையோம்பிக் (290) குறுநரிட்டமலரைப் (295) பிணையினிர் கழிமின் (296) ; பின்னர் மறைகாப்பாளர் உறைபதிச்சேப்பின் (301) வத்தத்தாலுண்டான அரிசியை (305) விளக்கைமசடூஉ வயினறிந்தட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடியோடே பெறுகுவிர் (310) ; பின்னர் நீர்ப்பெயற்றெல்லை போகிப் (319) பட்டினமருங்கி னசையின், மூட்டுப்பாடின்றாகக் (336) கொழுமீன்சூட்டொடு கூர்நறாப்பெறுகுவிர் (345) ; பின்னர்த் துறைபிறக்கொழியப்போகி (351) தனிமனைச்சேப்பின் (355), ஆண்டைத் தீம்பஃறாரமுனையிற் சேம்பிலையோடே (361) முதிர்கிழங்கார்குவிர் (362) ; இவற்றை இவ்வழியின்கண்ணே பெற்றுப் பின்னர்ப் பன்மரநீளிடைப்போய் (368) நாடுபலகழிந்தபின்றைப் (371) பள்ளியமர்ந்தோன் ஆங்கட் (373) பொழிறொறும் (380) ஆடி (387) அசைஇத் (390) தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள்வாழ்த்தி (391) இயக்கினிர் கழிமின் (392) ; இங்ஙனஞ்சென்று கைவண்டோன்றல் (420) இப்பொழுது ஐவர்போலக் (417) குருதியீர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்துப் (419) பகைமேற் செல்லுதலின்றி நச்சிச்சென்றோர்க்கு ஏமமாகிய (421) படப்பை முதலியவற்றையுடைய (401) விழவு பேம்பட்ட மூதூராகிய (411) கச்சியிடத்தே யிருந்தோன் (420) ; அவ்வூரிற் பணிந்த மன்னர் (428) செவ்வியார்த்தும் முற்றத்தினையுடைய (435) பொன்றுஞ்சு வியனகர்க்கண்ணே (440) பகல்செய் மண்டிலம் பாரித்தாங்கு (442) மிக்ககாட்சியாலே (445) அருளிப்

மாட்டிய துனை புணர் தொழில மால் கடல் விளை கண்டன்ன *வால் உளை புரவி நால்கு உடன் பூட்டி—குதிரைநூல்கற்றோர்புகழ்ந்த அழகினையுடையவாய்த் தனித்துத்தொழில்செய்யாமல் இனங்களோடேகூடுந் தொழிலையுடையவாய்க் கருமையையுடையகடலிற் சங்கைக்கண்டாற்போன்ற வெள்ளிய †கழுத்தின் மயிரையுடைய குதிரைகள்நான்கைச் சேரப்பூட்டி.

நான்கு நால்கெனப்பெயர்த்திரிசொல்.

490. அரி தேர் நல்கியும் அமையான்—பொன்னாற்செய்த தேரைத்தந் தும் கொடை மேல் விருப்பந்தவிரானாய்,

490 - 92. செரு தொலைத்து ஒன்னா தெவ்வர் உலைவிடத்து ஒழித்த விசும்பு செல் இவுளியொடு பசு படை தரீஇ—தாமுடன்வந்து பொருதோருடைய போர்களை மாளப்பண்ணித் தன்னைவலைப்பொருந்தாத பகைவர்முதுகிட்டவிடத்து விட்டுப்போன ஆகாயத்தேசெல்கின்ற குதிரைகளுடனே பசிய பொன்னாற்செய்த ‡பக்கரைகளையுந்தந்து,

493. [அன்றே விடுக்குமவன் பரிசில் :] அவன் அன்றே பரிசில் விடுக்கும்—அவன் நீசென்ற அற்றைநாளே இவையொழிந்த பரிசில்களையுந்தரும் ;

493 - 4. இன் சீர் கின்னரம் முரலும் அணங்குடை சாரல்—இனியதாளத்திலே கின்னரமென்னும் பறவைகள்பாடுந் தெய்வங்களையுடைய சாரலிடத்து,

495. மஞ்ஞை ஆலும் மரம பயில் இறும்பின்—மயில்களாரவாரிக்கும் மரம்நெருங்கின இளமரக்காட்டினையுமுடைய,

496. கலை பாய்ந்து உதிர்தத மலர் ஆழ் புறவின்—முசுக்கலைகள்பாய்ந்து உதிர்த்த மலர்கள்சிந்தின காட்டினையும்,

497. மந்தி சீக்கும் மா துஞ்சும் முன்றில்—மந்திகள் அவ்விடத்துக் கிடந்த §துாலைவாரும் மானும்புலியுந் துயில்கொள்ளும் முற்றத்தே,

புறவினையும் (496) இறும்பினையு (495) முடைய சாரலிடத்து (494) முன்றிலிலே (497) வேட்கு (499) மென்க.

498. செ தீ பேணிய முனிவர்—சிவந்ததீயைக் கைவிடாமற்காத்துப் போந்த இருடிகள்,

498 - 9. வெள் கோடு களிறு தரு விறகின் வேட்கும்— வெள்ளிய கொம்பினையுடைய களிறு முறித்துக்கொண்டுவந்த சமிதையாலே வேள்வியைச்செய்யும்.

மந்தி சீத்தலும், மாத் துஞ்சலும், களிறு விறகுதருதலும் இருடிகளாணையால் நிகழ்ந்தனவென்றுணர்க.

500. [ஒளிறிலங் கருவிய மலைகிழ வோனே :]

ஒளிறு மலை—இவற்றால்விளங்குமலை.

இலங்கு அருவிய மலை —விளங்குகின்ற அருவிகளையுடையமலை.

மலை கிழவோன்—இச சிறந்த மலையையாளும் உரிமையையுடையோன்.

---

* பொருந. 165. ‡ பக்கரை - சேணம்.

† கழுத்தின்மயிர் தலையாட்டமெனவும்வழங்கும். § துால் - செத்தை.

புலவுவாய்ப்பாண (22), பெருவளனெய்தி (26) முகந்துகொண்டு (27) யாம் அவனூரினின்றும் வருகின்றேம்; நீயிரும் (28) இரையற்படர்குவிராயின் (37) நின்னுள்ளஞ்சிறக்க (45); நின்னவலங்கெடுக (38); இரவல (45). அவனிலைகேள் (38); அவன்புலம் கொடியோரின்று (41); அதுவேயன்றி அப் புலத்தில் உருமுமுரறாது; அரவுந் தப்பா (42); மாவும் உறுகண்செய்யா ஆகலின், ஆங்கு (43) அசைவுழி அசைஇத் தங்கிச் (44) சென்மோ (45); அங்ஙனஞ்செல்லுங்கால் வில்லுடைவைப்பிற் (82) குரம்பையில் (88) எயிற்றியர் (94) தாங்களட்ட புழுக்கலையும் வாடேனையும் (100) எல்லிடைக்கழியுநர்க்கு எமமாகத் (66) தேக்கிலையிலேகுவிக்கையினாலே (101) அப்பதத்தைப் (105) பெருமகனாகிய (101) வரைநாடன் சென்னியமெனிற் (103) கடும்போடே மிகப்பெறுகுவிர் (105); பின்னர் அருஞ்சுரமிறந்த அம்பர்க் (117) குறும்பிற் சேப்பின் (129) சொன்றியை (131) வறைகால்யாத்ததுவயின்றொறும்பெறுகுவிர் (133); பின்னர்த் தூங்கா (146) முரண்டலை (117) யிருக்கை (146) கழிந்தபின்றைக் (147) குடிவயிற்சேப்பின் (166) மூரல் பாலொடும்பெறுகுவிர் (168); பின்னர்ப் பறவையோர்க்கும் (183) புலத்தைபபோய்ச் (184) சீறூர் களிலே (191) வரகின் சொன்றியைப் (193) புழுக்கையட்டி (195) மூரலோடேபெறுகுவிர் (196); பின்னர் ஞாங்கர் (196) வன்புலமிறந்தபின்றை (206) மல்லற்பேரூர்மடியின் (254) வல்சியை (255) வாட்டொடும் பெறுகுவிர் (256); பின்னர்க் கரும்பின்றீஞ்சாறு விரும்பினிர் மிசைமின் (262); பின்னர் வலைஞர் குடிவயிற் சேப்பின் (274) பிழியைச (281) சூட்டொடும் பெறுகுவிர் (282); பின்னர்த் தீப்பட மலர்ந்த (283) பூவையோம்பிச் (290) குறுநரிட்டமலரைப் (295) பிணையினிர் கழிமின் (296); பின்னர் மறைகாப்பாளர் உறைபதிச்சேப்பின் (301) வத்தத்தாலுண்டான அரிசியை (305) விளக்கைமசடூஉ வயினறிந் தட்டனவற்றைச் (304) சுடர்க்கடையிலே (305) போழோடே (307) காடியோடே பெறுகுவிர் (310); பின்னர் நீர்ப்பெயற்றெல்லை போகிப் (319) பட்டினமருங்கி னசையின், முட்டுப்பாடின்றாகக் (336) கொழுமீன்சூட்டொடு கூர்நறாப்பெறுகுவிர் (345); பின்னர்த் துறைபிறக்கொழியப்போகி (351) தனிமனைச்சேப்பின் (355), ஆண்டைத் தீம்பழப்பலாமுனையிற் சேம்பிலையோடே (361) முதிர்கிழங்கார்குவிர் (362); இவற்றை இவ்வழியின் கண்ணே பெற்றுப் பின்னர்ப் பன்மரநீளிடைப்போய் (368) நாடுபலகழிந்தபின்றைப் (371) பள்ளியமர்ந்தோன் ஆங்கட் (373) பொழிறொறும் (380) ஆடி (387) அசைஇத் (390) தொலைச்சி (382) மரீஇக் (383) கடவுள்வாழ்த்தி (391) இயக்கினிர் [illegible]றிமின் (392); இங்ஙனஞ்சென்று கைவண்டோன்றல் (420) இப்பொழுது [illegible]போலக் (417) குருதியீர்ப்பப் (414) பொருது (415) ஆர்த்துப் (419) கைமேற் செல்லுதலின்றி நச்சிச்சென்றோர்க்கு எமமாகிய (421) படப்பை முதலியவற்றையுடைய (401) விழவு மேம்பட்ட மூதூராகிய (411) கச்சி -த்தே யிருந்தோன் (420); அவ்வூரிற் பணிந்த மன்னர் (428) செவ்விபார்க் முற்றத்திணையுடைய (435) பொன்றுஞ்சு வியனகர்க்கண்ணே (440) நல்செய் மண்டிலம் பாரித்தாங்கு (442) மிக்ககாட்சியாலே (445) அருளிப்

(444) பூண்கடனாற்றிக் (450) கடனிறுத்த உள்ளத்தோடே (446) சுற்றத் தோடேயிருக்தோரைக் குறுகித் (447) தொண்டையோர் மருகனே (454), மன்னனே, மறவனே (455), செல்வனே, செருமேம்படுநனே (456), பெருமானே (461), செல்விக்கு அணங்கு நொடித்தாங்கு (459) நின் பெயருட்சில வற்றைச் சொல்லிப் புகழ்ந்து (460) வந்தேன்; வாழியவெனச்சொல்லிக் (461) கழிப்பிப் (462) பழிச்சி (463) நின்னுடைய கலைகளெல்லாந் தனக்குத்தெரிவதற்கு முன்னே (464) மலைகிழவோன் (500) நில்லாவுலகத்துநிலைமை தூக்கி (466) அந்நிலையணுகல் வேண்டி அழைத்துச் (467) சிதார்வைநீக்கி (468) உடீஇ (470) அமுதோடே (475) குறையும் (472) புழுக்கலும் (474) பிறவுமாகிய (475) அடிசிலைக் (476) கலங்களைப் பரப்பித் (477) தான் (479) முகனமர்ந்து மகமுறைநோக்கி (478) முன்னின்றூட்டி (479) விறலியர் மாலை வேயாநிற்க (486) நுமக்குத் தாமரை (481) பொலியச்சூட்டி (482) அரித்தேர் நல்கியும் அமையானாய் (490) இவுளியொடு பசும்படைதரீஇ (492) அவன் அன்றே (493) அந்நிலையிலே (164) நாவலந்தண்பொழில் வீவின்றுவிளங்கும் படி (465) இவையொழிந்த பரிசில்களையும் தரு (493) மெனவினைமுடிவு செய்க.

இப்பாட்டில் ஒருமைபன்மை மயக்கம், "முன்னிலை சுட்டிய வொருமைக் கிளவி * * * போற்றல் வேண்டும்" (தொல். எச்ச. 66.) என்பதனாற்கொள்க.

தொண்டைமானிளந்திரையனைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் பாடிய பெரும்பாணாற்றுப்படைக்கு மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்தவுரை முற்றிற்று.

வெண்பா.

கங்குலு நண்பகலுந் துஞ்சா வியல்பிற்றாய்
மங்குல்சூழ் மாக்கட லார்ப்பதூஉம்—வெஞ்சினவேற்
கான்பயந்த கண்ணிக் கடுமான் றிரையனை
யான்பயந்தே னென்னுஞ் செருக்கு.